
# சுரதாவின் தேன்மழை



கவிஞர் சுரதா

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

சுரதாவின்

# தேன்மழை

கவிஞர் சுரதா


அருள்-சுடர் ப்திப்பகம்
3, கடம்பாடி அம்மன் கோயில் தெரு,
வளசரவாக்கம், சென்னை - 600 087.

சுரதாவின் தேன்மழை
கவிஞர் சுரதா ©
முதல் பதிப்பு : ஜனவரி – 1965
ஐந்தாம் பதிப்பு : டிசம்பர் – 1991
ஆறாம் பதிப்பு : டிசம்பர் – 2000

விலை ரூ. 75.

அச்சிட்டோர் : சேதூர் அச்சகம், சென்னை – 5.

# என் குரல்



நான் எப்போதும் எழுதுவதில்லை; எப்போதாவது எழுதக் கூடியவன்.

அதிகமாக எழுதவேண்டும் என்பதைவிட பயனுள்ளதாக சில எழுதினாலே சிறந்தது என்று கருதுபவன்.

எனது இருபதுக்கும் மேற்பட்ட நூல்களிலே, தமிழகஅரசின் சிறந்த நூலுக்கான பரிசினையும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்

கழகத்தின் 'இராசராசன் விருதினையும்' பெற்றுத்தந்த 'தேன்மழை' என்னும் இந்நூல் எனக்கு பெரும்புகழ் சேர்த்த புத்தகம்.

ஐந்து பதிப்புகளைக்கண்ட இந்நூல் ஆறாவது பதிப்பாக இப்போது வெளியாகிறது.

திருவாசகத்திற்கு சிறந்ததொரு உரையெழுதியும், பாவேந்தர் படைப்புக்களை முழுமையாகத் தொகுத்து வெளியிட்டும் பெரும் புகழ் பெற்ற கவிஞர் ஆ. திருவாசகன் அவர்கள், தனது அருள் சுடர் பதிப்பகத்தின் மூலமாக இதை வெளியிடுவது எனக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது.

மிகச் சிறப்பான முறையில் புத்தகத்தை வெளியிட்டிருக்கும் அவரை பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை - 600 078.
25-12-2000.

அன்புடன்

சுரதா

# பதிப்புரை

இதுவரை தோன்றிய தமிழ்க் கவிஞர்களுள் எண்ணற்ற சிறப்பைப் பெற்றவர் உவமைப் பாவலர் சுரதா அவர்கள். உலகக் கவிஞர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்க ஒப்பற்ற பாவலர். இன்றைய எழுச்சிக் கவிஞர்கள் பலரும் சுரதா என்னும் சூரியனிலிருந்து ஒளிபெற்ற நிலவுகள்தாம் என்றால் மிகையில்லை.

புதுக்கவிதைச் செறிவுகளை மரபுப்பாடல்களிலே தந்த மாபெரும் புலவர். காட்சிக்கு எளியரெனினும் அவரது கவிதைச் சிகரத்தை யாரும் எட்டிப் பிடித்துவிட முடியாது.

பாவேந்தருடைய தலைமாணாக்கராய்த் திகழும் கவிஞர் பெருமான் முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் தமிழ்க் கவிதைப் பாலம் அமைத்த கவிதைப் பொறியாளர்.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இராசராசன் விருது, தமிழக அரசின் சிறந்த நூலுக்கான விருது (தேன்மழை) போன்ற பல்வேறு விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டதாலே சிறப்புப் பெற்றன.

தமிழ்ச் சர்க்கரைப் பந்தலில் பெய்த தேன்மாரியை (தேன்மழையை) எமது அருள்-சுடர் பதிப்பகம் ஆறாவது பதிப்பாக வெளியிடுவதிலே மிகவும் இன்பம் கொள்கிறது.

பல தமிழ்க் கவிஞர்கள் சொற்சுவைக்கவிஞர் சுரதா அவர்களின் பாட்டுத் துறைமுகத்திலேதான் ('துறைமுகம்' - என்பதும் அவரது கவிதைத் தொகுப்புத்தான்) கரையேறுகிறார்கள்.

வள்ளலார், பாரதியார், பாவேந்தர் வரிசையிலே தமிழை எளிமைப்படுத்தி வலிமையூட்டிய உவமைச் சுரங்கம் நமது சுரதா அவர்கள்.

திரைப்பட வசன வானத்திலும் இந்தக் கதிரவன் தனது பொற்கிரணங்களை இளமையில் தவழவிட்டு அத்துறையையும் ஒளிமயமாக்கியது.

அருமைக் கவிஞர் சுரதா ஆயிரம் பிறை கண்ட ஆண்டு இந்த ஆண்டு! இவ்வேளையில் அவரது 'தேன்மழையை' வெளியிட்டு அவரது திருவடிகளில் காணிக்கையாக்குவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறோம் என்பதைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தாழ்பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வரிய நூலை வெளியிட பல்லாற்றானும் உதவிய உவமைப்பாவலர் சுரதா அவர்களின் மைந்தனார் கவிஞர் திரு. சுரதா கல்லாடன் அவர்களுக்கும் உயரிய வகையில் அச்சியற்றித்தந்த சேகர் அச்சகத்தாருக்கும் என்றென்றும் நன்றி.

அன்புடன்

**ஆ. திருவாசகன்**
அருள்-சுடர் பதிப்பகம்


இயற்கை
எழில்

உள்ளே. . .


நெய்தல் நீர்

முகில்

காடு

முல்லை

மயில்

இளவேனில்

குயில்

நிலா

பூம்புகார்

போலி உடும்பு

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | **இயற்கை எழில்** | | |
| | நெய்தல் நீர் | ... | 13 |
| | முகில் | ... | 17 |
| | காடு | ... | 19 |
| | முல்லை | ... | 22 |
| | மயில் | ... | 24 |
| | இளவேனில் | ... | 27 |
| | குயில் | ... | 29 |
| | நிலா | ... | 30 |
| | பூம்புகார் | ... | 33 |
| | போலி உடுப்பு | ... | 36 |
| 2. | **வரலாற்று வாயில்** | | |
| | தரை மீன் | ... | 43 |
| | இணை மோனை | ... | 47 |
| | ஆற்றுப் படை | ... | 53 |
| | சமணன் சாதித்தான் | ... | 57 |
| | மாடத்திலும் கூடத்திலும் | ... | 61 |
| | சித்தூர் சாம்பல் | ... | 65 |
| | காதல் மேகம் | ... | 69 |
| | நல்ல தீர்ப்பு | ... | 73 |
| | குமணன் | ... | 77 |
| | தலைமலைத் தேவன் | ... | 81 |
| 3. | **சொல் விளக்கம்** | | |
| | கலப்பை | ... | 87 |
| | பாம்பு | ... | 90 |
| | அம்மி | ... | 93 |

4. காரணப் பெயர்கள்

பிள்ளைப் பாண்டியன் ... 99
அசோகன் ... 102
அகலியை ... 105

5. மங்கையர் பூங்கா

என் கடமை ... 111
மணக்க மாட்டேன் ... 113
பஞ்சம் ... 115
பேய்மழை உண்டா? ... 116

6. குறுங்காவியம்

வன்னிய வீரன் ... 121

7. அகத்துறை

பாவையைப் பார்த்தீரோ ? ... 143
இருட்டுக்குச் சேலை தந்தாள் ... 145
கண் சிவந்ததேன்? ... 147
கொய்யாக் கனி ... 151
விருந்து ... 152
அணங்கு கொல் ! ... 153
சொல்லாதே ... 154
நாடகப் பத்தினி ... 155

8. நெய்த செய்திகள்

கரந்தைக் கவியரசு ... 161
அடிகளார் பேச்சு ... 163
புயநானூறு ... 165
சங்கிலித் திருடன் ... 167
கன்னியும் தென்னையும் ... 171

9. காவியக் கடிதங்கள்

நெப்போலியன் நினைக்கின்றான் ... 175
படைவேண்டும் ... 180
வாழைப்பூ வேதாந்தம் ... 184

10. விழாத விழாக்கள்

| | | |
|---|---|---|
| பொங்கல் | ... | 197 |
| நெருப்பு நாடகம் | ... | 198 |
| விழாத விழாக்கள் | ... | 200 |

11. எப்போதும் இருப்பவர்கள்

| | | |
|---|---|---|
| சீதக்காதி | ... | 205 |
| உமறுப் புலவர் | ... | 206 |
| வேதநாயகம் பிள்ளை | ... | 207 |
| உ. வே. சாமிநாதையர் | ... | 208 |
| பாஸ்கர சேதுபதி | ... | 210 |
| பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் | ... | 211 |
| பாண்டித்துரைத் தேவர் | ... | 213 |
| ஞானியார் அடிகள் | ... | 214 |
| மறைமலையடிகள் | ... | 216 |
| பாரதியார் | ... | 218 |
| திரு. வி. க. | ... | 220 |
| பாரதிதாசன் | ... | 222 |

12. துன்பத் துறைமுகம்

| | | |
|---|---|---|
| துன்பத் துறைமுகம் | ... | 227 |
| நெருப்பில் நின்றவன் | ... | 228 |
| கண்ணீர் | ... | 229 |
| அந்தோ கவிமணி | ... | 231 |

13. இசை விருந்து

| | | |
|---|---|---|
| தித்திக்கும் தமிழிலே | ... | 235 |
| பூவிரியும் சோலை | ... | 236 |
| பாவிலே சிறந்தது | ... | 237 |
| தமிழ்க் கவிஞன் | ... | 238 |
| தங்க மயிலாடும் தமிழ்நாடு | ... | 239 |
| மழையிருந்தால் | ... | 240 |

14. மொழிச் செல்வம்

| | | |
|---|---|---|
| என் குரல் | ... | 243 |
| தலைமை தாங்கும் தமிழ் | ... | 244 |
| நெஞ்சில் நிறுத்துங்கள் | ... | 245 |
| வெற்றிக்கு வழி | ... | 247 |
| தமிழில் பெயரிடுங்கள் | ... | 249 |

15. தேன் துளிகள்

| | | |
|---|---|---|
| தாய் நாடே ! | ... | 253 |
| முதல் மொழி | ... | 255 |
| தரணி தூற்றும் | ... | 256 |
| இப்படிக்கு | ... | 257 |
| எச்சில் | ... | 259 |
| மேலாடை | ... | 260 |
| கவ்வி செழித்தால் | ... | 261 |
| இன்பம் | ... | 262 |

16. ஆராய்ச்சி

| | | |
|---|---|---|
| தளரா வளர் தெங்கு | ... | 265 |
| திரு வில் | ... | 266 |
| நிலாமுகம் | ... | 268 |
| ஐம்பால் | ... | 271 |
| ஆராய்ச்சி மணி | ... | 272 |

# நெய்தல் நீர்

தமிழ்மொழிக் குதவும் செல்வம்
　　தானாக வளர்தல் போலும்
கமழ்நறு மணத்தைப் பூக்கள்
　　கருவிலே பெற்றாற் போலும்
இமிழ்கடல் வயிற்றின் வெள்ளம்
　　இயற்கையாய்ப் பெருகும். வானின்
அமிழ்தமாம் மழைநீர்க் கெல்லாம்
　　அடிப்படை கடல்நீர் அன்றோ?

அலைவளர் கடலே ஆழம்
　　அலைகளே அதன்கைத் தாளம்
கலம்பகக் கடலின் செல்வம்
　　கைவிரல் தொகைபோல் ஐந்தே
மலைபடு பொருள்கள் யாவும்
　　மலர்போன்று மணத்தை வீசும்
ஒலிகடல் வழங்கும் செல்வம்
　　ஓங்கிய ஒளியை வீசும்!

ஆதிநீ ரான முந்நீர்
    அச்சத்தைக் கொடுக்கும் தண்ணீர்.
பாதிநீர் காற்றை மோதும்
    பாதிநீர் கரையை மோதும்
சீதநீர்த் துளிகள் எல்லாம்
    சிறியகண் ணாடி மீதில்
ஊதிடும் ஆவி போன்று
    மறைந்திடும் உலர்ந்த மண்ணில்.

விண்வெளி இவ்வை யத்தின்
    விரிகுடை; புவியில் வாழும்
பெண்களின் கண்கள் இட்ட
    பிச்சையே கடலின் நீலம்.
பண்கடல் உண்டே யன்றிப்
    பாற்கடல் இருந்த தில்லை.
உண்டெனில் கதையி லன்றி
    உலகினில் காட்டு வார்யார்?

விரிகடல் வழங்கும் முத்தே
    மேகமும் வழங்கும் முத்தே
திரைநுரை நீரின் நோயே
    சிறுநிலாத் தழும்பும் நோயே
கருங்கடல் உடலும் உப்பே
    காதலர் உறவும் உப்பே
விரிந்தநீர் நெய்தல் நீரே
    விரிகடல் பெயர்முந் நீரே!

*அணிமணிக் கடலின் காட்சி*
*அரும்பொருட் காட்சி யாகும்.*
*துணையொடு கப்பல் நிற்கும்*
*துறைமுகம், சுற்றம் சூழ*
*மணவறை மீது தோன்றும்*
*மங்கையைப் போன்ற தாகும்.*
*கணவனை இழந்த பெண்ணும்*
*கலமற்ற கடலும் ஒன்றே!*

*அலையோசை சிறந்த ஓசை*
*ஆதலின்; அதனை யன்றிப்*
*புலியோசை பூனை யோசைப்*
*போர்க்களம் வழங்கும் ஓசை*
*எலியோசை இவற்றை யெல்லாம்*
*யாப்புநூல் ஏற்க வில்லை.*
*கலையாத கடல்நீர் ஓசை*
*கலிப்பாவின் ஓசை யன்றோ?*

*உரையிடை யிட்ட செய்யுள்*
*ஓவியச் சிலம்பு தந்தோன்*
*நரைதிரை வாரா முன்பே*
*நாட்டிலோர் துறவி யானான்.*
*விரிகடல் பிறந்த போதே*
*வெண்நரை பெற்றி ருந்தும்*
*கருநிற உடையை மாற்றிக்*
*காவியேன் கட்ட வில்லை?*

கிளம்பிற்றுக் கப்பல், வீரர்
　　கிளம்பினர்; அவர்க ளோடே
இளம்பெரு வழுதி சென்றான்.
　　என்னானான்? உலகின் வீரம்
அளந்தவன் கடலுள் மாய்ந்தான்!
　　அனைவரும் வெறுங்கூ டானார்
விளம்பரக் கடலின் கோபம்
　　விட்டதோ முச்சங் கத்தை!

பொடிமணல் உலகைச் சூழ்ந்த
　　போர்க்கடல்; மாந்தர் தம்மை
வடிந்திடா நீரி னாலே
　　வஞ்சிக்கும்; அதுபோல் வண்ணக்
கொடிநமை வஞ்சிக் காது
　　கொல்லாதென் றறிந்தும்; நாமோ
கொடியினை யன்றோ வஞ்சிக்
　　கொடியென்று கூறு கின்றோம்!

# முகில்

*(கானல் வரி சந்தம்)*

*கடலுடல் தொடுபவளே*
*கருவொடு வருபவளே*
*நெடுமலை துயில்பவளே*
*நிதிதரு மலைமகளே*
*இடையிடை யிடியுடனே*
*இருள்நிற எழிலுடனே*
*கொடுவெயில் துயர்கெடவே*
*குளிரொடு வந்தனையே!*

*குணகடல் படிந்தொழும்நீ*
*கழல்நிறம் பெறவிலையேல்*
*அணிமயில் அகவிடுமோ*
*அதுபுது நடமிடுமோ*
*மணிமலர் நகைதருமோ*
*மதுகரம் இசைதருமோ*
*தணல்தரை குளிர்ந்திடுமோ*
*தமிழ்நிலம் சீர்பெறுமோ?*

விரல்நிகர் அரும்பதுவோ
விரிந்தது நெருப்பெனவே
கருவிளை மலர்ந்ததுவே
கருநிற விழியெனவே
ஒருமகள் இடையெனவே
ஒருகொடி யசைந்ததுவே
உருள்நடை ரதமெனவே
உயர்மரம் பூத்ததுவே!

அழகுவில் வளைந்தனையே
அவனிடங் கணையிலையே
முழுமழை பொழிமுகிலே
முதலிதை மறந்தனையே
தழுவிய நிலையதனால்
தனியுடை நழுவியதோ
இழிநிலை இதுவலவோ
இருள்நிற வான்முகிலே!

எழுவதுன் செயலலவோ
விழுவதுன் துளியலவோ
பொழிவதுன் செயலலவோ
புனைவதென் தொழிலலவோ
அழகிய சுழிகுளமே
அதன்புனல் மழைவளமே
உழவரின் அருந்தனமே
உனக்கொரு வந்தனமே!

# காடு

(கிளிக்கண்ணி)

கார்த்திகை தீபமெனக்
காடெலாம் பூத்திருக்கும்
பார்த்திட வேண்டுமடீ-கிளியே
பார்வை குளிருமடீ!

காடு பொருள்கொடுக்கும்
காய்கனி ஈன்றெடுக்கும்
கூடிக் களித்திடவே-கிளியே
குளிர்ந்த நிழல்கொடுக்கும்.

குரங்கு குடியிருக்கும்
கொம்பில் கனிபறிக்கும்
மரங்கள் வெயில்மறைக்கும்-கிளியே
வழியில் தடையிருக்கும்.

மாவும் பழுத்திருக்கும்
மலரும் விழித்திருக்கும்
பூவின் மதுசுரக்கும்-கிளியே
போவா ரடிவழுக்கும்!

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும்-கிளியே
நரியெலாம் ஊளையிடும்.

கல்லுரல் போன்றமுகம்
காட்டிடும் பன்றிகளை
மெல்லிய மான்தடுக்கும்-கிளியே
வேங்கைகள் வால்நிமிர்க்கும்.

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ-கிளியே
பூங்குயில் கூவுமடீ!

காட்டின் சிறுநெருப்பு
காந்தள் மலர்ச்சிரிப்பாம்!
நாட்டின் பெருநெருப்பு-கிளியே
நம்பிக்கை மோசமடி!

இலைகள் உதிர்ந்தமரம்
ஏந்தும் கிளைகளெல்லாம்
வலைநிழல் போன்றிருக்கும்-கிளியே
வறுமை நிலைகுறிக்கும்.

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடி-கிளியே
இயற்கை விடுதியிலே!

# முல்லை

(வண்ணம்)

தான தந்தனனா-தன
தான தந்தனனா-தன
    தான தந்தன
    தான தந்தன
    தான தந்தன தந்தன தான
    தானான தானதன தானனா

மாலை அந்தியிலே-மலை
வாழும் தென்றலிலே-தெரு
    வாசல் முல்லையின்
    வாசல் வந்ததும்
    ஆசை கொண்டன வண்டுகள் யாவும்
    ஆவேச மாகமலர் ஊதவே.

தேனும் பொங்கியதே-வெயில்
தீபம் தொங்கியதே-மது
தேடி நல்லிசை
பாடி வண்டுகள்
கூடி உண்டன கொண்டன காதல்
கோடானு கோடிமுறை ஊடியே.

பூனை யின்சிறுவாய்-நகை
போலும் மெல்லரும்பாம்-மலர்
போதில் வந்தொரு
சோதி சுந்தர
மாது கொய்தனள் செய்தனள் மாலை
மாறாத காதலிசை பாடியே.

# மயில்

அகவும் மயிலே! அகவும் மயிலே!
கால மறிந்து கருமுகில் மழைதர
இளமணல் பரவிய எழில்மிகு காடெலாம்
முல்லை அரும்புகள் மெல்ல நகைக்கச்
சிவந்த பவளம் சிதறினாற் போன்று
தம்பலப் பூச்சிகள் தரைமீது தவழ
கைவிரல் போன்ற காந்தள் அரும்பெலாம்
நிமிர்ந்துநின் றெரியும் நெருப்பென மலரக்
கருநிற வண்டுகள் காந்தாரம் பாடிட
ஆடிக் களிக்கும் அழகிய மயிலே!

உன்விழி நீலம்; உன்தோகை நீளம்;
உன்னுடல் மரகதம்; உச்சிக் கொண்டையோ
கண்ணைக் கவர்ந்திடும் காயா மலர்கள்!

ஆடும் பறவைநின் அடிகள் இரண்டும்
ஈர நொச்சியின் இலைகளே யாகும்!

மழைக்குரல் நின்குரல்; மலையே நின்மனை;
செந்தமிழ் போன்று சிறந்த பறவைநீ!

அன்றுநீ மணிமலை அருகிலே நின்று
மணித்தேர் அசைந்து வருமொலி கேட்டுக்
கழுத்தை உயர்த்தும் கலைமான் போன்றுநீ
உன்றன் கழுத்தை ஓங்கி உயர்த்தியும்
அண்ணாந்த மலையை அண்ணாந்து நோக்கியும்
இட்டசிற் றடியை எடுத்தெடுத் தூன்றியும்
வண்ணத் தோகையை வட்டமாய் விரித்தே
'ஓ' வெனும் எழுத்தை உண்டாக்கிக் காட்டினை
கண்டேன் களித்தேன் மீண்டும் காண்கிறேன்!

நீட்டுயர் மேடையில் நாட்டிய மாடிக்
காட்டும் பறவையே! கலவை மயிலே!
தொங்கும் தோகையில் தொலைநிலை காண்கிறேன்.
வண்ணத் தோகையில் வகைநிலை காண்கிறேன்.
விரிக்கும் தோகையில் விரிநிலை காண்கிறேன்.

குறிஞ்சியே புணர்ச்சிக் குரிய திணையாம்
காதல் புரியவோ கார்காலம் சிறந்ததாம்
என்று தமிழர் இலக்கணம் வகுத்தனர்.
வகுத்த தமிழரின் வாழ்க்கை மாறினும்
மயிலேநின் வாழ்க்கை மாறவே இல்லை!

அணிலின் சிறியவா லதுபோல் விளங்கும்
செந்திணைக் கதிரைத் தின்னும் மயிலே
நின்பகை கோடை நெருப்பு வெயிலே
நீயெதிர் பார்ப்பது நீருண்ட முகிலே!

ஒரேஒரு கேள்வி உனைநான் கேட்கிறேன்
ஆடுங் கலாபமே ! அருகில்வா; இதைக்கேள்
கருவுற்ற முகிலைக் கண்டதும் நீயோ
ஆடு கின்றனை ; அதுசரி தோகையால்
ஈர முகிலினை ஏன்விசிறு கின்றனை?

சுரந்திடும் ஊற்றுநீர் சுடுமென் றெண்ணி
விசிறுவார் உண்டோ ஒலை விசிறியால்?

அஃறிணை மயிலே ஆராய்ந்து பார்த்துச்
செய்வதைச் செய்தால் சிரிப்புக் கிடமிலை
என்பதை அறிக ! என்மனங் கவர்ந்த
நாட்டியப் பறவையே ! நன்குநீ
ஆட்டுக தோகையை ஆடுக நீயே !

# இளவேனில்

(சிந்து)

முத்தம் கொடுப்பவளே-கொடி
முந்திரி பூத்ததுபார்
அத்தி மரக்கிளையின்-தளிர்
ஆடும் அழகினைப்பார்
குத்தும் மலையருகே-புறா
கூவிக் குலவுதுபார்
தொத்தும் பசுங்கிளியை-மயில்
தூது விடுவதைப்பார் !

ஒத்த மனத்தினளே-குளிர்
ஓடை முழவொலிபோல்
சத்தம் கொடுக்குதடி-மலை
சந்தனம் சிந்துதடி
முத்துச் சிரிப்பழகி-மலர்
மூச்சு மணக்குதடி
கத்தரிக் கோடையிலே-இளங்
கத்தரி காய்க்குதடி

சங்கத் தமிழ்மதுரை-நகர்
    தாண்டித் தவழ்ந்துவரும்
மங்கலத் தென்றலிலே-கரு
    வண்டு மயங்குதடி
பொங்கி வழிந்திடுந்தேன்-அது
    பூக்களின் வேர்வையடி
வெங்கனல் கோடையடி-இது
    வேனில் பருவமடி !

பொரிபொரி யாய்மலரைப்-பசும்
    புன்னை மரத்தினில்பார்
கரிகரி யாய்நிழலை-அதன்
    காலடி சுற்றிலும்பார்
வரிவரி யாயலையை-முழு
    வட்டக் குளத்தினில்பார்
சரிசரி என்பவளே-சுவை
    தரவரு வாய்மயிலே!

ஊட்டி வளர்ப்பவளே-உயிர்
    ஓவியம் போன்றவளே
ஏட்டின் கவிதையைப்போல்-நகர்
    எங்கும் புதுமையடி
காட்டுப் பறவையெலாம்-தமிழ்க்
    காதல் புரியுதடி
வாட்டம் தவிர்த்திடடி-எனை
    வந்து தழுவிடடி !

# குயில்

குக்கூவெனக் கூவிடும் பூங்குயிலே
குரலால்புகழ் தேடிடும் பூங்குயிலே
நக்கீரனைப் பாடும் பூங்குயிலே
நல்லோர்பெயர் சொல்லுக பூங்குயிலே!

நிழல்தங்கிய சோலையில் கூவிடுவாய்
நிறமேறிய மாந்தளிர் கோதிடுவாய்
எழில்தங்கிய தீங்கனி தின்றிடுவாய்
இசையால்புவி மாதரை வென்றிடுவாய்!

வெயிலாடியுன் மேனிக றுத்ததுவோ
விளையாடியுன் பார்வைப ழுத்ததுவோ
மயில்தான்கும ரேசனின் வாகனமோ
மணமேடையு னக்கெது மாமரமோ!

என்னைத்தெரி யாதவ ரோபலபேர்
என்னைக்குறை கூறிடு வார்சிலபேர்
உன்னைத்தெரி யாதவ ரேயிலரே
உயிரோவிய மே!முகி லின்பகையே!

# நிலா

('தெள்ளுதமி ழுக்குதவு சீலன்'
என்னும் காவடிச் சிந்து மெட்டு.)

ஆசைகொண்டு விண்வெளியின் மீது-மதி
ஆடையின்றி யேவுலவும் மாது-முகில்
ஓசைகொண்ட மண்டலத்தில்
ஊர்ந்துலவி வாழ்ந்துவரும்
ஊமை-வெள்ளி
ஆமை!

தேசமெல்லாம் சுற்றிவரும் தெப்பம்-குளிர்
திங்களொரு சங்மகுணி அப்பம்-சிலர்
பூசலுக்கும் ஏசலுக்கும்
பொங்கியெழுங் காதலுக்கும்
பொறுப்பு-நிலாச்
சிரிப்பு!

வல்லிடை மங்கையரை வாட்டும்-ஒளி
வாங்கிவைத்து நம்மிடத்தில் காட்டும்-ஆமூர்
மல்லனென்பான் தோளைநிகர்
மாமலையின் உச்சியைப்போய்
வாழ்த்தும்-தலை
தாழ்த்தும்!

நல்லவர்தம் நட்பெனவே வளரும்-சில
நாளிலதன் ஈரவுடல் தளரும்-இன்பச்
சொல்லமுதப் பாவலரைத்
தூண்டிவிட்டுக் கொண்டிருக்கும்
சோதி-வான்
ஊர்தி!

மொட்டுமுல்லைக் கட்டவிழ்ந்தாற் போலே-வெள்ளி
முத்திரைமி தக்குதுபார் மேலே-மதி
வெட்டவெளி மீதினிலே
வெற்றிமன்னன் வெண்குடைபோல்
விரியும்-நகை
புரியும்!

வட்டமிட்ட வெண்ணிலவின் மீது-காயம்
வந்தமையக் காரணந்தான் யாது-வண்ணக்
கட்டழகி அஞ்சனத்தை
விட்டெறிந்த தால்விளைந்த
கறையோ-சொந்தக்
குறையோ?

# பூம்புகார்

கல்லினால் எல்லை காட்டிக்
காதலால் இதயங் காட்டி
வில்லினால் வீரங் காட்டி
வென்றபின் ஈரங் காட்டிச்
சொல்லினால் நீதி காட்டிச்
சோழர்கள் ஆண்டு வந்த
தொல்புகார் நகரம் கீர்த்தி
தூங்காத நகர மாகும்!

மங்கல மனைகள்; ஆடல்
வளர்கலைக் கூடம்; நல்ல
சங்கநூற் புலமை மிக்கோர்
சந்திக்கும் 'வார்த்தை வீடு'
தங்குதற் காகச் செய்த
தனிமனை பலவற் றோடு
பொங்குசெந் தமிழி ருந்து
புறங்காத்த நகர மாகும்!

'துகிர்துகிர்' என்னும் ஓசை
துகில்விலை ஓசை; பூவை
'முகிர்முகர்' என்னும் ஓசை
மொய்த்தவர் ஓசை; நல்ல
'நகர்நகர்' என்றும்; சற்றே
நகர்நகர் என்றும்; நீபோய்ப்
'பகர்பகர்' என்றும் ஓசை
பரந்தபொன் னகர மாகும்!

சீரோடு நீண்டு சென்ற
தெருக்களில் தருக்கள்; கோவில்
தேரோடும் வசந்த வீதி
தென்புறம் சமணர் பள்ளி
ஊரோடும் மழைநீ ரோடும்
ஒற்றுமை கொண்ட பொன்னி
நீரோடு நேசங் கொண்ட
நெய்தல்நீர் நகர மாகும் !

பிறைமுக வடிவம் காட்டும்
பெருங்கடல் விரித்த நீரில்
அறிமுகம் கொண்ட கப்பல்
ஆனைபோல் அசைந்தே நின்ற
துறைமுக நகரம்; உப்புச்
சுவைநீரும் பொன்னி யாறும்
மறைமுகம் ஏது மின்றி
மயங்கிய திணையூ ராகும்!

மழைகொண்ட கார்கா லத்து
மாமுகி லெனயீந் தோரும்
குழைகொண்டு மனையில் மேய்ந்த
கோழியை விரட்டி னோரும்
பிழைகொண்ட செயல்செய் யாத
பெரியரும்; பாய்ந்த பார்வை
வழிகண்டு காதல் கொண்டு
வாழ்ந்தோரும் வாழ்ந்த மூதூர்!

செங்குத்து மலைகள் போன்று
செந்நெலைக் குவித்தும்; வந்த
வங்கத்துப் பண்டம் பெற்றும்
மணிக்கடல் முத்தை விற்றும்
தங்கத்தை மலர்க ளாக்கித்
தக்கார்க்குப் பரிச ளித்தும்
சங்கத்துச் செய்யுள் செய்த
சான்றோரை ஈன்ற மூதூர்!

# போலி உடும்பு

பலன் சொல்லிப் பொழுது போக்கும்
பல்லியே! கூரை வீட்டில்
உலவிக்கொண் டிருக்கும் போலி
உடும்பேநீ நலமா? எல்லாம்
நலந்தானா? எனக்கே தேனும்
நற்செய்தி வருமா? கொல்லி
மலைமங்கை நிலவின் தங்கை
வாய்ப்பாளா மனைவி யாக?

சொல்செயும் புலவ ரெல்லாம்
துன்பத்துள் தூங்கு கின்றார்
நல்லவர் எல்லாம் நாட்டில்
நலிகின்றார் ஆனால் இங்கே
அல்லவர் பெருகி வீண்வாய்
அளக்கின்றார் அதனால் தானோ
பல்லியே நின்சொல் லுக்குப்
பலனுண்டென் கின்றார் போலும்!

உனக்கொரு செய்தி சொல்வேன்
உற்றுக்கேள் பல்லி யேநீ
தனிக்குரல் பெற்றாய் யானோ
தமிழ்க்குரல் பெற்றேன் நீயோ
கனைக்கிறாய் அதனா லன்றோ
'கனைகுரற் பல்லி' என்று
பனித்தமிழ் சக்தி முற்றப்
பாவலன் பாடி வைத்தான்.

கருங்கடல் ஓய்வே இன்றிக்
கனைத்தல்போல் கனைத்தா யேனும்
பெருங்கடல் ஓசை கேட்டே
பெரும்புவி அச்சங் கொள்ளும்
இருப்பினும் ஈக்கள் உன்றன்
ஈரவாய் ஓசைக் கஞ்சும்
வரிப்புலி நீயே என்றால்
ஈக்களே உனக்கு மான்கள்!

தலையில்நீ வந்து வீழ்ந்தால்
சண்டையாம்; தோளில் வீழ்ந்தால்
நலம்பல பெருகு மென்பர்
நானிதை நம்ப வில்லை.
இலர்பலர் இந்த நாட்டில்
எண்ணற்றோர் எனவே அன்னார்
வலம்புறத் தோளில் வீழ்ந்தே
வாழச்செய் எங்கே பார்ப்போம்?

பத்தினி சொன்னால் பெய்யும்
பனிமழை என்பர். இந்த
உத்தமி வாத மெல்லாம்
ஊரினை ஏய்ப்ப தாகும்
சித்திரப் பல்லி யேநீ
வடமேற்குத் திக்கை நோக்கிக்
கத்தினால் வானம் பெய்யும்
என்பதும் கதையே என்பேன்!

வாலாட்டு கின்றாய் வேங்கை
வாலாட்டும் நாட்டில்; நீயுன்
வாலாட்டக் கண்டு கோபம்
வரவில்லை எனினும் நாங்கள்
தாலாட்டும் தமிழை வீழ்த்தச்
சதிசெய்யும் பகைவர் கூட்டம்
வாலாட்டத் தொடங்கு மாயின்
வாலறு பட்டே தீரும்!

பாலிலே குளித்திட் டாளாம்
பனிமங்கை கிளியோ பாத்ரா
காலையில் எழுந்து காக்கை
கட்டாயம் குளிக்கும்: ஈந்தின்
ஓலைபோல் நீண்ட நீயோ
ஒருநாளும் குளிப்ப தில்லை
தோலுடல் வியர்த்தா லன்றோ
தூயநீ ராடு வாய்நீ?

வரிப்புலிப் பாய்ச்சல் இந்த
    வையத்தில் எதற்கு மில்லை
விரைந்துசெல் குதிரை ஓட்டம்
    வேறொரு விலங்குக் கில்லை
நெருங்கியே நின்று காதல்
    நிகழ்ச்சியில் ஈடு பட்டுப்
பொருந்தலில் உன்னை வெல்வார்
    புவிதனில் யாரு மில்லை.

புற்றினை விட்டெ ழுந்தே
    பாம்புகள் போகக் கண்டும்
சிற்றெறும் பெல்லாம் எங்கும்
    திரிந்திடக் கண்டும் நீயோ
தற்பொழு திந்த நாட்டின்
    தலைவருட் சிலரைப் போலே
அற்புத உலகைச் சுற்றும்
    ஆசையற் றிருக்கின் றாயே!



# வரலாற்று வாயில்



உள்ளே. . .


தரை மீன்

இணைமோனை

ஆற்றுப்படை

சமணன் சாதித்தான்

மாடத்திலும் கூடத்திலும்

சித்தூர் சாம்பல்

காதல் மேகம்

நல்ல தீர்ப்பு

குமணன்

தலைமலைத் தேவன்

# தரை மீன்

புதியபுனல் பொங்கிவரக் கண்டு, மாந்தர்
பூரிக்க, கோவேந்தன் கரிகாற் சோழன்
நதிநிதியை வரவேற்று, வெள்ளம் துள்ள
நடந்துவரும் காவிரிக்கு விழாக்கொண் டாட
மதிமதுரப் புலவரெலாம் புகழ்ந்து பாட
வரலாற்றுப் பேரழகி ஆதி மந்தி,
ஏதுகைவரல் போலடுத்து வந்தாள்; அத்தி
என்பானோ, மோனையைப்போல் முன்னேவந்தான்.

'பாடுதுறை அறிந்தவளே காப்பி யத்தின்
பலதுறையும் அறிந்தவளே அனிச்சப் பூவே
ஊடுவது காமத்திற் கின்பம் என்னும்
உறவுதுறை இரவுதுறை அறிந்த மாதே!
ஆடுதுறை அதுதானோ?" என்று கேட்டான்.
ஆணிப்பொன் மேனிமங்கை 'ஆம்ஆம்' என்றாள்.
கூடுதுறை அறிந்தவனும் கோதை மாதும்
குளிர்ந்தகழார்த் துறைநோக்கி நடக்க லானார்.

'வானோடு விளையாடும் நிலவே! நீரில்
வளர்கின்ற தாமரையே! கோவை நூலின்
நானூறு துறைகளைநீ அறிந்தி ருந்தும்
நதித்துறையைக் காட்டுகின்றாய்! வெள்ளிப்புள்ளி
மானோடு பார்வைப்போர் புரியும் பெண்ணே
மறந்தனையோ கட்டில்துறை காட்ட' என்றான்
தேனோடு வாய்திறந்த புதுப்பூப் போன்றாள்
செங்கதிரோ வானத்தை மறக்கும்? என்றாள்.

வரிப்புலியின் வாய்பிளந்த வீர வேந்தன்
மாலையிட்ட மங்கையிடம் பேசிக் கொண்டே
நரைத்தநுரை முட்டையிட்டுக் கொண்டி ருந்த
நதிநீரின் நீட்டத்தில் நீந்த லானான்.
திரைத்திரளால் நெடுங்கரையைக் கரைப்ப தற்குத்
திட்டமிட்ட வெள்ளத்தில், துள்ளித் துள்ளிச்
சிரித்தபடி சிலிர்த்தபடி கண்ணும் கண்ணும்
சிவந்தபடி அவளும்நீ ராட லானாள்.

தலைநிமிர்ந்த புகழ்பெற்ற சோழ நாட்டின்
தாய்ப்பாலாம் காவிரியின் ஈர நீரில்
மலருதிர்ந்து போர்வையைப்போல் மிதக்க, மேற்கு
மலைச்சாரல் சந்தனம் தக்கோலம் யாவும்
அலையுயர்ந்த வெள்ளத்தில் மிதக்க, செங்கால்
அன்னம்போல் ஓடங்கள் மிதக்க, ஓர்பால்
சிலர்மிதந்து நீராட, நதியில் ஈரச்
சிலையாகிக் கொண்டிருந்தாள் ஆதி மந்தி.

சூரியனை நோக்குகின்ற நெஞ்சிப் பூப்போல்
தோகையவள் மாவீரன் முகத்தை நோக்கி,
'நீரைவிட நுட்பமெது சொல்வீர்' என்றாள்.
நெய்யென்றான்; நெய்யைவிடப் புகையே என்றாள்.
"தாரணியில் அனிச்சமலர் உனக்கு நுட்பம்
தமிழ்க்குயிலே, உன்னுடலே எனக்கு நுட்பம்
பேரழகே எனைமயக்கும் மதுவாம்!" என்றான்.
பெரியதிரு வாய்மொழியாள் சிறுசொல் செய்தாள்.

'தண்ணீரின் ஏப்பந்தான் அலைகள்' என்றான்.
'தமிழ்க்கலைகள் வாழ்நாளை வளர்க்கும்' என்றாள்.
'விண்மீது விளங்குகின்ற நிலவின் மீது
வீடுகட்டும் காலமொன்று வந்தே தீரும்
கண்ணாலே கதை சொல்லும் மாதே!' என்றான்.
கட்டழகி மொட்டுமொட்டாய்ச் சிரித்தாள்! 'யாவும்
பெண்ணாலே ஆகு' மென்றான். அதனைக் கேட்டுப்
பிழிந்ததொரு புடவையெனக் குனிந்து கொண்டாள்.

பெரியபுகழ் பெற்றவனை மணந்த மங்கை
பின்புறத்தில் 'தொங்குகின்ற மேகம்' என்னும்
கரியகுழல் தனைக்கரத்தால் பிழிந்து கொண்டே
கரையேறித் தேர்நின்ற இடத்தில் நின்றாள்.
தரைதடவிக் கரைதடவும் பொன்னி யாற்றில்
தமிழ்வேந்தன் நுரைதடவி நீந்தும் வேளை,
அரியரியாய் வரிவரியாய் வடிவம் காட்டும்
அலைகளினால் ஆட்டனத்தி இழுக்கப் பட்டான்.

பந்தெனவே காவிரியில் மிதந்தான்; நீரில்
பாராங்கல் போலமிழ்ந்தான்; சேனை யானைத்
தந்தமென மேல்நோக்கி எழுந்தான்; அத்தி
தத்தளித்தான்; தமிழரசி தரைமீ னானாள்.
கொந்தளித்த வெள்ளத்தில் மறைந்து போன
கோமானை, விழிவிளக்கால் தேட லானாள்;
செந்தணலில் தளிரானாள்; தீயில் வெந்த
சிறுகயிறு போலானாள்; ஓட லானாள்.

ஓடிக்கொண் டேயிருந்த நதியை நோக்கி
ஓடிக்கொண் டேயிருந்தாள், வாடிக் கொண்டே!
வாடிக்கொண் டேயிருந்தாள், சூறைக் காற்றின்
வசப்பட்ட கப்பலைப்போல் ஆடிக் கொண்டே!
ஆடிக்கொண் டேயிருந்தாள் அழகி, ஆற்றின்
அடிநீரில் மறைந்தவனைத் தேடிக் கொண்டே!
தேடிக்கொண் டேயிருந்தாள் ஆதி மந்தி
சிந்தாத கண்ணீரைச் சிந்திக் கொண்டே!

# இணை மோனை

வீரவெறி யோடெதிர்த்து, நின்று வென்ற
விளங்குதிணை வேந்தேகேள்! இவர்யார் என்றால்
ஈரமலர் முல்லைக்குத் தங்கத் தேரும்
இரவலர்க்கு வயல்வரிசை ஊரும் ஈந்த
மாரிமழை பாரிவள்ளல் மகளிர்; அந்த
மன்னவனின் தோழன்யான்; எனவே இந்தப்
பேரவையின் திரைமறைவில் அமர்ந்தி ருக்கும்
பேரழகு மங்கையரென் மகளி ராவர்.

நிறத்தாலே பிறப்பாலே சிறந்தோர் என்று
நினைப்பவரெல் லாங்கடையர் மடையர்; மேனி
நிறத்தாலே அந்தணர்கள் சிறந்தா ரேனும்
நினைப்பாலே உயராதார் மேலோர் ஆகார்.
அறத்தாலே சிறந்தோன்யான்; வேள்வி செய்யா
அந்தணன்யான்; ஆராய்ந்து செய்யுள் செய்யும்
திறத்தாலே சிறந்தோன்யான், குறிஞ்சி பாடும்
திறன்மிகுந்த புலவன்யான்! கபிலன் என்பேர்.

அருந்துதற்கே உதவாத நீரைப் பெற்றும்
அழியாத மரபுடைய அலைகள் பெற்றும்
திருந்துதற்கோ, வாயடங்கித் தூங்கு தற்கோ
தெரியாத கரியகடல் நீரை நாடிப்
பொருந்துதற்கு விரைந்தோடும் நதியும், வண்ணப்
பூவுதிரும் சோலைகளும் சூழ்ந்த நாட்டை
வருந்துதற்கோ, இருள்சூழ்ந்த ஆட்சி யென்று
வரைவதற்கோ வழியின்றி ஆளும் வேந்தே!

மலைமுனிவன் பேரருளைப் பெற்ற வேளிர்
மரபினிலே வந்தவன்நீ நாற்பத் தெட்டுத்
தலைமுறையைத் தாண்டிவந்த தலைவன்; போரில்
தனிவீரங் காட்டியவன்; குருதி யுண்ட
இலையுடைய வேல்நின்வேல்; மையல் யானை
ஏறுகின்ற இருங்கோவேள்; செவ்வேள் நீயோ
புலிகடிமால்! பொய்யாத புலவர் கையில்
பொன்பரப்பும் மதுமாலை மன்னர் மன்னன்.

விழாநகரம்; புலிப்பகைவர் தாக்கி னுங்,க
விழாநகரம்; புண்தோளா டவர்வாள் வீரம்
விழாநகரம்; நதிநகரும் நகரம்; வெற்றி
விழாநகரம்; மாற்றார்க்கு மண்டி யிட்டுத்
தொழாநகரம்; தமிழ்நீதி நகரம் துன்பம்
தொடாநகரம்; பசியாலும் பிணியி னாலும்
அழாநகரம்; அறம்பொருளோ டின்பம் மூன்றும்
அறாநகரம் அரசேநின் நகர மாகும்!

வாய்க்காலின் தண்ணீரைத் தொட்டுத் தூங்கும்
வயல்தனிலே ஏருழவின் செய்தி யுண்டு.
தாய்ப்பாலில் குடும்பத்தின் கதையும் நாட்டின்
சரித்திரமும் சந்தித்துக் கொண்டி ருக்கும்.
போய்ப்பாயும் வரிப்புலியின் நகத்தில் வீரப்
புரட்சியுண்டு தொகைதொகையாய்ப்பகைவர் தேரைச்
சாய்த்தோனே! இவ்வுலகில் இன்றும் என்றும்
சாயாத நின்புகழில் அனைத்தும் உண்டு.

அடிவயிற்றில் செம்பொன்னைச் சுமந்து கொண்டும்
அருவிதனைத் தலைமலையில் தொங்க விட்டும்
முடிவெடுத்த உயரத்தை முடியாற் காட்டும்
முதிர்ந்தமலை உடையவனே! வெற்றி யோடு
வடபுலத்தில் வாழ்பவனே! செம்பு சேர்ந்த
மதில்சூழ்ந்த மன்னவனே! பகைவர் நாட்டைக்
கிடுகிடுக்க வைத்தவனே! பிறர்போல் நின்னைக்
கேட்பதற்கு வரவில்லை கொடுக்க வந்தேன்.

மருந்தாலே நோய்தீரும், வானம் சிந்தும்
மழையாலே வறண்டவயல் ஏக்கம் தீரும்
விருந்தாலே பசிதீரும்; ஆனால் காதல்
வெப்பத்தில் கொந்தளிக்கும் நோயோ, எந்த
மருந்தாலும் தீர்வதில்லை: காதல் நோயை
மந்திரங்கள் தீர்ப்பதில்லை; மங்கை தீர்ப்பாள்.
அரசாங்கம் நடத்திவரும் இருங்கோ வேளே
அறிந்தும்நீ இளமையைவீண் ஆக்கல் நன்றோ?

புத்தகங்கள், முத்தமிடும் மனைவி, சொற்கள்
புரியாத மழலைமொழி பேசும் மக்கள்
இத்தரைமீ தினில்ஒவ்வோர் மனிதனுக்கும்
இருப்பதுவே சிறப்பாகும்; இருக்குமாயின்,
புத்தகத்தால் பேரறிவும் குழந்தைப் பேச்சால்
பூரிப்பும் மனைவியினால் சுகமும் சேரும்.
எத்தனைபேர் இருந்தென்ன? மனைவி இல்லான்
இல்வாழ்க்கை கரும்புக்கு வெறும்பூ அன்றோ?

பொங்குகின்ற புகழ்வேண்டி உயிர்வேண்டாது
போராடும் வீரரொடு களத்தில் நின்று
செங்குருதிப் போர்புரிந்து வாகை சூடிச்
சிரித்தவனே! இணைமோனை போன்றிருக்கும்
மங்கையரை யான்தரநீ ஏற்றுக் கொள்க.
வரலாற்றில் வளர்பவனே! இல்ல றத்தைத்
தங்குதடை இல்லாது நடத்திச் செல்க
தமிழ்மொழிபோல் நீடுழி வாழ்க என்றான்.


மூலம் : புறநானூறு (201)

இவரியார் என்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்

நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரேன் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே.

'நீயே வடபான் முனிவன் றடவினுட் டோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே,
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒளியற் கண்ணி புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவிந்து
இருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறற்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
உடலுந ருட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே .

-கபிலர் பாடியது



# ஆற்றுப் படை

நேரசையில் நின்றடங்கும் பெயரே கொண்டோன்
நிறங்கொண்ட தாமரையின் நிறமே கொண்டோன்
ஊரினையும் உலகினையும் தாண்டி, விண்ணின்
உச்சியைப்போய்த் தீண்டுகின்ற கீர்த்தி கொண்டோன்
ஆரமுதம் போற்சிறந்தோன் அறிதல் மூத்தோன்
ஆய்ந்தாய்ந்து சீர்தூக்கி முடிவு காணும்
காரணமே ஆய்என்னும் பெயரைத் தாங்கக்
காரணமாம்! இன்னுங்கேள் விறலிப் பெண்ணே!

சீர்கொண்டு தளைகண்டு செறிந்த சந்தச்
சிறப்பமைந்த அடிகளிட்டுத் தொடையைத் தூக்கிப்
பேர்கொண்ட புதுப்பாடல் பாட வல்ல
பெரும்புலவர் வறுமைக்கு மருந்து போன்றோன்.
கார்நின்று மிகப்பெரிய பஞ்சம் வந்த
காலத்தும், தருங்கையைத் தளர்த்தி டாது
நேர்நின்று தாயைப்போல் கருணை காட்டும்
நீர்நாடன்! நிதிபதியாய் விளங்கும் வள்ளல்!

கன்னலெனு இனிப்பவளே! சங்க நூலின்
கற்பனைபோற் சிறந்தவளே! அந்த மன்னன்
தென்பொதிகை மலைச்சாரல் மன்னன்; போரில்
செயங்கண்டு பயன்கொண்ட சேனை மன்னன்
அன்புடைய மனைவிக்கே ஆசை மன்னன்
அம்மன்னன் நமக்கெல்லாம் மீசை மன்னன்
பொன்னைநிகர் புலவரெலாம் போற்றும் மன்னன்
புகழ்புரிந்தே வாழ்நாளை வளர்க்கும் மன்னன்.

மலைதடவும் தோளுடையோன்; கார்கா லத்து
மழைதடவும் கரமுடையோன்; ஓய்வே யின்றிக்
கொலைதடவும் வர்ளேந்தி எதிர்த்த 'கொங்கர்'
கூட்டத்தை வீழ்த்திடவே, சிறந்த கூர்வேல்
இலைதடவி, மீசையைமே லேற்றிப் பார்வை
இரண்டினையும் தனிக்கனலாய் மாற்றி, மாற்றார்
தலைதடவி மிதிக்கின்ற யானை ஏறித்
தாராடப் போராடி வெற்றி பெற்றோன்.

முடியேந்தும் செம்மணிபோற் சிறந்த வள்ளல்
முன்நின்றேன்; 'யாரென்றான்?', 'விறலி' என்றேன்'
நடையேந்தி வந்தவளே! நாளை இங்கே
நடக்கட்டும் நின்நடனம் என்றான் ஆய்வேள்.
கொடியேந்தும் நகரினிலே, நீல வானம்
குளிரேந்தும் இரவினிலே, மின்னும் தங்கப்
படியேந்தும் மண்டபத்தில் ஆட லானேன்.
பார்வையினால் கோணங்கள் போட லானேன்.

மண்டபத்தில் மயிலானேன் ஆட்டத் தாலே
மாமன்னன் தலையசைத்தான் மகிழ்ச்சி யாலே
பண்பழுத்த புலவரெலாம் மயங்க லானார்
பார்வையொளி அவர்மீது படிந்த தாலே!
அண்டையில்வீற் றிருந்தபலர் 'அடடா' என்றார்,
அச்சமற்ற வீரரெலாம் மெச்சி நின்றார்.
வண்டணைந்த குழல்மாதர் வியந்து நோக்கி
வையகத்தில் வழக்கிழந்த மொழிபோ லானார்.

படித்துள்ளங் குளிர்பவனும், படியார் தம்மைப்
படிப்பித்தே மகிழ்பவனும், பழிச்சொல் கேட்டுத்
துடித்துள்ளங் கொதிப்பவனும், எளியோர் கண்ணீர்
துடைத்துள்ளம் நெகிழ்பவனும், வருவோர்க்கெல்லாம்
கொடுத்துக்கை சிவப்பவனும், 'தமிழென் ஆவி
குறித்துக்கொள்' என்பவனும் ஆன ஆய்வேள்
எடுத்துக்கொள் எடுத்துக்கொள், மின்னும் பொன்னை
ஏற்றுக்கொள் ஏந்திக்கொள்', என்றே ஈந்தான்.

நன்றாகச் சூல்கொண்ட முகிலின் கூட்டம்
நாற்புறமும் வெண்ணிலவைச் சூழ்ந்தாற் போலே
குன்றாத கருமைநிறக் குழலின் மீது
குளிர்முல்லை சூடிக்கொண் டிருக்கும் பெண்ணே!
தென்பாண்டி முத்தேபோற் சிறந்தோன் நாட்டில்
தெள்ளியநீ ரோடையெலாம் பாடல் பாடும்
மன்றோரம் நின்றுள்ள பலாம ரங்கள்
மத்தளத்தை ஒத்தபல கனிகள் காட்டும்.

மயில்தூங்க வேங்கைமரம் இடங்கொ டுக்கும்;
மதயானை தன்காலால் தினையி டிக்கும்;
வயல்நீரை வரப்பெல்லாம் அளக்கும்; நாட்டின்
வளத்தையெலாம் குறிஞ்சிநிலம் விளக்கும்; வண்ணக்
குயில்பாதி, குரல்பாதி மகிழ்ச்சி யூட்டும்.
குறுமுயல்கள் நெல்லிக்காய் விழிகள் காட்டும்,
செயல்வீரம் புரிவதற்கு வேங்கை ஓடும்;
தேனடையை மந்தியுண்டு மயங்கி யாடும்.

என்றென்றும் ஈவானைத் தேர்வே ளாயை,
ஏந்திழையே! நீகாண வேண்டின், தெற்கே
குன்றின்கண் விளையாடிக் கொல்லை முல்லைக்
கொத்துக்கு முத்தமிட்டுப் 'பூவின் ஆவி'
என்கின்ற நறுமணத்தை எங்கும் வாரி
இறைக்கின்ற தென்றலினால் உன்றன் கூந்தல்,
மின்கொண்ட முகில்கண்டு மயிலின் தோகை
விரிவதுபோல் விரிந்தசையச் செல்க" என்றாள்.

## மூலம் : புறநானூறு (133)

மெல்லியல் விறலிநீ நல்லிசை செவியிற்
கேட்பி னல்லது காண்பறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் மாண்டநின்
விரைவளர் கூந்தல் வரைவளி யுளரக்
கலவ மஞ்ஞையிற் காண்வர வியலி
மாரி யனன் வண்மைத்
தேர்வே ளாயைக் காணியே சென்மே!

-உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்.

# சமணன் சாதித்தான்

நாவீற்றி ருந்ததமிழ்ப் புலவ ரோடு
நற்கவிஞன் திருத்தக்க தேவன் என்பான்
பூவீற்றி ருப்பதுபோல் வீற்றி ருந்தான்.
பொருந்திலிளங் கீரனென்பான் அவனை நோக்கி;
'மாவீற்றி ருக்கின்ற தோப்பில், வண்ண
வரிக்குயில்கள் வீற்றிருக்கும், அறங்கொல் லாத
கோவீற்றி ருக்கின்ற நாட்டில், செங்கோல்
குனியா" தென் றான்; தேவன் 'ஆம்ஆம்' என்றான்.

'ஆய்ந்துணர்வோர் நெஞ்சமெல்லாம் கல்வி யாலே
அன்றாடம் சிவக்கு'மென்றான் அவியன் என்பான்.
'மாந்தரெலாம் உணவினிலே இன்பம் காண்பார்;
மாகவிஞன் இன்பத்தில் உணவு காண்பான்;
தீந்தமிழ்போல் பிறமொழிகள் இனிப்ப தில்லை!
திருத்தங்கள் இல்லாத நாடே இல்லை.
ஏந்துபுகழ்ப் பாவலரே!' என்றான் தேவன்.
இடையாற்று மங்கலத்தன் 'ஆம்ஆம்' என்றான்;

'பதிபக்திப் பாட்டெழுதல் எளிது; காதற்
பாட்டெழுதிக் காட்டுவதே கடினம்' என்றே
அதவத்தூர் புதுமதியன் கூற, ஆங்கே
அமர்ந்திருந்த திருத்தக்கன் அவனை நோக்கி
'மதிமிக்கோன் சாதிப்பான் எதையும்; அன்னோன்
மாற்றாரின் புத்தகத்தாற் பிழைக்க மாட்டான்;
எதிர்நிற்பான்; வென்றாரை வெல்வான்' என்றான்;
'எழுதுவிரோ நீர்?' என்றான்; "இயலும்" என்றான்.

முதலடியைத் தேனாக்கி, அடுத்த டுத்து
முளைக்கின்ற தொடரடியை அமுத மாக்கி
விதவிதமாய்ச் சந்தநய நட்புண் டாக்கி
வியப்புமிகு உவமைகளால் புதுமை தேக்கிப்
பதமுடைய பாவினமாம் விருத்த மாக்கிப்
பதின்மூன்றி லம்பகமாய் வகுத்துத் தூக்கி,
இதயமதை இறைவன்பால் பதிய வைத்தோன்
இன்பச்சிந் தாமணிநூல் இயற்ற லானான்.

நரிவிருத்தம் பாடியவன்; முற்றக் கற்ற
நற்கவிஞன்; தக்கதிருத் தக்க தேவன்
விரிவிருத்தக் காப்பியத்தைத் தமிழ்ச்சங் கத்தில்
வைத்திட்டான், தைத்திங்கள் தொடங்கும்நாளில்!
ஒருதிருத்தங் காணுதற்கும் வழியே இல்லா
உயர்நூலை, மன்றத்தார் மெச்ச லானார்.
தரைதிருத்தி நாடாண்ட பாண்டி வேந்தன்,
சாகாத நூல்தந்த கவியை நோக்கி—

'கலைதேர்ந்த விலைமாதர் தொடுதோள் போன்று
கற்பார்க்கெல் லாம்மிக்க எளிதாய், அந்த
விலைமாதர் உள்ளம்போல், திட்ப நுட்ப
விளக்கமெலாம் அறிதற்கே அரிதாய், நல்ல
நிலைமாதர் கற்பெனவே சிறந்த தோர்நூல்
நீதந்தாய்; சுவைசிந்தா மணியைத் தந்தாய்!
தலை, கால், கை, இவற்றையெலாம் காத்தோர் செத்தார்
தமிழ்காத்தோர் வரலாற்றில் செத்த தில்லை!

வேற்றுமையை வினைச்சொற்கள் ஏற்ப தில்லை.
வெறும்பாட்டைத் தமிழ்ச்சங்கம் சேர்ப்ப தில்லை,
மாற்றறியாச் செம்பொன்போற் சிறந்த சிந்தா
மணி, தமிழுக் கணி' என்றான்; விரிந்த வைகை
ஆற்றருகே தமிழவையில் வீற்றி ருந்தோர்
அனைவருமேஅவன்பேச்சை ஆமோ தித்தார்.
நாற்றிசையும் புகழ்பொங்க வாழ்ந்த வேந்தன்,
நல்லகுறுந் தொகைப்புலவர் தம்மை நோக்கி...

'அப்பத்தைச் சுடும்போது பொத்தல் வந்தே
அதன்நடுவில் தானாக அமைதல் போலே,
ஒப்பற்ற காவியத்தில் எங்கி ருந்தோ
ஓடிவந்து கருத்துக்கள் குதிப்ப தில்லை.
ஒப்பிட்டுச் சொல்லுதற்குத் திறமை வேண்டும்.
உழைத்தார்க்கே அத்திறமை வந்து வாய்க்கும்;
உப்பற்ற உணவுக்கும் தாய்ப்பால் போன்ற
உவமையில்லாப் பாடலுக்கும் பெருமை யில்லை!

'திருத்தாமல், திருந்தாமல் மாற்ற மில்லை.
திருத்துங்கள், தீட்டுங்கள்; புரியாப் பாடல்
செரிக்காத சோறாகும்; மனித னுக்கே
தேவையற்ற சாதிமதம் போன்ற தாகும்,
உருப்போடும் பண்டிதரால் மறும லர்ச்சி
ஒருநாளும் உண்டாகப் போவ தில்லை,
கருத்தூன்றி ஆராய்ந்து முயற்சி செய்து
கலைத்தொண்டில் தோற்றாலும் பெருமை யுண்டு!

கத்துகடல் நீராலும் கயவ ராலும்
கனலாலும் கண்கலந்த தூக்கத் தாலும்
எத்தனையோ நூற்களைநாம் இழந்து விட்டோம்!
இல்லையெனில் ஒருநூலா இரண்டு நூலா,
பத்திரண்டா யிரங்கோடி நூற்க ளன்றோ
பைந்தமிழர் கைவசத்தில் இருந்தி ருக்கும்;
வித்திடுவீர்!" என்றுரைத்தான். புலவ ரெல்லாம்
விழித்தெழுந்தே செழித்ததமிழ் வளர்க்க லானார்!

'திருத்தாமல், திருந்தாமல் மாற்ற மில்லை.
திருத்துங்கள், தீட்டுங்கள்; புரியாப் பாடல்
செரிக்காத சோறாகும்; மனித னுக்கே
தேவையற்ற சாதிமதம் போன்ற தாகும்,
உருப்போடும் பண்டிதரால் மறுமல ர்ச்சி
ஒருநாளும் உண்டாகப் போவ தில்லை,
கருத்தூன்றி ஆராய்ந்து முயற்சி செய்து
கலைத்தொண்டில் தோற்றாலும் பெருமை யுண்டு!

கத்துகடல் நீராலும் கயவ ராலும்
கனலாலும் கண்கலந்த தூக்கத் தாலும்
எத்தனையோ நூற்களைநாம் இழந்து விட்டோம்!
இல்லையெனில் ஒருநூலா இரண்டு நூலா,
பத்திரண்டா யிரங்கோடி நூற்க ளன்றோ
பைந்தமிழர் கைவசத்தில் இருந்தி ருக்கும்;
வித்திடுவீர்!" என்றுரைத்தான். புலவ ரெல்லாம்
விழித்தெழுந்தே செழித்ததமிழ் வளர்க்க லானார்!

# மாடத்திலும் கூடத்திலும்

கூடத்தில் நின்றி ருந்தான்
　　கோவலன்; நிமிர்ந்து யர்ந்த
மாடத்தில் நின்றி ருந்தாள்
　　மாதவி! குன்றத் தென்றல்
ஆடிற்றாம்! அவள்பட் டாடை
　　அசைந்ததாம்! அவிழ வில்லை.
பாடிற்றாம் வீணை வண்டு!
　　பாடினாள் மையல் கொண்டு!

விண்கொண்ட சுடரோன் தூங்க,
　　வெண்ணிலா விழிக்க, விண்மீன்
எண்கொண்டு குளிர்ந்த வெள்ளி
　　இரவிலே இடையி லாதாள்
கண்கள்போய் அவனைத் தீண்ட,
　　காதல் நோய் கொண்டோன் வேண்ட,
எண்ணங்கள் ஏணி யாக
　　இருவரும் ஒருவ ரானார்!

தோணிக்கோர் துடுப்பே போன்றான்
தொகைமலர் மாதை நோக்கி
ஆணுக்குப் பெண்ணே போர்வை
அணங்குக்கும் ஆணே போர்வை
மாணிக்க மணியே மாடே
மலர்ந்தபூக் காடே! என்றான்.
நாணிக்கண் புதைத்த நங்கை
நானென்ன மாடோ? என்றாள்.

மாடென்று சொன்னேன், மின்னும்
மங்கையே பொங்கி விட்டாய்
மாடென்னும் தமிழ்ச்சொல் லுக்கு
மற்றுமோர் பொருளு முண்டு.
மாடென்றால் செல்வம், கண்ணே
வருந்தாதே! என்றான். பார்வைப்
பாடத்தின் தலைவி நெஞ்சம்
பாரியின் சுனையா யிற்றே!

நிறைந்தநாள் நிலவே! கேளாய்
நின் அங்கம் கட்டித் தங்கம்
குறுந்தொகைப் பற்கள் முத்தின்
குடும்பமே! நெருங்கி நீண்டு
நிறந்தரும் நினது கூந்தல்
நெடுந்தொகைச் செல்வம் அன்றோ
சிறந்தசெம் பொன்னே! சந்தச்
செந்தமிழ்ப் பண்ணே! என்றான்.

மாவென்றான். மையல் தையல்
மாவென்றால் பெருமை என்றாள்
மாவென்றான். செங்கை மங்கை
மாவென்றால் கருமை என்றாள்.
மாவென்றான். "குதிரை வண்டு
மாமரம்" என்றாள். நீதே
மாவென்றான். நான்மான் என்றாள்.
மானுக்கேன் ஆடை? என்றான்!

அடிப்படை மானங் காக்க
உடுத்துகின் றோமே யன்றி
உடையொடு பெண்ணோ ஆணோ
உலகினில் பிறப்ப தில்லை.
இடையிலேற் பட்ட தேஇவ்
வழக்கமென் றெடுத்துக் காட்ட
இடையினில் ஆடை கட்டிக்
கொண்டுளேன் என்றாள் கோதை!

மாடத்தை விட்டு, வேங்கை
வீரனும் வீணை மாதும்
கூடத்தை அடைந்தார் அங்கே
குலவினார் நிலவில். எங்கோ
ஓடிப்போய் விட்ட தேயென்
ஒளியிதழ் வண்ணம் என்றாள்.
தேடிப்பார் விழியில் என்றான்.
சிவந்தவள் சிரிக்க லானாள்.

ஆராத இயற்கை என்னும்
அவாநமக் கில்லை என்றால்
வேரோடுங் காத லேது?
வினாவிடை விளக்க மேது?
தேரோடும் பூம்பு காரின்
செல்வமே தேனே மானே
நீரோடும் பொன்னி யாறே
நீயின்றேல் எனக்கே தின்பம்!

பலர்புகழ் மதியே நின்னைப்
பார்க்கநிம் மதியே! நெய்தல்
நிலம்வளர் கடலே! மின்னும்
நின்விழி கடலே! முன்னோர்
வலஞ்சுழித் தெழுதி வைத்த
வளர்தமிழ் எழுத்தே!" என்றான்.
சிலந்திநூல் இடையாள் கன்னம்
சிவந்தது நாணத் தாலே!

# சித்தூர்ச் சாம்பல்

இந்தியரே! எச்சரிக்கை இதனைக் கேளிர்
இரண்டாவ தலக்சாண்டார் நான்தான், உங்கள்
தந்திரமோ மந்திரமோ தவமோ என்னைத்
தடுப்பதற்கு முடியாது! பிறந்த நாட்டில்
பந்தடித்தேன்; பாய்ந்தடித்தேன் பலரை; வாழைப்
பழம்போன்று வடநாட்டை விழுங்கு தற்கு
வந்திருக்கும் எனைநீங்கள் எதிர்ப்பீ ராயின்
மறுநாளின் உதயத்தைக் காண மாட்டீர்!

பலாக்காட்டில், நிழல்தனிலே குட்டியோடு
படுத்துறங்கும் வரிவேங்கைப் புலியின் வாலை
மிலாரென்று தவறாக எண்ணிக் கொண்டு
மிதிக்காதீர் குதிக்காதீர் குதித்தால் கொல்வேன்
சலாலுத்தீன் கில்ஜியென்பான் முதலில் வந்து
சந்தித்தான் சாதித்தான்; அதற்குப் பின்னர்
அலாவுத்தீன் வந்துள்ளேன் என்றே நாட்டில்
அனைவரையும் அதட்டியவன் அல்லா வுத்தீன்.

அல்லாவு தீன்தீய தீயைப் போன்றோன்
அன்னவனோ மலந்தேடும் ஈயைப் போன்றோன்.
பொல்லாதோன் கல்லாதோன் பொய்மை பேசிப்
பொழுதினையே கருக்கிவந்த புல்லன். தச்சன்
கொல்வானே நீள்மரத்தை அதுபோல் கத்திக்
கொலைசெய்தோன்; அக்கொடியோன் ஆண்ட நாளில்
எல்லோரும் அல்லலுற்றார்; சிரச்சே தத்தின்
எண்ணிக்கை ஏறியதாம் வயது போல!

வேல்மீதும் வாள்மீதும் போரின் மீதும்
வீரரெல்லாம் அன்றாடம் ஆசை வைப்பர்.
பால்மீது சேர்கின்ற பிரைமோர் போன்று
பரவுகின்ற காமத்தால் கருகி வந்தோன்
தோல்மீதும் தொடைமீதும் சித்தூர் மன்னன்
தொட்டணைத்த கட்டழகி முகத்தின் மீதும்
கால்மீதும் கண்மீதும் மூடும் மேடைக்
கனிமீதும் ஆசைவைத்தான் படையெ டுத்தான்.

கூற்றுவினை ஆடவர்கள் என்னும் வீரர்
கொதித்தெதிர்க்க சித்தூரின் கோட்டை வேந்தன்
ஆற்றருகில் சென்றுநின்றே அவனைத் தாக்க,
அலாவுத்தீன் பீம்சிங்கை நோக்கி, 'அந்த
மாற்றறியாப் பசும்பொன்னை நின்னைக் கொஞ்சம்
மதுமதியை ஒருமுறைநான் பார்த்தால் போதும்
தோற்றவன்போல் திரும்பிப் போய்விடுவேன்' என்றான்.
தூங்காத வாள்வேந்தன் ஒப்புக் கொண்டான்.

இலைகளுக்குப் பின்புறத்தில் காய்கள் போன்றும்
இருள்முகிலின் பின்புறத்தில் நிலவு போன்றும்
மலைகளுக்குப் பின்புறத்தில் சிற்றூர் போன்றும்
மறைவாக அரண்மனையில் வாழ்ந்து வந்த
கலைமடந்தை அக்கொடியோன் காண வேண்டிக்
கண்ணாடி முன்வந்து நடுங்கி நின்று
தலையெனுந்தா மரைகாட்டி அல்லி காட்டித்
தங்கத்தேர் வடிவழகைக் காட்ட லானாள்.

கண்ணேபோற் சிறந்தவளைச் சித்தூர் முத்தைக்
கண்ணாடி தனிற்கண்டு காமங் கொண்டு
புண்ணானான். புதுக்காம ராச னானான்.
பூவையிவள் தேவையிவள் இப்பூ வுக்கோர்
வண்டாகி விடவேண்டும் இன்றேல் என்றன்
வாழ்நாளை விடவேண்டும்; இவள்கைப் பட்டால்
மண்மேடும் பொன்மேடாய் மாறும்! வான
மழைத்துளியும் வலம்புரிமுத் தாக மாறும்!

நிழலழகே நெஞ்சத்தை மயக்கு மாயின்
நேரழகு வாட்டாமல் விடுமோ என்னை?
மழையழகுக் கூந்தலில்மென் மலர்கள் சூட்டி
மடிநடுவில் உடைபோன்று படிந்து மூங்கிற்
கழியழகுத் தோள்தொட்டுத் தழுவி இன்பக்
கடலாடும் நாளெந்நாள் என்றே எண்ணி
விழிகளினால் அவளழகைக் கௌவிக் கொண்டு
வெறியோடு விடைபெற்றான் புடைவைப் பித்தன்.

வடிவழகன் பீமன்சிங் அலாவு தீனை
வழியனுப்பி வைப்பதற்கு வந்த போது
கொடியவனோ அன்னவனைச் சிறையில் வைத்தான்.
குலக்கொடியோ மன்னவனை மறுநாள் அந்தி
முடிவதற்குள் தந்திரமாய் மீட்டு வந்தாள்.
முன்கோபம் பின்கோபம் இரண்டும் பொங்க
நெடுங்குரலோன் அலாவுத்தீன் சித்தூர் நோக்கி
நிலம்நெளியப் பெரும்படையை நடத்திச் சென்றான்.

ஆரணங்கை அடைவதற்கு மீண்டும் யுத்தம்.
ஆயுதங்கள் தரும்சத்தம் கத்தி முத்தம்.
வீரரெல்லாம் தாய்நாட்டுக் காகச் செத்தார்.
வேல்வேந்தன் தன்மனைவிக் காகச் செத்தான்.
பாரதப்பெண் பத்மினியோ, கற்பைக் காக்கப்
பழுத்தபலாச் சுளைத்தீயில் பாய்ந்து செத்தாள்.
சீரமைந்த மாணிக்க மகுட மங்கை
செத்ததற்குச் செத்திட்டார் சித்தூர்ப் பெண்கள்!

# காதல் மேகம்

மூவருலா நூல்படித்துக் கொண் டிருந்தாள்
　　மூத்தநிலா வெளிச்சத்தில் மோக னாங்கி.
ஆவலொடு காணவந்தோன் காள மேகம்
　　'ஆரணங்கே' என்றழைத்தான் பேசவில்லை.
காவியமே கடல்நீரை உந்தித் தள்ளும்
　　காவிரியே கதவுதனைத் திறவாய் என்றான்.
பாவையவள் தெருக்கதவைத் திறந்தா ளில்லை!
　　பழம்பழுத்த வாய்திறந்தும் பேச வில்லை!

மங்கலப்பொன் போன்றவளே! ஏனோ இந்த
　　மனமாற்றம் எனக்கேட்க நங்கை நோக்கி
இங்கிருப்போர் எனையிகழா திருக்க வேண்டின்
　　எம்மத்தில் நீர்சேர வேண்டும்; இன்றேல்
தங்களையான் இனித்தீண்டேன் வேண்டேன்' என்றாள்.
　　தமிழ்க்கவிஞன் திருநீற்றுச் சைவ னானான்.
செங்கமலம் தெருக்கதவைத் திறக்க நெற்றிச்
　　சீர்திருத்தம் செய்துகொண்டோன் உள்ளே வந்தான்!

*இருநெஞ்சம் கொண்டவனின் மகளே! தெங்கின்*
*இளநீரே இனிநமக்குள் ஆண்பால் பெண்பால்*
*பிரிவன்றி வேறெந்தப் பிரிவு மில்லை*
*பேதமில்லை இருசமய விளக்க மில்லை*
*திருமங்கை ஆழ்வாரின் நெற்றிக் கோடு*
*தேவையில்லை நீதேவை என்ப தாலே*
*சரிஎன்னைப் பார்பெண்ணே எனக்குள் ளோடு*
*சம்பந்தம் உண்டதனால் நான்சம் பந்தன்!*

*மதமென்ன மதம்பெரிய மதம்!மா துன்சம்*
*மதமிருந்தால் எனக்கதுவே போதும்; புத்த*
*மதமென்ன புத்தமுத மோ!கௌ மார*
*மதம்சமணம் இருளறுக்கு மோ!எல் லாம்வாய்*
*மதமன்றி வேறென்ன? உயிரெ ழுத்து*
*வந்தால்குற் றியலுகரம் மெய்விட் டோடும்.*
*மதமெல்லாம் பகுத்தறிவு வளர்ந்தால் ஓடும்.*
*மதிபொங்கப் பொங்கவெறி மதங்கள் மங்கும்!*

*இரட்டையர்நாம் இணையெதுகை இனிநாம் நீயோர்*
*ஈரவயல் நானோர்ஏர் உழவன்; கட்டில்*
*சரித்திரத்தின் சாசனமே அன்-அம் என்னும்*
*சாரியையே! தொடுபதமென் றழைக்கும் சோறே!*
*பருப்பளவு குற்றத்தை இந்த நாடு*
*பனையளவாய்ப் பேசுமென்ப தறிவேன்; இந்தக்*
*குருட்டுலகம் குறும்புலகம் இனிமேல் என்னைக்*
*குறைகூறும் கூறட்டும் கவலை யில்லை.*

எப்போதும் இனிப்பவளே! 'ழ'கரம் என்னும்
எழுத்தேபோற் சிறந்தவளே! பொதுச்சீர் மாதே
உப்பே! பெண் ஓவியமே தலைமை தாங்கும்
உவமையணி போன்றவளே! எனக்கு வாய்த்த
முப்பாலே! கரிக்காத கடலே செம்பொன்
முத்திரையே முழுமதியே என்றன் வாய்க்குத்
தப்பாத மூவகைச்சீர் கனியே! சேற்றுத்
தாமரையே கூந்தல்கொண்ட பிறையே கேளாய்.

தென்கடலில் முத்திருக்கும் செல்வ மேநீ
திறக்கும்வாய் வாசலிலே முத்தி ருக்கும்
தென்மலையில் மணக்கும்சந் தனமி ருக்கும்
சிற்றின்பத் தனமுன்ற னிடமி ருக்கும்
தென்திசையில் குளிர்தென்றல் படுத்தி ருக்கும்
செவ்வல்லி நின்உதட்டில் படுத்தி ருக்கும்
தென்னகத்தில் பேரறிவு மிகுந்தி ருக்கும்
தேன்சுவைநின் புதுப்பேச்சில் மிகுந்தி ருக்கும்!

நிதங்குளிரும் நிலாமுகம்; அல்லிப் பூவை
நினைவூட்டும் வாயிதழும்; மெல்ல மெல்ல
ஒதுங்குபதங் கொண்டகொடி இடையும் பார்வை
உணர்ச்சிகளும் ஒய்யார நடையும் காலின்
சதங்கைதரும் சங்கீதச் சுவையும் தேமாந்
தளிர்நிறமும் தமிழமுதப் பேச்சும் பூச்சும்
மதங்களையே நம்பாத என்றன் நெஞ்சை
மயக்குதடி, நச்சினவர்க் கினிய மாதே!

முத்திநெறி யறியாதார் மூர்க்கர் என்றால்
முத்தநெறி அறியாதார் வீண ரன்றோ?
கத்திநெறி வீரரிடம் போய்ச்சே ரட்டும்!
காதல்நெறி நம்நெஞ்சில் உறவா டட்டும்!
பக்திநெறி தலைநரைத்த பின்னர் வந்து
பதியட்டும் இதயத்தில்! மெத்தை ஏறும்
வித்தையெலாம் கற்றவளே! திருவா னைக்கா
வில்விளங்கும் திருவில்லே தஞ்சை நெல்லே!

பூவெல்லாம் பொன்னேநின் உடலில் மீது
பூத்திருக்க நீயவற்றைப் பார்த்தி ருந்தும்
காவெல்லாம் சென்றுசென்று நின்று நின்று
கால்நோகப் பூப்பறித்துச் சூடும் பெண்ணே!
நாவில்நீ நெஞ்சில்நீ அஞ்ச னாட்சி
நல்லதமிழ்ப் பாடல்நீ அன்றோ என்றான்.
ஓவம்மாள் ஈன்றமகள் சிரிப்பை ஈன்றாள்.
உடம்படுமெய் இலக்கணத்தை இரவில் கண்டார்.

# நல்ல தீர்ப்பு

பாதிநிலா வடிவமுள்ள படிகள்; அந்தப்
படிகளின்மேல் காவலர்கள்; கற்று வல்ல
மூதறிஞர் ஓர்பக்கம் மக்க ளோடு
முழுத்திருடன் ஓர்ப்க்கம் அவனை நோக்கிக்
காதகனா நீ என்று கேட்டான் சீதக்
காதியெனும் காயற்பட் டினத்து வள்ளல்.
காதுடையேன் அகமுடையேன் எனவே யானோர்
காதகனே என்றுரைத்தான் அந்தக் கள்வன்.

திருடியவன் திருடியவன் என்கின் றீர்கள்
திருடன்தான் திருடன்தான் மறுத்தே னில்லை
திருடுவது குற்றமெனில் செல்வ மெல்லாம்
சிலரிடம்போய்ச் சேருவதும் குற்ற மாகும்.
அரசியலின் அதிபதிகள் ஏற்றத் தாழ்வை
அகற்றாமல் எல்லார்க்கும் எல்லாம் ஈந்தே
சரிசமமாய் நடத்தாமல் ஏய்க்கு மட்டும்
தரணியிலே குற்றங்கள் நிகழ்ந்தே தீரும்!

தென்கோடித் திருடன்யான் ஆல யத்தில்
திருடியுள்ளேன் திருமங்கை ஆழ்வார் போலே!
அன்றாடம் கன்னியரைக் கற்ப ழித்தே
ஆனந்தம் கண்டோன்யான் கோபாட் போலே!
முன்கோபம் கொண்டவன்யான் பாண்டி நாட்டு
முடிவேந்த னாம்தந்து மாறன் போலே;
பொன்னாசை எனக்குண்டு வணிகர் போலப்
புகழ்வெறியும் எனக்குண்டு சேரர் போல!

வில்லூரில் விசலூரில் தித்தன் என்பான்
வீற்றிருந்த உறையூரில் வேம்பத் தூரில்
மல்லூரில் பரஞ்சோதி முனிவர் வாழ்ந்த
மறைக்காட்டில் குளிர்தூங்கு குற்றா லத்தில்
பல்லூரில் திருடியவன் இன்றோ காயற்
பட்டினத்தில் அகப்பட்டேன் வெட்டுப் பட்டேன்.
நல்லோரே நான்நொண்டி யாகி விட்டேன்
நாற்சீரில் கடைசிச்சீர் குறைந்தாற் போல!

பட்டினத்தார் துறவறநூல் பாடி வைத்த
பாட்டினத்தார்; மங்கையரோ மென்மை யான
பட்டினத்தார்; தாலாட்டுப் பாடல் பாடும்
பாட்டினத்தார்; பூமானே நீயோ காயற்
பட்டினத்தார்; காப்பியங்கள் இயற்று கின்ற
பாட்டினத்தார்க் குதவிசெய்யும் பட்டி னத்தார்!
பட்டினத்தார் கொள்கையினைத் தாக்கித் தாக்கிப்
பாட்டெழுதும் நான்நாகைப் பட்டி னத்தான்.

திருடுகின்ற இருள்மனிதன் எனினும் யானோர்
தேன்கவிஞன் என்நெஞ்சில் எழுந்த பாடல்
அருமருந்து போல்நோயை நீக்கும் பாடல்
அப்பாடல் குப்பைக்குப் போகாப் பாடல்
பெருமையில்லாப் பாட்டெழுத மாட்டேன் என்னைப்
பின்பற்றி எழுதுதற்கோர் கூட்ட முண்டு.
கருவடைந்த பெண்பெறுவாள் குழந்தை; என்றன்
கவிதைகளும் என்புகழ்க்குத் தாயாய் நிற்கும்.

சுனையொன்றில் பூத்தபல மலர்கள் போன்று
சூழ்ந்துள்ள புலவர்களே நீங்கள் எல்லாம்
பனியென்பீர் 'நிலாவழிக்கும் வியர்வை' என்பேன்.
பாடையென்பீர் 'காற்கழிந்த கட்டில்' என்பேன்.
கனியென்பீர் 'விதைக்குடும்பம்' என்பேன் நீலக்
கடலென்பீர் 'மண்மகளின் ஆடை' என்பேன்.
தனிநின்று புதுமைபல செய்யும் என்னைத்
தக்கையென்று நினையாதீர் என்றான் கள்வன்.

பொன்பெற்ற நிறம்பெற்ற சீதக் காதி
புகழ்பெற்ற புதுக்கள்வன் முகத்தை நோக்கி
கன்னக்கோல் கள்வன்நீ எனினும் வெல்லும்
கல்விக்கோல் கவிஞன்நீ இந்த நாட்டில்
உன்னைப்போல் கற்றோரே குற்றஞ் செய்தால்
உணராதார் தீமைகளேன் செய்ய மாட்டார்!
இன்றைக்கு நாம்செய்யும் தீமை நம்மை
என்றேனும் கட்டாயம் சுட்டே தீரும்!

வியக்கின்றேன் குற்றத்தைக் குணத்தை யெல்லாம்
வெளிப்படையாய் நீயுரைத்தாய் பாபர் போல.
மயக்கத்தால் வறுமையினால் புவியில் வாழும்
மாந்தரெலாம் குற்றங்கள் புரிவ துண்டு.
நயத்தக்க நாகரிகம் வளர வேண்டி
நானுன்னை மன்னித்தேன். இனிமே லேனும்
செயத்தக்க செய்திடுக ஈங்க மர்ந்து
செந்தமிழ்க்குப் பெருந்தொண்டு புரிக என்றான்.

எண்சேர்ந்த நெஞ்சத்தான் சீதக் காதி
இவ்வாறு கூறிடவே அவனை நோக்கிப்
பண்சேர்ந்த பைந்தமிழில் புலமை பெற்றோர்
பசிதீர்த்து வருபவரே இதுநாள் மட்டும்
மண்சேர்ந்த குடிசையிலே வாழ்ந்த என்னை
மதிசேர்ந்த புலவரொடு சேர்த்து வைத்தீர்
கண்சேர்ந்த ஒளிபெற்றேன் பெருமை பெற்றேன்
கனிசேர்ந்த சுவைபெற்றேன் என்றான் கள்வன்.

# குமணன்

வான்மீது செங்கதிரோன் நகர்ந்த நேரம்
மலைமூங்கில் தலையசைத்த பாதை யோரம்
பேன்பார்த்த கருங்குரங்கைத் தூக்கி வைத்துப்
பெருமையோடு தலையசைத்த மரங்கள் ஓர்பால்
தேன்வாழை செவ்வாழை பாயும் வேங்கை
சிற்றடிபோல் அவ்வாழை மரத்தின் காய்கள்
மான்கூட்டம் நீரோடை ஓட்டம் ஓர்பால்
மலைப்பன்றிப் போர்க்காட்சிப் படலம் ஓர்பால்.

பம்பம்பம் பம்பம்பம் பம்பம் என்றே
பம்மையெலாம் ஒலிசெய்ய மலைக ளோடு
சம்பந்தங் கொண்டகுளிர் அருவி யெல்லாம்
தந்தத்திந் தோமென்றே ஓசை செய்யக்
கொம்புத்தேன் வடித்துக்கொண் டிருந்தாள் ஓர்பெண்.
குமணவள்ளல் வெறுந்தரையிற் படுத்தி ருந்தான்.
சம்பத்தைப் பெறவேண்டிச் சாத்தன் என்பான்
தனியேயவ் வழியூாக நடந்து சென்றான்.

நடையதுகற் றிடுமுன்பே கொடைகற் றோனை
நற்புலவன் பெருஞ்சாத்தன் காட்டிற் கண்டான்.
கொடியசையக் குரலோங்க நாட்டை யாண்ட
குமணவள்ளல் தன்தம்பி சூழ்ச்சி யாலே
முடியிழந்து முன்னேற்ற மிழந்து வேங்கை
மூச்சுவிடும் கானகத்தில் வாடக் கண்டு
தடையுடைய வாழ்வுடையோன் கலங்கி நின்றான்.
தமிழ்க்கவிநான் உமைக்காண வந்தேன் என்றான்.

வேல்வேந்தன் அன்னவனை உற்று நோக்க
வெப்பத்தால் வாடியவன் அவனை நோக்கிப்
பால்தீர்ந்த முலைசுவைத்தும் பசிதீ ராத
பாலகனோ தன்தாயின் முகத்தை நோக்க
நூல்நூத் னம்போலே இளைத்த மங்கை
நூறுமுறை என்முகத்தை நோக்கி நிற்க
கால்நோக ஓடிவந்தேன் குமண மன்னா
கண்ணீரை உம்மிடத்தில் காட்ட வந்தேன்.

பலசுளைகள் நிறைந்திருக்கும் கார ணத்தால்
பலாப்பழத்தைப் பலவென்றார். அதுபோல் மங்கை
பலபுதல்வர் தமையீன்றாள் என்ப தாலே
பலாமனைவி என்மனைவி. மூத்துப் பூத்த
தலையுடையார் எம்தந்தை அங்க மெங்கும்
தசைவற்றி நரம்பெழுந்த தாயே என்தாய்
இலர்பலராய் இருக்கின்றோம் கண்ணீர் ஒன்றே
எங்கட்குக் காவேரி என்றான் சாத்தன்.

நெட்டைமரக் கூட்டஞ்சேர் காட்ட கத்தே
நின்றிருந்த தமிழ்க்குமணன் அவனை நோக்கி
எட்டடுக்கு மாளிகையும் நகரும் நாடும்
என்வசத்தில் இருக்கையில்நீ வந்தி ருந்தால்
ஒட்டகத்தின் காலடியை ஒத்த முத்தும்
ஒளிசிறந்த செம்பொன்னும் தந்தி ருப்பேன்
திட்டமெல்லாம் நிலநடுக்கத் தாலே சாய்ந்த
தேராகி யிருக்கையில்யான் என்ன செய்வேன்!

நன்மைநிலை அனைத்தையுமே இழந்தோன் என்னை
நாடிவந்த நற்கவியே நீயும் நானும்
முன்பனியும் பின்பனியும் ஆனோம். ஈர
முகில்மறைத்த நிலவானோம் கவிக்கோ மானே
என்னிடம் நீ ஏதேனும் பெறலாம் என்றே
இன்றன்றோ வந்துள்ளாய் என்செய் வேன்யான்!
ஒன்றுரைப்பேன் அவ்வாறே செய்க" என்றான்.
ஓங்குபுகழ் பாவேந்தன் உரைப்பீர் என்றான்.

விலைமிகுந்த முடிசூடி மகிழ்ச்சி யோடு
வீற்றிருக்கும் என்தம்பி யிடத்தில் என்றன்
தலையதனைத் தந்திட்டால் கோடி செம்பொன்
தந்திடுவான் தரித்திரமும் தரித்தி ராது.
நிலையுயர நீயுயர நினது நாட்கள்
நீடிக்க நெடுந்தமிழ்க்குத் தொண்டு செய்யத்
தலையதனைத் தருவதற்குச் சம்ம தித்தேன்
தமிழுணர்ச்சிப் பாவலனே கொய்க என்றான்.

மதிமிகுத்தோர் தமைமதிக்கும் மன்னா நின்னை
வரிவேங்கை கொல்லவரின் உடனே என்றன்
சதைகொடுத்துச் சாவேனே யன்றி உம்மைச்
சத்தியமாய்ச் சாகவிடேன். கோட்டைச் செந்நெல்
விதைகிடைத்தால் காப்பாற்ற வேண்டு மன்றி
வேகவைத்தால் விளைவேது? என்றன் கண்ணீர்
நதிநிறுத்த நினைக்கின்றீர் உமது மூச்சை
நான்நிறுத்திப் போவதற்கோ இங்கு வந்தேன்.

கண்ணமைந்த முரசொலியோ காதங் கேட்கும்
கருமுகிலின் ஓசைபல காதங் கேட்கும்
மண்ணமைந்த மத்தளத்தில் இருகை வைத்து
மத்துமத்தென் றேவோசை எழுப்பு வோரும்
பண்ணமைந்த யாழெடுத்து மீட்டு வோரும்
பாவலரும் நினைப்புகழ்ந்து பேசும் ஓசை
விண்ணமைந்த வையமெலாம் விரைந்து கேட்கும்
வேந்தேயான் வருகின்றேன் என்றான் சென்றான்.

(மூலம் : புறநானூறு - 164)

# தலைமலைத் தேவன்

சந்தனச் சோலை மூதூர்
தலைமலை கண்ட தேவன்
அந்தநாள் கவிஞன். அன்னோன்
அந்தகக் கவிஞன். பாட்டுப்
பந்தயக் கவிஞன். நீதி
பாடிய கவிஞன். சொந்தச்
சிந்தனைக் கவிஞன். பாடல்
திருடாத கவிஞன் ஆவான்!

தாய்மொழிப் பற்று மிக்க
தலைமலைத் தேவன் ஓர்நாள்
நாய்துயி லறிந்தும் நெய்தல்
நகர்துயி லறிந்தும் தொட்டில்
சேய்துயி லறிந்தும் அவ்வூர்ச்
சித்திரப் பரத்தை வீட்டின்
வாய்தனில் கதவை நீக்கி
வளமனை உள்ளே சென்றான்.

மென்புறாப் போன்ற வேசி
　　மெத்தையில் படுத்தி ருக்க
அன்னவன் கட்டி லின்கீழ்
　　அசைவின்றிப் பதுங்கிக் கொண்டான்.
இன்னிசை வீணை ஓர்பால்
　　இருந்தது. விளக்கும் வீடும்
மின்னின. வெண்பா ஒன்றை
　　விலைமகள் பாட லானாள்.

வெண்பாவை முடிப்ப தற்கு
　　விலைமகள் திணறும் போது
கண்பாவை இழந்த கள்வன்
　　காய்ச்சீரால் நடந்து சென்ற
வெண்பாவைப் பூர்த்தி செய்து
　　வெற்றியைத் தேடித் தந்தான்.
வெண்பாவை விளக்கைத் தூண்டப்
　　பிடிபட்டான் பாட்டுப் பித்தன்!

சாயலைக் காட்டும் காம
　　சமுத்திரப் பரத்தை ஆங்கோர்
ஆயிரம் கேள்வி கேட்டாள்.
　　அதற்கவன் விடைகள் தந்தான்.
தாயினும் சிறந்த தான
　　தமிழ்கற்றும் சிலையில் லாத
கோயில்போல் ஆனேன் என்று
　　கூறினான் இரக்கங் கொண்டாள்!

நிதியில்லை எனக்கோர் காணி
　　நிலமில்லை வீடு வாசல்
எதுவும்நான் பெற்றே னில்லை
　　என்பது வறுமை அன்று.
மதிநுட்பம் இலாமை ஒன்றே
　　மாந்தர்க்கு வறுமை யாகும்.
இதைநன்கு புரிந்து கொண்டால்
　　இல்லையென் றேங்க மாட்டார்!

இருப்பினும் பொருளும் பொன்னும்
　　இல்லாரைப் பார்த்துப் பார்த்துச்
சிரித்திடும் உலகம் என்னும்
　　செய்தியும் அறிவேன் என்றாள்.
நெருக்கடி தீர்த்து வைத்தால்
　　நிச்சயம் வாழ்வேன் என்றான்.
அரித்திடும் வறுமை தீர்ப்பேன்
　　அஞ்சாதீர்! என்றாள் வஞ்சி!

மையணி மடந்தை சொன்ன
　　வார்த்தையைத் தேவன் கேட்டுத்
தையெனக் குளிர்ந்தான். பின்னர்
　　தமிழ்பற்றிப் பேச லானார்.
ஐயென விரைந்து தோன்றும்
　　அழகுவெண் ணிலாவைப் போன்றாள்
நெய்யமு தளித்தாள் உண்டான்.
　　நேரிழை அவனை நோக்கி–

முப்பாலைத் தந்தான் பூத்து
மூத்தவ னான தேவன்.
அப்பாலோர் தேவன் வந்தான்.
அன்னவன் 'மணநூல்' தந்தான்.
திப்புத்தோள் கருவூர்த் தேவன்
'திருவிசைப் பாக்கள்' தந்தான்.
இப்போது நீரோர் தேவர்
என்பதால் எதிர்பார்க் கின்றேன்.

நாராய ணாவென் பார்க்கும்
நமசிவா யாவென் பார்க்கும்
தீராத வினையைத் தீர்க்கும்
தேவனே எனச்சொல் வார்க்கும்
ஊராரும் எங்கள் வீட்டில்
உள்ளாரும் அடிமை, செய்யுள்
ஆராயும் பாவா ணர்க்கே
அடிமைநான் என்றாள் ஈந்தாள்!

# சொல் விளக்கம்



உள்ளே. . .

கலப்பை

பாம்பு

அம்மி

# கலப்பை

கருமைபெற்ற கடல்நீரும் நீல வானும்
கைகோத்துக் கொண்டிருக்கும் இடத்தை விட்டுப்
பெருமைபெற்ற செங்கதிரோன் மேற்கே சென்றான்.
பேச்சளந்து கொண்டுசிலர் கிழக்கே சென்றார்.
உரிமைபெற்ற வரிவண்டு பூத்த பூவை
ஊதிற்று. நீராடப் பெண்டிர் சென்றார்.
எருமைபெற்ற ஏருழவன் குப்பன் என்பான்
ஈரவயல் வெளிநோக்கி விரைந்து சென்றான்.

தங்காமல் தயங்காமல் வாய்க்கால் வெள்ளம்
ததும்பிவழிந் தோடிவரக் கண்ட குப்பன்
வங்காளக் கடல்நோக்கி ஓடும் நீரே
வயலுக்குப் போவென்று பாய்ச்ச லானான்.
சங்கீதக் குரலுடையோன் எட்டி என்பான்
தனித்தமிழில் மருதப்பண் பாட, வேலூர்
வெங்கோடன் வெண்காந்தள் அரும்பு போன்று
விளங்கியகூர் கொழுமுனையால் சேறு செய்தான்.

வெடித்திருந்த வயலெல்லாம் தண்ணீ ராலே
 மெய்யெழு த்தின் முன்னுயிர்போல் பொருந்திக் கொள்ள
தொடிப்புழுதி எருவிட்ட வயலில் ஏரின்
 துணைகொண்டு தொழிலுழவர் வேலை செய்தார்.
படிப்படியாய் வெயிலேறச் சேறு செய்தோர்
 பலர்தலையில் சூடேறக் கண்ட குப்பன்
தடித்ததொரு மரத்தின்கீழ் வந்த மர்ந்தான்.
 தையானும் மெய்யானும் ஆங்கே வந்தார்.

ஊருக்கும் உலகுக்கும் வாழ்வ ளிக்கும்
 உழவரெல்லாம் வாய்ப்பேச்சை வளர்க்கலானார்.
ஈரத்தின் வரலாறே மேக மாகும்.
 ஏருழவின் வரலாறே வைய மாகும்.
பாருக்குச் சோறளித்துப் பாது காக்கும்
 பயிர்த்தொழிலே உயிர்த்தொழிலாம் என்று வீர
சூரப்பன் விரிவாக விளக்கிக் கூறித்
 தொண்டைக்கு நீர்பாய்ச்சிக் கொண்டி ருந்தான்.

உழவனுக்கே நிலம்சொந்தம் என்றி ருந்தால்
 உலகத்தில் நமைப்போன்ற உழவ ரெல்லாம்
அழுபவர்கள் ஆவோமோ? ஒருகூட் டத்தார்
 அனுபவிப்போர் ஆவாரோ? எறிந்த கல்போல்
விழுபவர்கள் ஆவோமோ? ஏய்ப்போர் நம்மை
 மிதிப்பாரோ படித்துறைப்போல் என்றான் எட்டி,
முழுவுரிமை பெற்றாக வேண்டும் இன்றேல்
 முன்னேற்றம் முயற்கொம்பே! என்றான் ஏவி.

சாவதெனில் உரிமைக்குச் சாவ தன்றோ
தமிழ்நாட்டின் வரலாற்று வீரமாகும்
கூவுவதிற் பயனில்லை என்றான் குப்பன்.
குறிஞ்சியென்பான் "ஆமப்பாஆம்ஆம்" என்றான்,
நாவரசன் கொக்கரித்தான் அப்போ தங்கே
நல்லூரான் கலப்பையொடு வந்து சேர்ந்தான்.
ஏவியெனும் பெருடையான் "கலப்பை என்றே
ஏனிதனை அழைக்கின்றோம் குப்பா" என்றான்.

நிலத்திலுள்ள மேல்மண்ணைக் கீழ்மண் ணோடு
நீண்டுள்ள கூர்முனையால் ஒன்று கூட்டிக்
கலப்புதனை உண்டாக்கும் கார ணத்தால்
கலப்பையென்று பெயரிட்டார். கலப்பை மூலம்
நிலத்தில்நாம் உண்டாக்கும் கலப்பை; மாந்தர்
நெஞ்சத்தில் உண்டாக்கி விடுவோ மாயின்
கலப்புமணம் உருவாக வழியுண் டாகும்
கலப்புமணத் தால்சாதி செத்தே போகும்!

என்றுரைத்தான் கல்லாடம் கற்ற குப்பன்.
எல்லோரும் தலையசைத்தார். மீண்டும் குப்பன்
குன்றுடுத்த நம்நாட்டில் முன்னர் இந்தக்
கொடுமையெலாம் இருந்ததில்லை, இவற்றை எல்லாம்
தின்றுவிட்டுத் தூங்குகின்ற தமிழர் கட்குத்
தீவிரமாக எடுத்துரைக்க வேண்டும் என்றான்.
ஒன்றுபட்டு வாழ்வதற்குத் தடையாய் நிற்கும்
ஒருகோடி வேற்றுமையை ஒழிப்போம் என்றார்.

# பாம்பு

கொக்கறுகோ, கொக்கறுகோ, கொக்கொக் என்றே
　　கூவிற்றுத் தீக்குடுமிச் சேவல் அந்தச்
சொக்கழகி விழித்தெழுந்தாள் 'வீட்டு வேந்தன்'
　　சொக்கனென்பான் 'விழிவாசல்' திறந்தா னில்லை.
பக்குவமாய் நிழல்தனிலே கனிந்த வாழைப்
　　பழம்போன்றான் அன்னவனைத் தொட்டெ ழுப்பச்
சொக்கனென்பான் புரண்டபடி விழித்தெ ழுந்தான்.
　　சூரியனோ கருக்கிருட்டைக் கிழிந்தெ றிந்தான்.

படுக்கைதனை விட்டெழுவே விரித்த பாயைப்
　　பாவையவள் மெதுவாக சுருட்ட லானாள்.
வடித்ததமிழ் போன்றவளைச் சொக்கன் நோக்கி
　　வானவரம் பன்நாட்டில் பூத்த பூவே!
அடிக்கடிநான் செஞ்சுருட்டி பாடு கின்றேன்;
　　அநுதினம்நீ பாய்சுருட்டிப் பழகு கின்றாய்;
தொடுத்தமலர் வாடிவிடும் சங்கப் பாடல்
　　தொகைபோல்நின் மலர்மேனி வாடாதென்றான்.

சேவைக்குச் சிறந்தவளோ அவற்றைக் கேட்டுச்
சிரித்தபடி ஆடைதனைத் திருத்திக் கொண்டே
பூவென்றால் தாமரையே! என்றாள். அந்தப்
பூப்போன்று சிறந்தவள்நீ என்றான் சொக்கன்.
காவென்றால் குளிர்சோலை என்றாள். அந்தக்
காவைப்போல் காப்பவளே என்றான் சொக்கன்.
நாவுக்குப் பெருமைதரத் தக்க சொல்லும்
நற்குணமும் கொண்டவளோ நாணி நின்றாள்.

திண்ணையிலே அச்சொக்கன் வந்த மர்ந்தான்.
தித்திக்கும் செந்தமிழின் சாயல் கொண்ட
வண்ணமலர்ப் பெண்ணழகி நீர்தெ ளித்து
வாசலிலே கோலமிட்டுக் கொண்டி ருந்தாள்.
பண்ணைவயல் உழவரொடு பேசிக் கொண்டே
பாம்பாட்டி அவ்வாசல் அருகில் வந்தே
மண்ணமைந்த வாசலிலே மண்டி யிட்டு
மகுடியினால் அரவத்தை ஆட்ட லானான்.

அந்திமதி போன்றமங்கை அவனை நோக்கி
'அகடூரி' எனுமிந்த நாகப் பாம்பு
மந்திரத்திற் கடங்கிற்றோ? என்று கேட்டாள்.
மகுடிக்கே இந்நாகம் அடங்கிற் றென்றான்.
சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டும்
சர்ப்பங்கள் என்பாரே? என்று கேட்டாள்.
சிந்தனையைத் தேய்ப்பவர்கள் தீட்டி வைத்த
சிறுகதையே இச்செய்தி என்றான் அன்னோன்.

முன்னாளோர் பேரரசன் 'பரிச்சித்' தென்பான்
முர்க்கமுள்ள நாகத்தால் இறந்தான் என்பர்.
தென்னாலி ராமனென்பான் நாகம் தீண்டிச்
செத்தானாம்! இவ்வாறு தீமை செய்யும்
புன்னாகப் பாம்போடு பழகல் நன்றோ
புதியவனே சொல்?லென்று சொக்கன் கேட்க;
அன்றாடம் உறவாடிக் கொடுப்போர் இந்த
அரவத்தி னுங்கொடியோர் அன்றோ? என்றான்.

பாம்பென்னும் பெயரிதற்கு வந்த தேனோ
பாம்பாட்டி எனக்கேட்டாள். புற்றில் தூங்கும்
தாம்பென்னும் பாம்புதனை ஆட விட்டுத்
தன்பிழைப்பை நடத்தி வந்தோன் அவளை நோக்கி;
வேம்புக்கும் அரசுக்கும் வேர்கள் உண்டு
வேங்கைக்கும் மானுக்கும் கால்கள் உண்டு
பாம்புக்குக் காலில்லை எனினும் நாகப்
பாம்புக்கெல் லாம்புவியே பாத மாகும்!

பாம்பெல்லாம் பூமியையே பாத மாகப்
பயன்படுத்திக் கொள்ளுகின்ற கார ணத்தால்
பாம்புக்குப் 'பாதம்பூ' எனப்பே ரிட்டார்.
பாதம்பூ என்பதையே நாமெல் லோரும்
பாம்பென்று கூறுகின்றோம் தாயே என்றான்.
பாராட்டி னான்சொக்கன். அவனை நோக்கி
வேம்பத்தூர் நான்போக வேண்டும் என்னை
வெறுங்கையோ டனுப்பாதீர் ஐயா" என்றான்.

# அம்மி

தந்திபுரி சென்றிருந்த செவ்வேள்; அந்தி
சாய்கின்ற நேரத்தில் திரும்ப லானான்.
அந்திவிளக் கேற்றிக்கொண் டிருந்தார் பெண்டிர்.
அப்போது குளிர்வானும் விளக்கேற் றிற்று!
சந்திரனை அண்ணாந்து பார்த்தான் செவ்வேள்.
தமிழ்நிலவில் தன்மனைவி முகத்தைக் கண்டான்,
உந்தியெழும் உணர்ச்சியினால் கொந்த ளித்தான்.
உள்ளத்தால் இல்லத்து மாதைத் தொட்டான்.

அசைந்தாடும் பூங்கொடியைச் செவ்வேள் கண்டான்.
அக்கொடியில் எழில்நங்கை இடையைக் கண்டான்.
பசியோடு வந்தார்க்கு வெண்சோ றிட்ட
பாவையவள் புன்னகையை பூவிற் கண்டான்.
திசைதோறும் இல்லிறைவி வடிவம் கண்டான்.
செவ்வல்லி மலரில்வாய் மலரைக் கண்டான்.
இசைபாடும் கருங்குயிலின் குரலின் பத்தில்
ஏந்திழையின் தீந்தமிழ்த்தேன் குரலைக் கேட்டான்.

போர்வீரன் ஊர்திரும்பி வருதல் போலும்
புதுவெள்ளம் புரண்டெழுந்து வருதல் போலும்
ஊர்நோக்கி விரைந்தோடி இல்லம் வந்தான்.
ஓவியத்தைப் போன்றவளோ அவனை நோக்கி
நீர்வேண்டு மா?என்று கேட்க, "கண்ணே
நீரெதற்கு? நீயன்றோ வேண்டும்! உன்னைப்
பார்பார்பார் என்விழியில்" என்று கூறிப்
பழத்தோடு பழஞ்சேர்த்துச் செந்தேன் சாய்த்தான்.

சுட்டாகி வினாவாகி எச்ச மாகித்
தொகையாகித் தொடராகி ஆங்கே நின்ற
கட்டாணி முத்தழகி அவனை நோக்கிக்
"காதலரே! யானுங்கள் கைக ளுக்கே
எட்டாத கனியாக இருந்தி ருந்தால்
இப்படியா என் கன்னம் சிவக்கும்" என்றாள்.
பட்டாளப் பயிற்சிபெற்ற செவ்வேள், வாழைப்
பழத்தோட்டம் போன்றவளைக் கூர்ந்து நோக்கி...

பட்டாடை கட்டிகொண் டிருக்கும் நல்ல
பால்நிலவே! இளவேனிற் பூவே! உன்னைத்
தொட்டாலும் கைமணக்கும் உன்றன் பேரைச்
சொன்னாலும் வாய்மணக்கும்; ஆணும் பெண்ணும்
ஒட்டாமல் உறவில்லை கலப்பே யின்றி
உலகத்தில் தனிப்பொருளாய் ஏது மில்லை
வெட்டாமல் குளம் வருமோ? வயலில் நெல்லை
விதைக்காமல் முளைத்திடுமோ? என்றான் செவ்வேள்.

முதற்கட்டம் முற்றியது; மெச்சும் எச்சில்
முத்திரைக்குப் பின்னேதும் நிகழ வில்லை.
புதுச்சங்கத் தமிழ்போன்றாள்; வட்ட மிட்டுப்
பூத்ததொரு பூப்போன்றாள்; அருகில் நின்று
கதைசொன்னான், கட்டழகி கேட்டாள். பின்னர்க்
கருங்குழலி மிளகாயை அரைத்துக் கொண்டே
எதற்கத்தான் நாமிந்தக் கல்லை 'அம்மி'
என்கின்றோம் கூறுங்கள் என்று கேட்டாள்.

செம்பவழம் போன்றவளே மிளகாய் மஞ்சள்
சிறுபூண்டு போன்றவற்றைக் குழவிக் கல்லால்
அம்மியம்மி அரைத்திடவே உதவும் கல்லை
அம்மிக்கல் என்கின்றோம் அன்பே என்றான்.
கொம்புமலர் போன்றவளோ அதனைக் கேட்டுக்
குளத்துமலர் போலாகி "இனிமேல் நீங்கள்
அம்பலத்தில் கட்டுச்சோ றவிழ்ந்தல் போலே
அனைவர்க்கும் தமிழ்விளக்கம் தாரீர் என்றாள்.



# காரணப் பெயர்கள்

உள்ளே. . .


பிள்ளைப் பாண்டியன்

அசோகன்

அகலியை

# பிள்ளைப் பாண்டியன்

நீங்காத மானமும் தூங்காத வீரமும்
ஓங்கிய பெருமையும் ஒழுக்கமும் வாய்மையும்
பழுத்த புலமையும் பழுதிலாத் திறமையும்
உடையோ னாகி ஊராண்ட மன்னவன்
அதிவீர ராம பாண்டியன் ஆவான்.

புதுவீர ராமனாம் அதிவீர ராமன்
அறிஞராம் நிரம்ப அழகிய தேசிகர்
மாணவன்! தென்காசி நகரத்து மன்னவன்.

பொய்யிலாப் புலவரைப் போற்றிய புரவலன்.
கோட்டைக் கொத்தளம் குடிபடை சூழ்ந்த
நாட்டுக்கும் வேந்தன் பாட்டுக்கும் வேந்தன்!

ஒன்று கூட்டிய நட்பைப் பிரிக்கவும்
பிரிந்த நட்பினைப் பின்னர் சேர்க்கவும்
அறிந்தவன்; அரசியல் சாத்திரம் அளந்தவன்!

கூர்ம புராணம், இலிங்க புராணம்,
மாக புராணம், வாயு சங்கிதை,
கருவை அந்தாதி, காசி காண்டம்,
வெற்றிபெற உதவும் வெற்றி வேற்கை,
புலவர்க் கௌடத மாகிய நைடதம்,
என்னும் நூற்களை இயற்றிய கோமகன்!

ஆற்றல் மிகுந்த அதிவீர ராமனின்
இயற்பெயர் 'அழகன் பெருமாள்' என்பதாம்!

பால்வாய்ப் பசுந்தமிழ்ப் பாண்டிய மன்னனை
வல்லப தேவன் பிள்ளைப் பாண்டியன்
குலசே கரன்குண சேகர வழுதி
செந்தமிழ் வளர்த்த தென்னவன்-என்றும்
ஆராய்ந்த புலவர் அழைத்து வந்தனர்.

மன்றம் ஏறி வாதிடும் புலவர்
அறிவும் திறனும் அற்றா ராயின்
அன்னவர் தலையில் அரசன் குட்டுவான்.

வாதிடும் போது வாள்வேந்தன் தோற்றால்
தன்னை வென்ற சான்றோர் கரங்களால்
குட்டுப் படுவான் கொற்கைப் பாண்டியன்.

சர்க்கரை கசக்க முக்கனி துவர்க்க
அமுதினும் இனிய அருந்தமிழ்ப் பாடல்கள்
தொடுக்கும் புலவர் தோற்ற பொழுதிலே
குட்டுவதும், பாண்டியன் குட்டுப் படுவதும்
வேடிக்கைப் பிள்ளை விளையாட்டுப் போன்ற
செய்கை என்று தெரிந்து வியந்து
மணமெலாம் உய்ய மழைபோல் விளங்கிய
அண்ணல் வேந்தனை அதிவீர ராமனைக்
கொள்ளைக் கவிஞர் கூட்டம்
பிள்ளைப்பாண் டியனென்றுபெயரிட் டழைத்ததே.

# அசோகன்

ஓராம் மாதம் உடம்பு பூரித்தும்
ஈராம் மாதம் இடையது பெருத்தும்
மூன்றாம் மாதம் முகமெலாம் வெளுத்தும்
கனிந்த கொங்கையின் கண்கள் கறுத்தும்

நாலாம் மாதம் நாய்க்குடை போல,
மேலும் மேலும் மேனி வெளுத்தும்
மயக்கம் பெருகியும் மசக்கை நழுவியும்

ஐந்தாம் மாதம் அங்கம் பசந்தும்
புளிக்கும் பொருள்களைப் புகழ்ந்து புசித்தும்
ஆறாம் மாதம் அடிவயிறு கனத்தும்
கூறும் மொழியெலாம் கோப மாகியும்

ஏழாம் மாதம் ஏய்ப்பிளைப் புற்றும்
நாவுக் கினியதை ஆவலொடு தின்றும்

எட்டாம் மாதம் எழமுடி யாமலும்
கட்டுகள் விட்டும் கடுகடுப் புற்றும்
ஒன்பதாம் மாதம் தின்பதை மறந்தும்
முற்றிய மாதம் பத்துவந் துற்றதும்
அங்கம் நொந்திடச் செங்கனி மங்கையர்
குழிக்கிழங் கென்னும் குழந்தையைப் பெறுவர்.

எழுமதி யாகிய முழுமதி முகத்தினள்
பழுதறு சொல்லினள் பண்கொண்ட வாயினள்
தாங்குபுகழ் சுபத்தி ராங்கி என்பாள்
புவிபுகழ் அசோகனை ஈன்ற பொழுதிலே
துடித்திட வில்லையாம்! துன்புற வில்லையாம்!
இடுப்பு நோக்காடும் இளைப்பும் சோகமும்
ஏந்திழை மாதுக் கேற்பட வில்லையாம்!

சோகம் என்றால் துயரமென் பதுபொருள்.
சோகம் தருவோன் சோகன்; அவ்வாறு
சோகம் தராதவன் அசோகன் ஆவான்!
வீரம் காட்டிய வேந்தன் அசோகன்
கலிங்க நாட்டினைக் கலங்கிட வைத்தும்
மாறுபட் டோரை வேரொடு வீழ்த்தியும்
மன்னர் பலரை மயானமண் ணாக்கியும்

வெற்றியை வேண்டிக் குற்றம் புரிந்தவன்
ஆயினும் அன்னவன் பிறந்த பொழுதிலே
தாய்க்குச் சோகம் தரவே இல்லை.
ஆதலால் அவனை அசோகன் என்றே
ஆசையொடு வேந்தன் அழைத்திட
ஓசை பெற்ற உலகமும் அழைத்ததே!

# அகலிகை

ஊர்நிறைந் திருக்கும் உலகின் திசையெலாம்
பேர்நிறைந் திருந்தவன் வள்ளல் பேகன்!
பேகன் தகுதியாற் பெரியவன்! தனித்தமிழ்த்
தாகம் தீராத் தலைவன் ஆவான்!

அன்னவன் மனைவி குறுநெடுந் துணைவி
நாணொடு பிறந்த நங்கை; அந்தக்
கனிமொழி மங்கையின் பெயரோ கண்ணகி!

கூடல்மா மதுரைக் கொற்றவன் ஒருவனால்
கொலையுண் டிருந்த கோவலன் என்பான்
கண்ணீர் மனைவியின் பெயரும் கண்ணகி!

இத்தமிழ் நாட்டிலே இரண்டு கண்ணகியர்
இருந்தாற் போலவே அகலிகை இருவர்
வடவர் நாட்டிலே வாழ்ந்த தாக
அந்நாட்டுச் சுவடிகள் அறிவிக் கின்றன!

அவர்களுள் ஒருத்தியோ ஆண்டு மாண்ட
மகத நாட்டு மன்னவன் மனைவியாம்!
குற்றம் புரிந்த மற்றொரு மங்கையோ
கௌதம முனிவரின் கட்டில் மனைவியாம்!

இச்சையோ டொருநாள் இந்திரன் அவளை
இருட்டிலே முத்தம் இட்டான் என்பதைப்
புராணம் புரட்டினால் புரிந்து கொள்ளலாம்.

தவஞ்செய் முனிவரின் தரும பத்தினி
பருவ காலத்தில் பழுத்த மாங்கனி!
அகலியை என்பாள் அழகின் விளக்கமாம்!
வெண்ணிலா அவளெழில் கண்டு வியக்குமாம்!

வதன வட்டமும் மைவிழி வாசலும்
தூண்டில் புருவமும் துடிக்கும் பருவமும்
நெய்கனிந் திருண்ட நீள்கருங் கூந்தலும்
சேர்ந்து பிறந்த செவ்வா யிதழ்களும்
கையும் காலும் மெய்யும் மேனியும்
எவ்வாறு நன்கமைந் திருந்தல் வேண்டுமோ
அவ்வாறு நங்கைக் கமைந்திருந் தனவாம்!
நங்கையின் நடைகண்டு நாணிற்றாம் அன்னம்.
கட்டழகு மங்கையின் கன்னத்தைக் கண்டு
தேமாங் கனிகள் திரும்பிக்கொண் டனவாம்!

புனலாடு தாமரை போன்ற மங்கையர்
ஆரிய நங்கையின் அழகினை வென்றிட
முடியாமற் போனதால் முக்காடிட் டனராம்!

உறுப்புநூல் வல்லார் குறிப்பிடும் எழிலின்
சிறப்பெலாம் ஒன்று சேர்ந்து திரண்டு
வையமே வியக்கும் வண்ணம் விளங்கினாள்
ஆணிப்பொன் மேனி அகல்யா தேவி!

நுணுக்கம் நிறைந்த நூல்பல கற்றிடின்
அகிலமே வியக்கும் அறிஞ னாகலாம்
கல்வி செழித்தால் கவிஞ னாகலாம்
நாவின் பயிற்சியால் நாவல னாகலாம்
கத்தியைத் தீட்டாது புத்தியைத் தீட்டினால்
கற்றார் மதிக்கும் கலைஞ னாகலாம்!

முற்றி முதிர்ந்த முயற்சியின் மூலம்
அனைத்தையும் பெறலாம் ஆயினும் புவியிற்
பெறவிய லாதது பேரெழி லாகும்!

பிறரிட மிருந்துநாம் பெறமுடி யாததும்
உலகத்து மாந்தருள் ஒருசிலர்க் கமைவதும்
ஆசை தருவதும் அழகே யாகும்!

பிண்டத்தில் அமையப் பெறாதபே ரெழிலை
அண்டத்தில் வந்தபின் அடைவதற் கில்லை.

நீருக்கு நுரையும் நெல்லுக் குமியும்
நிலவின் உருண்டையில் நீங்காக் களங்கமும்
தாமரை மலருக்குத் தண்டிலே முட்களும்
அமைந்திருப் பதனை அனைவரும் அறிவர்!

வான்கவிந் திருக்கும் வையகந் தன்னில்
ஏதேனும் ஒருகுறை இல்லாத பொருளிலை
எனினும் அகலியை இதற்குவிதி விலக்காம்!

எந்தக் குறையும் இல்லாத பொருளை
ஆரிய மொழியில் 'அகல்யம்' என்பர்.

மந்திர முனிவரின் மையல் மனைவி
அழகில் குறையே அற்றவள் ஆதலின்
நகைமுகம் கொண்ட நங்கையே
அகல்யா தேவியென் றழைக்க லாயினரே!

# மங்கையர் பகுதி

உள்ளே. . .

என் கடமை
மணக்க மாட்டேன்
பஞ்சம்
பேய்மழை உண்டா?

# என் கடமை

உரைகல்லில் சரிபார்த்த செம்பொன் போலே
ஒளிவீசும் காலையில்நான் எழுந்தி ருந்து
நுரைசெய்யும் ஆற்றில்நீ ராடச் செல்வேன்
நுணுக்கமுள்ள ஆசாரக் கோவை கூறும்
வரிவெண்பா நீதியைப்பின் பற்றி வாழ்ந்து
வருவதனால் நீரில்நான் உமிழ மாட்டேன்
தரையில்நான் கால்விரலால் கீற மாட்டேன்
தண்ணீரில் ஆடைதனைப் பிழிய மாட்டேன்.

சீரறிந்த நீதிகளில் நெஞ்சம் வைப்பேன்
சித்திரத்தில் அன்றாடம் விழிகள் வைப்பேன்
தேரறிந்த கோயிலுக்குப் போக மாட்டேன்
தேனறிந்த மல்லிகையை விடவே மாட்டேன்
ஊரறிந்த பேரறிஞர் மேடைப் பேச்சை
ஒருநாளும் நான்கேட்கத் தவற மாட்டேன்
பாரறிந்த பைந்தமிழை அழிக்க வேண்டிப்
படைவந்தே எதிர்த்தாலும் அஞ்ச மாட்டேன்.

ஈரத்திற் சிறந்தகடல் கத்தும் ஊரில்
இருந்தவளாம் பரத்தைமாணிக் காத்தாள் என்பாள்
நேரத்திற் கோர்வண்ண உடையும் ஒவ்வோர்
நிமிடத்திற் கோர்நகையும் அணிவ துண்டாம்
சாரத்திற் சிறந்தகவிச் சிலம்பும் சாத்தன்
தந்தமணி மேகலையும் இருக்கும் போது
பாரத்தைக் கொடுக்கின்ற நகையின் மீது
பற்றுவைத்து நான்தொல்லை கொடுப்ப தில்லை!

பலர்போற்றும் பகலில்நான் உறங்க மாட்டேன்
பகலுறக்கம் உயிர்குறைக்கும் என்ப தாலே
கலைநூற்கள் அன்றாடம் பயில்வேன். வீட்டுக்
கணக்குதனை எழுதிவைப்பேன் மாலைப் போதில்
தலைவாரிப் பூச்சூடிக் கொண்டு தெற்குத்
தமிழ்த்தலைவர் என்கணவர் வருகை நோக்கி
நிலைவாசல் முன்வந்தே எட்டிப் பார்ப்பேன்
நெருப்புவெயில் வட்டமெனை எட்டிப் பார்க்கும்!

கச்சிதமாய் உறங்கிக்கொண் டிருப்பேன், வீட்டில்
கண்கலந்த என்கணவர் அருகில்வந்தே
நச்சரிப்பார் நயமாகப் பேசிச் சற்றே
நகரென்பார் நான்மறுப்பேன் ஊடல் தீர்ப்பார்.
இச்சமயம் ஒளியிலையே அத்தான் என்பேன்
இருள்தானே பூனைக்கு வேண்டும்! என்பார்
உச்சரிப்பு நின்றுவிடும் தொடுவார் ஈர
உடைபோல்நான் அவருடலில் ஒட்டிக்கொள்வேன்.

# மணக்க மாட்டேன்

தேய்புரி பழங்க யிற்றைப்
        போன்றானைச் சிறப்பில் லானை
வாய்மையும் சிறந்த வாக்கு
        வன்மையும் இல்லா தானை
நோய்மத வெறிகொண் டானை
        நுண்ணறி வில்லா தானைத்
தாய்மொழிப் பற்றில் லானைத்
        தையல்நான் மணக்க மாட்டேன்.

அரியநூல் புவிமீ துள்ளோர்
        அனைவர்க்கும் பொதுநூல் நீதி
விருந்துநூல் மேல்கீழ் என்னும்
        வேற்றுமை நோயைத் தீர்க்கும்
மருந்துநூல் அறிவில் மூத்தோன்
        வடித்தநூ லான முப்பால்
திருக்குறள் கல்லா தானைத்
        திருமணம் செய்து கொள்ளேன்!

உண்ணாதான் அறஞ்செய் யாதான்
ஓங்கிய கீர்த்தி சேர்க்க
எண்ணாதான் நேர்மை நோக்கம்
இல்லாதான் பிறந்த நாட்டைக்
கண்ணேபோற் சிறந்த தாகக்
கருதாதான் ஈக்கள் மொய்த்த
புண்ணேபோல் இழிந்தோன் அந்தப்
புல்லனை மணக்க மாட்டேன்!

# பஞ்சம்

மாங்காய்ப்பால் உண்டு; வேறு
　　மரங்களின் பாலு முண்டு
தேங்காய்ப்பால் வீட்டி லுண்டு
　　செயற்கைப்பால் கிடைக்கும் ஊரில்
ஆங்காங்கே பசுப்பால் விற்கும்
　　ஆயினும் விலைகொ டுத்து
வாங்காப்பால் என்னும் தாய்ப்பால்
　　மட்டுமே நாட்டில் பஞ்சம்!

மஞ்சளும் உண்டு; முல்லை
　　மலர்களும் எங்கு முண்டு
வஞ்சியர் முகத்தில் இன்றோ
　　மஞ்சளின் பூச்சைக் காணோம்
அஞ்சுதல் அடக்கம் நாணம்
　　அனைத்துமே நாட்டில் பஞ்சம!
மிஞ்சிய தென்ன வென்றால்
　　விருப்பம்போல் நடப்ப தொன்றே!

# பேய்மழை உண்டா?

முல்லை இளங்கொடி முட்டையும் இட்டது கண்ணா
குயில், முட்டை யிடுமன்றி
முல்லை யிடாதடி கண்ணே!

அல்லி மலர்க்கொரு நல்ல கணவன்யார் கண்ணா
குளிர் அம்புலி என்னும்
அழகு நிலாவடி கண்ணே!

பேய்மழை நேற்றிங்குப் பெய்து கெடுத்தது கண்ணா
அடி பெய்மழை தானுண்டு
பேய்மழை ஏதடி கண்ணே!

வாய்மொழி குன்றிடின் தாய்மொழிகுன்றுமோ கண்ணா
அடி வாழைப் பழத்தைநாம்
"வாளப் பள" மெனில் குன்றும்!

கல்வி இலாதவன் காட்டில் வளர்மரம் கண்ணா
இரு கண்கள் இருந்தும்
இலாதவ னேயவன் கண்ணே!

நெல்லின் சிறுகதை நீண்டு வருவதேன் கண்ணா
பசி நீண்டு வளர்வதால்
நெற்கதை நீளுது கண்ணே!

சக்தி இலாதவன் சாதிக்கக் கூடுமோ கண்ணா
வாழைச் சருகுகள் எவ்வாறு
சாற்றினைத் தந்திடும் கண்ணே!

பக்தி புரிவதால் பாவங்கள் தீருமோ கண்ணா
அம்பு பட்டபுண் மீதுநூல்
கட்டினால் ஆறுமோ? கண்ணே!




குறுங்காவியம்

உள்ளே...

வன்னிய வீரன்

# வன்னிய வீரன்

## தொண்டை நாடு

குறிஞ்சித் திணையைக் குறித்திடும் மலைகளும்
குன்றினேன் என்று குன்றிய குன்றமும்
உதித்தசெங் கதிரின் ஒளியைத் தடுத்து
நிறுத்தியும் நிழலால் நிலத்தை மெழுகியும்
வானுற ஓங்கி வளர்ந்த காடுகளும்
பயன்தரும் பொழிலும் பழமுதிர் சோலையும்
பனிப்புனல் ஏரியும் பளிங்கைக் கரைத்தே
ஓட விட்டாற் போன்றநீ ரோடையும்
சாகாக் கடலும் தாமரைத் தடாகமும்
தளராப் பயன்தரும் சதுர வயல்களும்
வாழையும் மங்கல மஞ்சளும் இஞ்சியும்
இயற்கை எழிலை ஏந்திக் காட்டிட

மழைவயிறு கிழிக்கும் மாட மாளிகை
மான்விழிச் சாளரம் வைத்த வளமனை
ஆறுபோற் கிடந்த அகல்நெடுந் தெருக்கள்

கூறுநல் லடியார் கோபுரக் கோயில்கள்
ஓங்குபே ரழகினை ஓர்புறம் கூட்டிட

## சான்றோர்

சீர்தளை கொண்ட செந்தமிழ்ச் செய்யுள்
தொடுத்துக் காட்டிய தொகைநூற் புலவர்க்குக்
கொடுத்துக் காட்டிய கூவத்து நாரணன்

இடையறா தளித்த சடைய நாதன்
தேம்பாது வழங்கிய பூம்பாவை முதலியார்

நிறைந்த புகழாற் சிறந்தசீர் காழி
அருணா சலக்கவி ராயரை ஆதரித்தே
வரிசை யறிந்து வழங்கிய மணலி
முத்து கிருட்டிண முதலிபோன் றோரும்

சைவம் தழைத்திடத் தனிநூல் ஒன்றினைத்
தூக்கெனும் செய்யுளால் ஆக்கி அருளிய
சேக்கிழார் அடிகளும் செஞ்சொல் கொஞ்சும்
தஞ்சை வாணன் கோவைசெய் தருளிய
பொய்யா மொழியரும் பொன்விளை களத்தூர்
புகழேந்திப் புலவரும் பொங்கு தமிழ்ச்சுவை
தங்கிய பாடல்கள் தங்கிய பலநூல்
பாடி அருளிய படிக்காசுப் புலவரும்

நின்ற சொல்லராம் நெற்குன்ற வாணரும்
உழலூரில் வாழ்ந்த சொல்லே ருழவராம்

அந்தகக் கவிஞரும் அரும்பெரும் புலவரும்
செய்த நூற்களின் சிந்தனை உலவிட;

வாடாத சான்றோர் வகுத்தநல் லறமும்
பிழைபடாக் கற்பும் பின்படா வீரமும்
கொண்டுபுகழ் கொண்டது தொண்டை நன்னாடு;

## ஆடிற்று நாடு

சொல்லச் சொல்லத் தொடர்ந்தே பரவும்
நல்ல புகழொடும் நடுங்காத் திறத்தொடும்
இத்தொண்டை நாட்டினை இளந்திரையன் ஆண்டனன்.

மாலை வெண்குடை மன்னவன் மாண்டபின்
மரபுமுறை கெடாமல் மற்றவர் ஆண்டனர்.

ஏற்றிய விளக்கில் எண்ணைப் குறைந்திடின்
வளர்ந்த வெளிச்சம் வரவரக் குறைந்திடும்
அதுபோல் பின்வந்தோர் ஆட்சி தளரவே
பகையும் கொடிய பசியும் பிணியும்
குறையாக் கவலையும் குறும்புக் கலகமும்
அடிக்கடி தோன்றவே ஆடிற்று நாடு.
வடபெருங் கல்லையும் மணிக்கடல் நீரையும்
இத்தமிழ் நாட்டின் எல்லைக ளாக்கி,

மொழியை ஒன்றாக்கி முடியைமூன் றாக்கி
வீரம் முளைத்தமூ வேந்தர் மரபிலே

வந்தோர் ஆண்ட மணித்திரு நாடாம்
தொண்டை நாடு சண்டைநா டானது.

தாய்மொழிப் பற்றும் தன்மான உணர்ச்சியும்
காலை நேரத்து நிழல்போல் குறைந்ததால்
சார மற்ற சரித்திரம் வளர்ந்தது.

வேற்று நாட்டினர் விழுங்கினர் தமிழரை.
தூங்கிய தமிழகம் தோற்றது பிறரிடம்.
புலிக்கொடி வீழவே எலிக்கொடி பறந்தது!

## ஆந்திர அரசு

வேர்கொண்ட புகழொடு சிறந்து விளங்கிய
தேர்வேந்தன் கிருட்டிண தேவன் என்பான்
செங்கழுநீர்ப் பட்டெனும் செங்கற் பட்டுக்குப்
பக்கத்தில் உள்ள பழம்புக ழூராம்
விடையீச் சுரத்தில் வீற்றிர சாண்டனன்.

மரத்தின் கீர்வளர் மரம்போல் ஒருசிலர்
அவனுக் கடங்கி ஆட்சி செய்தனர்.

## வீரன் காத்தவராயன்

காந்தவ ராயன் கட்டிளங் காளை
இமய மலையே எதிர்த்த போதினும்
அசைப்பது கடினம் அன்னவன் தோளை!

அவனோ, குறுநில மன்னவன் ஏந்துவாள்

வெற்றிகள் பெற்ற விழுப்புண் வீரன்
பகைமுகம் கண்டு நகைமுகம் காட்டிய
நெருப்பு வன்னியன் நினைப்பில் திண்ணியன்!

தாழ்ந்துபோய் உள்ளம் தளர்ந்துபோ யிருந்த
தமிழரை எல்லாம் தட்டி யெழுப்பிய
தலைவன் இரும்பிடர்த் தலையார் போன்றவன்
கிருட்டிண தேவனை விரட்ட முயன்றவன்.

## உரிமைப் போர்

வன்னிய வீரனை அந்நியத் தெலுங்கன்
அடக்குதற் காகப் படைகளை அனுப்பினான்.
வந்த படைகளை வன்னியன் வீழ்த்தினான்.
பின்னரும் ஆந்திரன் பெரும்படை அனுப்பினான்.

முரட்டுக் குதிரைகள் முன்னே சென்றிட
வினைத்தொகை யானைகள் விரைந்து நடந்திட
வீர வன்னியன் வெறியோ டெழுந்தனன்
அன்னவன் தம்பியும் அவனோ டெழுந்தனன்!

தடித்த தோளினர் தடக்கை வாளினர்
வெடித்த சிரிப்பினர் விழிக்கண் தீயினர்
கடித்த வாயினர் கருங்கடற் குரலினர்
தடித்த தோளினைத் தட்டி அதட்டினர்!

வேங்கை வன்னிய வீரரும் அதட்டினர்.

இரும்பைத் திருத்தி இயற்றிய வாளினால்
அண்ணனும் தம்பியும் ஆற்றலைக் காட்டினர்.
வெட்டினர் தமிழர்! வீழ்ந்தனர் ஆந்திரர்.
குருதி பருகிக் கொடுவாள் சிவந்தது.

தலைகள் வீழ்ந்தன மறவர் தடத்தோள்
மலைகள் சாய்ந்தன மாற்றார் கைவேல்
இலைகள் உதிர்ந்தன உல்லாம் சிதைந்தன!

பழுத்தசெங் கதிர்போய்ப் படுக்கும் மேற்றிசைக்
கடற்கரை வழியே கைவேல் கீழ்விழக்
கொங்கரை விரட்டிய கோமகன் ஆய்வேள்

போன்று விரட்டினான் போர்வீர வன்னியன்!
வன்னிய வீரனை அந்நிய ஆந்திரன்
தீயென ஓங்கும் தீராப் பகைவரைச்
சூழ்ச்சியின் மூலம் தொலைக்கத் தொடங்கினான்.

## புல்லுருவி முளைத்தது

முதலி ஒருவன்; அந்த முதலியோ
தேளொடு பாம்பொடு சேர்க்கத் தகுந்தவன்
சதிசெய் வதிலே சகுனிபோல் சமர்த்தன்
பார்புகழ் காந்தவ ராயனின் பகைவன்.

சுரீரென மாந்தரைச் சுடும்சுடர்ச் சூரியன்
வகுத்த பகலும் வான்மீன் இரவும்

ஓடின இழைத்த நாட்களும் ஓடின.

என்றென்றும் விரிந்தே இருந்திடும் வானம்
ஈச்சங் கனிபோல் இருண்ட தோர்நாள்.
வானம் இருண்டதால் இருண்டது வையகம்
இருண்ட பொழுதிலே எழுந்தான் முதலி.

கரடி புலிகள்வாழ் காட்டிலே நடந்தும்
பாதையைத் தடுக்கும் பருவதம் கடந்தும்

பொன்முடித் தெலுங்கன் முன்வந்து வணங்கி
நின்றனன் அந்த நெருப்பு முதலி!

ஆந்திர வேந்தன் அவனை நோக்கி.
நீ யார்? என்று நிமிர்ந்து கேட்டனன்.

அடியேன் தங்கள் பகைவனின் பகைவன்
குடிகளைக் காத்திடும் கொற்றவா கேளும்
நிலத்திற்கு வீரனாய் நீருக்கு முதலையாய்
விரிந்த காட்டுக்கோர் வேங்கையாய் இருப்பவன்
சாந்தமே அறியாக் காந்தவ ராயன்.

வாட்களோ, கொல்லன் வடித்தகூர் வேலோ
ஆட்களோ அவனை அழிப்பது கடினம்.
ஆயினும் அன்னவன் ஆசைக் கிழத்தியாம்

கொஞ்சும் வஞ்சகி குப்பாச்சி என்னும்
வேசியைக் கொண்டுநாம் வீழ்த்தலாம் அவனை
என்று கூறினன் இயற்கை வஞ்சகன்.

அன்னவன் செய்தியை மன்னவன் கேட்டு
மகிழ்ச்சி யடைந்தான்! மலர்ச்சி யடைந்தான்!

நின்ற முதலியை நிருபன் நோக்கி
வாலிபம் கடந்த வயோதிக முதலியே
நன்று நன்றுநின் நன்றியை என்றுமே
மறவேன் யானென மகிழ்ந்து கூறி
ஆறா யிரம்பொன் அவனிடம் நீட்டவே
இழிந்தோன் இருகரம் ஏந்தி வாங்கினான்.

வாங்கிய பரிசொடு வீங்கிய நினைவொடு
வேம்பு முதலி விடைபெற்றுச் சென்றனன்.

காட்டிக் கொடுத்த கயவன் சென்றதும்
வெருகூரில் வாழ்ந்த வேசிகுப் பாச்சியை
அழைத்துவர வேந்தன் ஆட்களை அனுப்பினான்.

ஆந்திர வேந்தனின் அரண்மனைக் காவலர்
வெருகூர் நோக்கி விரைந்து சென்றனர்.

## பஞ்சணைப் பறவை

வேசி குப்பாச்சி யோர்விளம்பர விளக்கு
பாவின் இனத்தைச் சேர்ந்த பரத்தை!

ஐந்தும் ஐந்தும் ஐந்திேனா டாறெனச்
செப்பும் வயதினள். செம்பொன் நிறத்தினள்.
பேசியே உருக்கும் பெருங்கலை வல்லி

மதன வித்தார மாலையே அன்னவள்
புதிய கொக்கோகப் புத்தக மாகும்.

சில்லேட்டும தேகம் அமைந்தவள் ஆதலின்
கூந்தல் நீண்ட கோதையாய் விளங்கினாள்
காம்பவிழந் துதிர்ந்த கனியுருக் கொண்டவள்
குழைத்து முடியிடும் கொண்டைச் சொருக்கினால்
இடையினால் நடையினால் இயந்திரப் பார்வைப்
படையினால், கலப்படம் படிந்த சொல்லினால்
பாதி உணர்ச்சியால், மீதி நடத்தையால்
மாவீரன் காந்தனை மயக்கி வந்த
பஞ்சணைப் பறவை! வஞ்சக வாகனம்!

ஆந்திர வேந்தனின் அரண்மனைக் காவலர்
வெருகூர் வந்து வேசியைக் கண்டு
மன்னன் உரைத்ததை மாதுக் குரைத்தனர்.
அன்னவள் கேட்டனள்; அரண்மனைக் கெழுந்தனள்.

பொன்னிற மாலை அந்திப் பொழுதிலே
வந்து சேர்ந்தனள் வாடகைப் படகு.

## வினையின் கதை

ஆந்திர வேந்தன் அவளை நோக்கிக்
காந்தவ ராயனைத் தீர்த்துக் கட்டி
அன்னவன் தலையை என்னிடம் காட்டினால்
பலநூறு வராகன் பசும்பொன் பெறலாம்
என்று கூறினன் ஏந்திழை ஒப்பினள்
விரைவில் வருவதாய் விடைபெற்றுத் திரும்பினள்

## இயற்கை சிரித்தது

கூன்மலர் என்று குறிப்பிடும் பாதிரிப்
பூக்களும் மாதவி மரத்தின் பூக்களும்
தேனொடு வாயைத் திறந்திடும் காலம்.

குட்டி யானைகள் கொட்டாவி விடுதல்போல்
இன்னிசை மூங்கிலில் எழுந்திடும் காலம்.

தேர்தேர்ந் தெடுப்பதில் சிறந்தவேள் ஆய்போல்
தேன்தேர்ந் தெடுக்கத் தெரிந்த வண்டுகள்
காந்தாரம் பாடிக் களித்திடும் காலம்.

செந்தீப் போன்ற சிறந்தமாந் தளிரைக்
குயிலின் கூட்டம் கோதிக் கோதிக்

குறடுவாய் திறந்தே கூவிக் கூவி

இசையமு தளிக்கும் இளவேனிற் காலம்

மையல் இரவு மலர்ந்தது மூவைந்து
நாட்கள் ஏறிய நல்ல வெண்ணிலா
வட்டம் நீல வானில் மிதந்தது!

## ஒப்பனைக் களஞ்சியம்

குறைந்த சிற்றிடையும் நிறைந்தபே ரெழிலும்
கொண்ட பரத்தை குப்பாச்சி என்பாள்
ஐம்பாற் கூந்தலை ஒரு பாலாக்கியும்
கோதி முடித்தே கோலமலர் சூடியும்
கையால் எழுதா வரியொடு வளர்ந்த
பொய்யான விழிக்குப் புதியமை ஊட்டியும்
ஆய்ந்தளந் தியற்றிச் செய்தநல் லாடையை
விரித்தே யுடுத்தும் மேனி மினுக்கியும்
பருதி வட்டத்தைப் பழிக்குப் பதக்கம்
இறுதிவரை கெடாதபே ரெழில்முத் தாரம்
முதலாம் அணிகளை முறைகெடா தணிந்தும்
கண்ணாடும் மங்கை கண்ணாடி பார்த்தனள்.

தூதுத் தோழிகள் சூதுப் பரத்தையின்
பாதச் சிலம்பினைப் பக்குவப் படுத்தினர்.

வெள்ளை நிலவு விழித்ததா? என்றே
அன்னவள் கேட்டாள். ஆம் என்றாள் தோழி.

நிலாமுற் றத்திலே உலாவ எழுந்தனள்
நடந்தனள் நங்கை; நடந்து செல்கையில்
அப்படி இப்படி அவளிடை அசைந்தது.
அழகு மல்லிகை அரும்பென விளங்கிய
காலில் சதங்கை 'கலீர்கலீ' என்றது.

நீல வானத்து நிலவையும் மினையும்
பேரழகி நோக்கிப் பெருமூச்சு விட்டனள்.

வெந்நீ ராடி வியர்த்ததோ எனும்படி
கள்ளப் பரத்தையின் கண்கள் சிவந்தன,
உருண்டு வெளிவந்த உதடுகள் துடித்தன.
முன்வளர் புருவம் முட்க ளாயின,
சொற்களோ பருக்கைக் கற்க ளாயின.

அந்தித் தென்றல் சந்திக்க வந்தது.
வந்த தென்றலை வஞ்சி வெறுத்தனள்.

## விருந்துக்கு வந்தான்

பரத்தையின் மடியில் படுத்துப் புரண்டிட
வன்னிய வீரன் வந்தனன் ஆங்கே!

பொதுவுடல், பொதுமுகம் பொதுவிழிப் பரத்தை

நாடி வந்தோனை ஓடிவர வேற்றனள்.

காமப் பசியொடு வந்தோன், கணிகையின்
பேரழகைக் கண்டு பெருமூச்சு விட்டான்
தோளழகைக் கண்டு துடித்துப் பதைத்தான்.

நெருப்பினால் உருக்கிய நெய்யின் நிறத்தினாள்
சிரிப்பினால் உருக்கிச் சிற்றின்ப இதழ்களால்
கிளிமழலை செய்தனள் கீழ்மகள் செய்த
சொல்வழி நின்றது செவியே, அன்னவள்
விழிவழி நின்றது வேந்தன் மணிமுகம்!

பறந்து வந்தவன் பரத்தையே நோக்கிக்
காதங் கமழ்ந்திடும் கருங்குழல் மாதே
கடல்படு முத்தையும் காடுபடு பொருளையும்
மலைபடு மணியையும் மதித்திடா துன்றன்
உடல்படு பொருள்தொட ஓடோடி வந்தேன்

அடப்பம்பூக் கிழிக்கும் அன்னமே உன்றன்
கண்ணழகு நீலக் கடலுக்கு வருமோ?
பொருந்தி வளரும் புருவத்தின் வளைவு,

வல்வில் ஓரி எடுத்து வளைத்தே
வெற்றி பெற்ற வில்லுக்கு வருமோ?
எடுத்துக் கடிக்கும் இடமெலாம் இனிக்கும்
கரும்பே தேனே காமத்துப் பாலே!

கனலும் புனலும் காற்றும் புகையும்
கலந்த கலப்பே கருநிற மேகம்
பனியும் பழுத்தசெங் கனியும் பற்பல
மதுமலர்த் தொகையும் மங்கைநின் தேகம்
எனக்குநீ வந்து வாய்த்ததென் யோகம்!

நிலத்திற் கழகு நெல்லாம் கரும்பாம்
தடாகத்திற் கழகு தாமரைப் பூவாம்
நெஞ்சத்திற் கழகு நல்ல நினைவுகள்
மஞ்சத்திற் கழகு மாதே நீதான்
உலவும் தென்றல் உடல்வெப்பம் தீர்க்கும்
தெளிந்தசொல் ஏறிய திருவா சகமோ
தப்பாது நெஞ்சின் வெப்பத்தைப் போக்கும்
இன்பமே உன்கை என்மீது பட்டால்
பட்ட இடமோ பனிச்சுனை யாகும்!

தங்கப் பதுமையே தமிழுக் கிருவராம்
இன்பம் காணவும் இரண்டுபேர் வேண்டும்!

தெளிவா யிப்போது தெரியாத நின்னிடை
கருவுறின் அப்போது கட்டாயம் தெரியும்

அன்றோ? என்றான். அதுகேட்டுப் பொதுமகள்
நாணம் காட்டி நகைமுகம் காட்டி
அம்புப் பார்வையை அவன்மீது பாய்ச்சினாள்.

ஆரந் தாழ்ந்த அணிகிளர் மார்பும்
தாள்நோய் தடக்கையும் தறுகண் ஆண்மையும்
முற்றிய புகழும் முதிரா இளமையும்
பெற்றுத் தனித்திறன் பெற்று விளங்கிய
விசயா லயசோழ வேந்தன் என்பான்
வேரொடு பகைவரை வீழ்த்திய நாளில்
அங்கத்தில் தொண்ணூற் றாறுபுண் பெற்றனன்.
அன்னவன் போன்றே தொண்ணூற் றாறு
விழுப்புண் பெற்று விளங்கிய காந்தவன்
பொய்விழிப் பரத்தையின் போர்விழி பாய்ந்ததால்
பழிப்புக் குரியபுண் பலநூறு பெற்றனன்!

பால்வகை தெரிந்த பரத்தையோ மீண்டும்
கொடுவாள் வீரனைக் கூர்ந்து நோக்கிக்
கொப்புளம் கொண்ட குளிர்வானில் மிதக்கும்
இந்த வெண்ணிலா ஏன்புகை கின்றது?
கூறுவீர் என்று குழைந்து கேட்டனள்.
திப்புத்தோள் வீரன் சிறுநகை செய்தே.

என்னடி பெண்ணே ஈர வெண்ணிலா
புகைகின்ற தென்றுநீ புதிர்போடு கின்றனை

அமுதுசூல் கொண்டநல் லழகு வெண்ணிலா
வட்டத்தில் புவிநிழல் வந்து படிவதால்
புகைதல் போன்று புலப்படு கின்றது
கோதையே! என்று கூறினன் வீரன்.
அவனை மயக்கினால் அதிகம் கிடைக்கும்
இவனை இழுத்தால் ஏராளம் பெறலாம்
விழிவலை விரித்தால் வீழ்ந்திடு வானிவன்
என்னும் கருத்தை இதயத்தில் வைத்தே
கணிக்கக் கூடிய கணிகை அதுகேட்டு
மொட்டுப் புன்னகை முகத்திற் காட்டினாள்.

மோது காமத்தில் மூழ்கி வந்தவன்
சூதுப் பரத்தையின் தோள்தொட நெருங்கவே
ஊடினாள் சற்றே ஒதுங்கினாள் உலாமகள்!

## தொடங்கிற்று நாடகம்

வாள்தொட்டுப் பயின்று வந்தோன் பரத்தையின்
தோள்தொட்டுப் பயிலத் தொடங்கும் வேளையில்
அவிழ்ந்தவெண் தாழைபோல் அவளுடை அவிழ்ந்தது

சித்திரக் கன்னம் சிவந்தது வாயிதழ்
பெற்றசெந் நிறமோ பெயர்ந்தது வேறிடம்!

காந்தவ ராயன் கணிகையை நோக்கித்
தவளை குதிக்கும் தடாகத்தில் வளராக்
குவளை சிவந்தது குமுதம் வெளுத்தது
கோதையே! என்று கூறினான். அதுகேட்டுச்
சீரொடு நோக்கிச் சிரித்தபடி திரும்பிக்
கொண்டனள் கொலைசெயும் நோக்கம் கொண்டவள்.

நின்றவள் நகர்ந்தாள் நிழலும் நகர்ந்தது,
மங்கை நகரவே மன்னனும் நகர்ந்தனன்.

மயக்கிய மங்கையும் மயங்கிய மன்னனும்
பள்ளியறை நோக்கிப் பறந்து சென்றனர்!

## தொட்டான்! தொட்டான்!!

கவிழ்ந்து பூப்பூத்து நிமிர்ந்துகாய் காய்க்கும்
எள்ளில் எடுத்தநல் லெண்ணெயின் நுரைபோல்
மென்மை கொண்ட மென்மலர் தூவிய
மஞ்சத்தில் அமர்ந்தனள் மன்னனும் அமர்ந்தனன்

தக்கோலம் தின்று தலையில்பூச் சூடிப்
பொய்க்கோலம் செய்த புணரிப் பரத்தை
அழகுசெந் தினையின் அரிசியைப் போன்ற

நரம்பு நிரம்பிய நல்யாழ் எடுத்தே
இசைய வைத்திடும் இசைத்தமிழ் வளர்த்தனள்!

மன்னவன் கேட்டு மயங்கினான் மயங்கி
மெத்தைப் பரத்தையின் மெல்லிய கைவிரற்
கொத்துக்கு முத்தம் கொடுத்து நிமிர்ந்தான்!

## அமுதமா? நஞ்சா?

எச்சில் பரத்தை இடம்விட் டெழுந்துபோய்க்
கொல்லும் மருந்தைக் கொட்டிக் கலந்த
பழச்சாறு கொணர்ந்தே "பருகுவீர்" என்றனள்.

"பாவைநீ இருக்கையில் பழச்சா றெதற்கு
வேண்டாம் வஞ்சியே வேண்டாம்" என்றனன்.

"வெண்ணிலா வெளிச்சம் வீண்மீ திருப்பினும்
எண்ணெய் விளக்கினை ஏற்றாதார் உண்டோ
பருகுவீர்" என்றே பரத்தைவற் புறுத்தவே
கிண்ணச் சாற்றினைக் கிளர்ச்சியொடு பருகினான்.

## வீரன் வீழ்ந்தான்!

ஆதிப் பொதுமகள் அளித்தசா றதனில்
தோன்றா எழுவாய்போல் தோன்றா திருந்த

புதுவிடம் அன்னவன் உடலுட் புகுந்ததால்
முத்தங் கொடுத்து முடித்தோன் முடிவிலோர்
சத்தங் கொடுத்தபடி சாய்ந்தனன் மெத்தையில்!

மூச்சு முடிந்ததால் பேச்சும் முடிந்தது.
பிடியிடைப் பரத்தை பின்னர் மாண்ட
மன்னவன் உடலை வாட்கொண்டு வெட்டி
வெண்டுண்ட தலையை வேந்தனுக்குக் கனுப்பினாள்.

## இரவல் வெற்றி !

பகைவன் தலையைப் பார்த்த மன்னன்
தோள்தட்டிக் கொண்டே தொடர்ந்து சிரித்தனன்!

ஒத்தாசை செய்த ஓவியப் பாவைக்குப்
பத்தா யிரம்பொன் பரிசாய் அனுப்பினான்!

## வேல் பாய்ந்தது

தாசியின் சூழ்ச்சியால் தமையன் மாண்ட
செய்தியைக் கேட்ட சேர்ந்தவ ராயன்
இடிந்தான் உள்ளம் ஒடிந்தான் "அந்தோ
அண்ணா!" என்றே அலறினான் அழுதான்
ஓடினான் ஓடினான் தேடினான் தாசியை.

சேந்தன் கரத்திற் சிக்கினாள் பரத்தை.
அத்தனை பேரும் அகப்பட்டுக் கொண்டனர்.

## பிணாவூர்!

பிடிபட் டோர்தமைப் பிணைத்துக் கட்டியே
உருவிய வாளினால் ஓங்கி வெட்டினான்!

வென்ற வஞ்சகம் வீழ்ந்தது! வீழாது
நின்ற செங்கதிர் நெருப்பும் வீழ்ந்தது!

பிழைபுரிந் தோரைப் பிணைத்துக் கட்டி
இழுத்துச் சென்ற இடமென்ப தாலது
'பிணாவூர்' என்னும் பெயரைப் பெற்றது!

## நெஞ்சில் நிறுத்துங்கள் !

அறிவிற் சிறந்தோ னாயினும் காந்தவன்
ஒழுக்கம் இழந்ததால் உயிரையே இழந்தான்!

ஆயிரம் புதுமைகள் அமைந்தநூ லாயினும்
அந்நூல் குறித்தொரு பயிரம் அவசியம்.
அதுபோல் ஒழுக்கமும் மாந்தர்க் கவசியம்
பழுக்கும் பெருமை பெறவே
ஒழுக்கம் வேண்டும் உலகத் தீரே!


அகத்துறை

உள்ளே. . .

பாவையைப் பார்த்தீரோ?

இருட்டுக்குச் சேலை தந்தாள்

கண் சிவந்ததேன்?

கொய்யாக் கனி

விருந்து

அணங்கு கொல்!

சொல்லாதே

நாடகப் பத்தினி

# பாவையைப் பார்த்தீரோ?

அழகிற் சிறந்திருப்பாள்-குலமகள்
அன்னம் எனநடப்பாள்
தழுவுங் கொடியிடையாள்-திருவளர்
தாமரை போன்றிருப்பாள்!
விழியில் நிலாவளர்ப்பாள்-சுரையின்
விதையது போல்நகைப்பாள்
மழையின் குளிரமுதை-மதுமலர்
மங்கையைக் கண்டீரோ?

மஞ்சள் குளித்திருப்பாள்-விழிதனில்
மையிட்டுக் கொண்டிருப்பாள்
கொஞ்சம் மலர்பறித்தே-இருள்தரும்
கூந்தலில் சேர்த்திருப்பாள்
நெஞ்சைக் கவர்ந்திழுக்கும்-திலகமும்
நேரிழை வைத்திருப்பாள்
வஞ்சி நகரெனவே-சிறந்தபெண்
வஞ்சியைக் கண்டீரோ?

*நேரிழை மார்பினிலே-மணிச்சரம்*
*நீண்டு கிடந்தசையும்*
*ஓரிரு குண்டலங்கள்-செவிதனில்*
*ஊஞ்சலைப் போலாடும்*
*காரிகை கற்றவளாம்-அவளிரு*
*காலிற் சிலம்பிருக்கும்*
*பாரியின் தேரெனவே-சிறந்தபூம்*
*பாவையைப் பார்த்தீரோ?*

# இருட்டுக்குச் சேலை தந்தாள்

முல்லைக்கு முறுவல் தந்தாள்
முகிலுக்குக் கூந்தல் தந்தாள்
வில்லுக்குப் புருவம் தந்தாள்
வேலுக்கு விழிகள் தந்தாள்
சொல்லுக்குச் செந்தேன் தந்தாள்
சுனைநீர்க்குக் குளிர்ச்சி தந்தாள்
அல்லிக்குச் செவ்வாய் தந்தாள்
அழகுக்கே அழகு தந்தாள் !

நடைதந்தாள் அன்னத் திற்கு
நகைதந்தாள் எனக்கு; நன்னூல்
இடைதந்தாள் கொடிக்கு; நல்யாழ்
இசைதந்தாள் எனக்கு; தக்க
விடைதந்தாள் பிறர்க்கு! மையல்
விழிதந்தாள் எனக்கு; மேலும்
மடல்தந்தாள் படிப்ப தற்கு
மலர்தந்தாள் நுகர்வ தற்கு !

மிரட்டிக்கொண் டிருந்த காளை
மாட்டினை விரைந்து நான்போய்
விரட்டிக்கொண் டிருந்தேன். வந்தாள்
விழிகளால் பிடித்தேன் காதல்
திருட்டுக்குத் தேதி தந்தாள்
சேல்விழி பாதி தந்தாள்
இருட்டுக்குச் சேலை தந்தாள்
இளமைக்கு வேலை தந்தாள் !

# கண் சிவந்ததேன்?

## தோழி

எண்ணவும் எழுதவும் இலைதனைக் கிள்ளவும்
வண்ண மலர்களை வகைபெறத் தொடுக்கவும்
இன்னிசை யாழினை எடுத்து மீட்டவும்
அறிந்த மங்கையே அழகின் தங்கையே
விடுபடா அம்பு. விழிபெற்ற மாதே
கொடிபடு கிழங்குக் கொண்டைஏன் அவிழ்ந்தது?

## தலைவி

சஞ்சீவி பர்வதச் சாரலின் ஓரம்
விரிந்த விரலென விளங்குசெங் காந்தள்
கொத்து மலரைநான் குனிந்து பறிக்கையில்
'இளி' யெனும் ஓசை எழுப்பும் வண்டுகள்
குறும்பு செய்ததால் கொண்டை அவிழ்ந்தது !

## தோழி

*"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்*
*உயிர்மெய் அல்லன் மொழிமுத லாகா*
*மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை"*
*என்றெனக் குணர்த்திய இசைத்தமிழ்த் தலைவியே!*
*பட்டினம் பெற்ற கலம்போன்ற பாவையே*
*பொட்டு கலைந்து போனதேன் கூறுக?*

## தலைவி

*ஆண்டிப் புலவர் பிறந்தவூ ரான*
*ஊற்றாங்கால் சென்றுநான் உடனே திரும்பி*
*வருகையில் சூரிய வட்டம் சுட்டுப்*
*பொசுக்கிற் றதனால் பொங்கிய வியர்வைநீர்*
*பட்டு குங்குமப் பொட்டு கலைந்தது !*

## தோழி

*ஓயாமல் வடக்கே ஓடும் கங்கையை*
*வேலேந்து சோழர்கள் வெட்டினர் என்றும்*
*பஃறுளி ஆற்றினைப் பாண்டியன் நெடியோன்*
*வெட்டினான் என்றும் விளக்கிக் கூறிய*
*பெண்ணே செந்தமிழ் காத்திடுங் கண்ணே !*
*கண்கள் சிவந்திடக் காரணம் என்ன?*

### தலைவி

வான்கண் விழியா வைகைறப் பொழுதில்
செவ்வாய் கருங்கண் வெண்ணகைப் பெண்டிரொடு
மூச்சுநனை யாமலும் பேச்சுநனை யாமாலும்
குளிர்ந்த தாமரைக் குளத்தில்நீ ராடினேன்.
சேல்விழி அதனால் சிவந்துபோய் விட்டது !

### தோழி

முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை
இனியவ் வழக்கம் ஏற்பதற் கில்லை
காக்கை பாடினியின் பெயர்நச் செள்ளை
என்றெனக் குணர்த்திய ஈர நிலவே'
கன்னி அன்னமே! கல்வி அமுதமே !
உன்கை வளையல் உடைந்ததேன் கூறுக !

### தலைவி

மணிக்குயில் கூவி மகிழ்ந்திடும் சோலையில்
ஆசைத் தென்றல் அசைந்திடும் மாலையில்
பந்து விளையாடிப் பழகினோம்; ஆங்கோர்
பாவை எறிந்தபூப் பந்து பட்டதால்,
வளையல் உடைந்தது மாங்கனி மங்கையே !

## தோழி

*வாய்மொழி வளர்ந்தால் தாய்மொழி வளரும்*
*தாய்மொழி தேய்ந்தால் தன்மானம் தேயும்*
*நோய்கொண் டாலும் கொளலாம் மதமெனும்*
*பேய்கொளல் தீதெனப் பேசி விளக்கும்*
*சிந்தனைச் செல்வியே! செந்தமிழ்க் கிளியே!*
*இந்தப் பற்குறி எவ்வாறு வந்தது?*

## தலைவி

*சித்திரக் கிளிக்கொரு முத்தம் கொடுத்தேன்*
*பச்சைக் கிளியோ பவளவாய் இதழ்களைக்*
*கொழுத்துப் பழுத்த கோவைக் கனியென*
*எண்ணிக் கொண்டென் இதழ்களைப்*
*புண்ணாக்கி விட்டது பூங்கொடி வஞ்சியே !*

# கொய்யாக் கனி

(கும்மி)

வெள்ளிக் கிழமை பிறந்தவளாம்-அவள்
வேலிப் பருத்தியைப் போன்றவளாம்
பள்ளக் கடலவள் பார்வைகளாம்-புதுப்
பங்கயப் பூக்களே செங்கைகளாம்

பெய்யும் மழைபோற் குளிர்ந்தவளாம்-அவள்
பிச்சி மலர்போற் சிறந்தவளாம்
நெய்யின் நிறத்தினைப் போன்றவளாம்-அவள்
நெற்கதிர் நாணம் உடையவளாம் !

துய்ய தமிழ்க்கவி செய்பவளாம்-அவள்
தொட்டால் சுடாதவோர் செந்தணலாம்
கொய்யும் தளிரது போன்றவளாம்-அவள்
கொய்யாக் கனியாய் இருப்பவளாம் !

# விருந்து

(சந்த விருத்தம்)

வினையே புரிந்து மழைநா ளறிந்து
விரிநீர் கடந்து வருவார்
கனியே கலந்த மொழியா லமைந்த
கதைகா வியங்கள் நவில்வார்
இனியே விருந்தின் சுவையே யருந்தி
இதழே பொருந்தி மகிழ்வேன்
தனியே பிறந்து தமிழ்போற் குளிர்ந்து
சரியாய்த் திரண்ட நிலவே !

அறமே புரிந்த வினைவீ ரரென்னை
அணைவார் அணைந்து புகழ்வார்
துறைமீ தமர்ந்து விழிவே லெறிந்து
தொடுதோள் படிந்து மகிழ்வேன்
பிறைமீ தெழுந்த ஒளியால் தளர்ந்து
பெருமூச் செறிந்த நிலைபோம்
நிறமே புரிந்து நுரைவாய் திறந்து
நிலையாய்க் கனைக்குங் கடலே !

# அணங்கோ?

கனத்த குண்டலம் காதில் அசைந்திட
என்னெதிர் நிற்கும் ஏந்திழை இவள்யார்?

எழுதா இயற்கை எழிலினால் என்னை
வாட்டி வருத்தும் வனிதையோ ரணங்கோ?

நிழல் வளர் சோலையில் நிற்பத னாலும்
கனிந்தமென் சாயல் காட்டுவ தாலும்
மரகதப் பச்சை மயிலோ? அதுவும்
நன்குதேர்ந் தெடுத்த நாட்டியப் பறவையோ?

நங்கையை என்னுளம் நாடுவ தாலும்
நுணுக்கமாய் இவளெனை நோக்குவ தாலும்
மங்கையோ இந்த நங்கை யாரென்
றையங் கொண்டே என்னுளம்
மையல் வண்டென மயங்கும் கின்றதே !

# சொல்லாதே !

*(சிந்து)*

*தென்றலின் தங்கையவள்-செந்*
*தேனின் கலசமவள் !*
*கன்னியோ அஞ்சுகின்றாள்-கருங்*
*கடலே கனைக்காதே !*

*குளிர்பிறை போன்றவளாம்-மலர்க்*
*கொத்தினை ஒத்தவாளம் !*
*கிளிமகள் அஞ்சுகின்றாள்-அல்லிக்*
*கேணியே பொங்காதே !*

*உறவில் உறங்குபவள்-நிலவே*
*உன்னைக்கண் டஞ்சுகின்றாள் !*
*மறைவில் நடப்பவற்றை-நீ*
*மாந்தர்க்குச் சொல்லாதே !*

# நாடகப் பத்தினி

நாடகப் பத்தினிநான்-குளிர்நதி
நாட்டின் விலைமகள்நான் !
வாடகைச் சத்திரம்நான்-சுகம்பெற
வந்தால் கிடைத்திடும்தேன் !

ஆலயம் செல்லுகின்றேன்-சுடரொளி
அங்குநான் ஏற்றுகின்றேன்
வாலிப ஆசையொடு-குருக்களோ
வார்த்தைகள் ஆடுகின்றார் !

அவர்க்கொரு தோட்டமுண்டு-தனிமையில்
அங்குநான் செல்வதுண்டு
சுவைத்திடும் ஆசைகொண்டு-கலந்தபின்
தூங்கவோர் கட்டிலுண்டு !

சின்னஞ் சிறுகிளியே-உலகமிச்
செய்தி அறிந்துவிடின்
என்னைப் பழித்திடுமோ-இழிமொழி
எல்லாம் உனக்கலவோ ?

வெள்ளிப் பகற்பொழுதில்-நகைக்கடை
வீதியில் செல்லுகின்றேன்
அள்ளி எனையணைத்தே-மகிழ்ந்திட
அள்ளி வழங்குகின்றார் !

அவர்க்கொரு தோட்டமுண்டு-தனிமையில்
அங்குநான் சொல்வதுண்டு
சுவைத்திடும் ஆசைகொண்டு-கலந்தபின்
தூங்கவோர் கட்டிலுண்டு !

சின்னஞ் சிறுகிளியே-உலகமிச்
செய்தி அறிந்துவிடின்
என்னைப் பழித்திடுமோ-இழிமொழி
எல்லாம் உனக்கலவோ ?

உண்ணும் விடுதியிலே-அமர்ந்துநான்
உண்ணும் பொழுதினிலே
வண்ணப் பறவையெனை-விடுதியை
வைத்தவர் தீண்டுகின்றார் !

அவர்க்கொரு தோட்டமுண்டு-தனிமையில்
அங்குநான் செல்வதுண்டு
சுவைத்திடும் ஆசைகொண்டு-கலந்தபின்
தூங்கவோர் கட்டிலுண்டு !

சின்னஞ் சிறுகிளியே-உலகமிச்
செய்தி அறிந்துவிடின்
என்னைப் பழித்திடுமோ-இழிமொழி
எல்லாம் உனக்கலவோ ?

(ஆயிரம் ஆண்டுகட்கு முன் இயற்றிய கொரிய நாட்டுக் கவிதையின் தமிழாக்கம்)




நெருப்பு
செய்திகள்
சோஷலிசத்தில் நம்பிக்கை
உள்ளோர் ஒன்றுபட வேண்டும்
தந்தை பெரியார்

உள்ளே. . .

கரந்தைக் கவியரசு

அடிகளார் பேச்சு

புயநானூறு

சங்கிலித் திருடன்

கன்னியும் தென்னையும்

# கரந்தைக் கவியரசு

வீங்குபுகழ் பெற்ற வேங்க டாசலம்
பிள்ளை என்பார் பெருந்தமிழ்ப் புலவர்
கற்றறிந் தொழுகிய கவிஞர் அவரோ
ஆயிரம் நூற்கள் அடங்கிய தோர்நூல்
போன்றவர்! இலக்கியப் புதுமை தந்தவர்.

அகநா னூறது சுக்நா னூறு.
பண்டைய புலவர்தம் பாட்டுப் படையல்,
அதற்கோர் புத்துரை அறிஞர் வழங்கினார்
கட்டுரை தீட்டினார் கவிதைகள் நீட்டினார்
அவசரக் கவிதைகள் அடிக்கடி பாடினார்
அவரது பாடலில் நகைச்சுவை யதிகம் !

விருந்துப் புலவராம் வேங்க டாசலம்
பிள்ளை யவர்கட்குப் பெரும்பண் டிதமணி
'கரந்தைக் கவியர' சென்னும் பட்டம்
வழங்கினார் வழங்கி வாழ்த்தினார் கவிஞரை!

வழங்கத் தகுந்தவர் வழங்கினார்; அதனை
ஏற்கத் தகுந்தவர் ஏற்றுக் கொண்டார்.

தகுதி மிக்கோர் தருகின்ற பட்டம்
பகுதி போன்று நிலைத்து நிற்கும்

தகுதி இலாதார் தருகின்ற பட்டம்
சிறப்பிலாப் பட்டமே; காற்றில்
பறக்கும் பட்டமே அடிக்குந்தம் பட்டமே!

# அடிகளார் பேச்சு

(புதுக்கோட்டையை அடுத்துள்ள கடியாப்பட்டியில் 26-11-55ல் நடைபெற்ற திருக்குறள் விழாவில், திருப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் கவிதைகளில் தரப்பட்டிருக்கிறது.)

புகழ்கொண்ட தமிழ்நாட்டில் வாழ்ந்த முன்னோர்
    பொருளீட்டி அப்பொருளை யெல்லாம் மக்கள்
தொகைகொண்ட இப்புவியில் தாங்கள் மட்டும்
    சுகிப்பதற்குப் பயன்படுத்திக் கொண்டா ரில்லை
அகங்கொண்ட துயரத்தை முகத்திற் காட்டி
    அல்லலுற்ற மாந்தர்க்கும் வழங்கி வந்தார்.
பகைகொண்டால் சமுதாயம் சிதறிப் போகும்
    பணப்பையை மறைத்தாலும் தீமை தோன்றும்.

முன்னோர்போல் அறஞ்செய்வீர் அறநூல் கூறும்
    முத்திக்கு வித்திதுவே யாகும். முன்னர்த்
தென்னாடு வழங்கிற்று. வழங்கும் மாந்தர்
    செத்தாலும் அவர்கீர்த்தி சாவ தில்லை.
தன்வீடு வந்தொருவன் கேட்கும் போது
    தடையின்றி வழங்குவன் மேலோன் ஆவான்.
அன்றாடம் தலைவியிடம் தலைவன் காணும்
    அகைச்சுவையாம் அதனைவிட இன்பங் காண்பான்.

மண்ணுலகில் வாழ்வாரை எல்லாம் மோட்ச
மண்டலத்திற் கனுப்பாமல் அந்த மோட்ச
மண்டலத்தை யேயிங்குக் கொண்டு வந்து
மாந்தர்தம் முன்னிலையிற் காட்ட வேண்டும்.
பண்பறிந்த பெரியோரும் சிறந்த கேள்விப்
பண்டிதரும் அறிஞர்களும் இருந்தா லன்றி
உண்மையிலோர் நாட்டுக்குப் பெருமை இல்லை.
உள்ளத்தில் ஒளியின்றேல் தெளிவு மில்லை !

தவித்தலையும் மாந்தர்துயர் தீர்த்தி டாமல்
தலைவரெலாம் ஆளுக்கோர் கட்சி பேசி
நவக்கிரகம் எனத்திரும்பிக் கொண் டிருந்தால்
நாட்டுக்கு நல்வாழ்வா கிடைக்கும்? கொட்டிக்
கவிழ்த்திடுதல் மிகயெளிதே! ஒன்று பட்டுக்
கடமைசெயின் தன்னாட்சி பெறுதல் கூடும்.
புவித்தலைமை பெறுதற்கும் முடிமூ வேந்தர்
பொற்காலம் காணுதற்கும் முயற்சி செய்வீர் !

இன்றுள்ள தமிழரெலாம் அந்த நாளில்
இருந்தவர்போல் தலைநிமிர்ந்து வாழ்தல்வேண்டும்.
என்றென்றும் செந்தமிழைக் காத்தல் வேண்டும்.
ஏமாற்றும் மனப்பான்மை மறைதல் வேண்டும்.
நன்மைக்கு நம்செயலைப் பிறந்த நாட்டின்
நலம்வேண்டி நம்முயிரை ஈதல் வேண்டும்
குன்றைப்போல் தடைசெய்யும் சாதி பேதக்
கொடுமையிலாச் சமுதாயம் அமைதல் வேண்டும்.

(செய்தி : தினத்தந்தி

# புற நானூறு

இரவு நேரம் மணியோ ஏழரை
நிமிராத பிறைநிலா நீந்திற்று வானில்
இழைவிளக்கு வீட்டில் இமைத்துக்கொண் டிருந்தது.

எண்ணெய் விளக்கும் இயற்கை விளக்கும்
இருட்டை விழுங்கிக்கொண் டிருந்த வேளையில்
புறநா னூற்றைப் புரட்டிக்கொண் டிருந்தேன்.

"நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையாக்
கடிய கூறும் வேந்தே தந்தையும்
நெடிய வல்லது பணிந்துமொழி யலனே
இஃதிவர் படிவ மாயின் வையெயிற்
றரிமதர் மழைக்க ணம்மா வரிவை
மரம்படு சிறுதீப் போல
அணங்கா யினடான் பிறந்த வூர்க்கே"
என்னும் பாடல் என்னைக் கவர்ந்தது.

பண்டைக் காலத்துப் பகைவர் கரங்களில்
இருந்தவேல் நுதிவேல் இரும்புக் கூர்வேல்
இன்றைய நாட்களில் எல்லாம் தங்கவேல்
வீர மில்லாத விலைவேல் வீண்வேல்
என்னுமோர் எண்ணம் இதயத் தெழுந்தது.

என்மகன் கல்லாடன் என்பான் வந்தே
பெரும்போர் நூலின் பெயரைக் கேட்டனன்.

"புறநானூ றிதன்பெயர் புரிந்துகொள்" என்றேன்.
"புயநா னூறா" என்றான் புதல்வன்.
இவ்வாறு சொல்லவே என்மகன் சொல்லிய
புயநா னூறெனும் புதியசொல் பற்றி
ஆராயத் தொடங்கினேன் ஆழ்ந்துசிந் தித்தேன்.

விழிகளும் புயங்களும் வீரத்தைக் காட்டிடும்
உறுப்புக்கள் ஆதலின் ஓங்குபுகழ் நூலாம்
புறநா னூற்றைப் புயநா னூறெனக்
கூறுவ தாலே குற்ற மில்லை
என்னும் முடிவோ டெழுந்தேன் எழுந்து
மழலைப் புலவனை, விளையா
மழலைப் புதல்வனை வாரியணைத் தேனே!

# சங்கிலித் திருடன்

'மாதர்' என்னும் மதுரத் தமிழ்ச்சொல்
இயற்கையாய் அமைந்த எழிலைக் குறிக்கும்.

அதனா லன்றோ அருள்மொழி அப்பர்
கூனலொடு பிறக்கும் குளிர்நிலா முளையை
"மாதர்ப் பிறை" யென மகிழ்ந்து பாடினார்!

பேரெழில் கொண்டோர் பெண்டிரே ஆதலின்
வான்விழிப் பெண்டிரை "மாதர்" என்றனர்.

சீதை அழகிற் சிறந்தவள், நிலவின்
பாதியை நெற்றியாய்ப் பழத்தை இதழ்களாய்
அமுத நுணுக்கத்தை அங்கமாய்ப் பெற்று
விளங்கிய கோதையாம் மெல்லிய சீதையைக்
கட்டளை இராவணன் கவர்ந்து சென்றனன்

பொன்கொண்டு செய்த புத்தர் சிலையை
திருமங்கை ஆழ்வார் திருடிச் சென்றார்.

சிறுநிலா விளக்காம் சித்திரச் சீதையை
இராவணன் கவர்ந்தான். ஏனவன் கவர்ந்தான்?

கண்ணையும் கருத்தையும் கவர்ந்ததால் கவர்ந்தான்.
ஆழ்வார் திருடினார் அவரேன் திருடினார்?

பற்றற்றான் பற்றினைப் பற்றிட முயன்ற
பக்தர்க்குப் பொன்மீது பற்றேற் பட்டதால்
நாகையில் இருந்த நல்லபொற் சிலையைத்
திருவடி ஆழ்வார் திருடிச் சென்றார்.

அழகின் மயக்கம் யாரை விட்டது!
வெம்புசெம் பொன்னை விரும்பா தார்யார்?

பேரெழில் மிக்க பெண்டிரைக் கண்டு
பெருமூச்சு விடாத பேரும் உண்டோ?
சுயநலம் கொண்டோர் சுரண்டிக் குவிப்பதும்
வறுமை யுற்றவர் வாட்ட முறுவதும்
தீய நெஞ்சினர் திருட முயல்வதும்

அந்த நாள்முதல் இந்த நாள்வரைத்
துன்ப உலகின் தொடர்கதை யாகும்.
அந்தக் கதைக்கோர் அங்கம் வகித்தவன்
சிங்கப்பூர் நகரின் சங்கிலித் திருடன்.

இரவையும் பகலையும் இணைத்துப் பொருத்தும்
பொழுதினை அந்திப் பொழுதென்று கூறுவர்!

அன்றொரு நாள்செவ் வந்திப் பொழுதினில்
செல்வம் கொழிக்கும் சிங்கப்பூர் நகரில்
ஓவியப் பெண்களும் ஆண்களும் உலவினர்.

இருண்ட மீசையும் சுருண்ட முடியும்
சேலின் விழியெனச் சிவந்த விழிகளும்
கொண்டோ னாகிய குள்ளத் திருடன்
களவு செய்யும் கருத்தொடு நடந்தான்.

அந்தி மாலையில் அந்நகர்ப் புறத்திலே
குட்டி முதலையைக் குள்ளன் திருடி
ஆட்க ளிடத்தில் அகப்பட்டுக் கொண்டான்.
நீரில் கிடந்த நீண்ட முதலையின்

குட்டியைத் திருடிய குள்ளனைக் கண்டு
சிங்கப்பூர் நகரமே சிரித்தது வியந்தது!

ஓங்கி வளர்ந்த ஓமை மரத்தின்
முதிர்பட்டை போன்ற முதலையின் தோலைப்
பெற்றிட வேண்டிக் குற்றம் புரிந்த
தழும்புத் திருடனைச் சாராயக் கள்வனை
சிங்கை அரசு சிறையில் வைத்தது!

அன்னவன் சிறையிலே அடைபட்டான் எனினும்
இருண்டவன் உள்ளம் இருந்ததா சிறையில்?

உலகில் தீமை ஒழிந்ததா?
உலகம் திருட்டை ஒழித்ததா? இல்லையே !

செய்தி : தினத்தந்தி
(21-2-61)

# கன்னியும் தென்னையும்

பத்து வயதோ பாவாடைப் பருவம்
பதினைந்து வயதோ பூவாடைப் பருவம்.

பூத்து மலர்ந்த் பொன்னி என்பவள்
பத்தும் ஐந்தும் தொத்திய வயதினள்.

அந்த மங்கையோ அழகு சண்பகம்!
அந்தி நிலவுக் கறிமும் அவள்முகம்!
சிறிது கற்றவள் செந்நிறம் பெற்றவள்.

அன்னவள் ஒருநாள் அந்தி மாலையில்
வீட்டை விட்டு வெளிபுறம் வருகையில்

கூந்தல் ஏந்திய குளிரிளந் தென்னையின்
தனிக்காய் ஒன்றவள் தலையில் வீழ்ந்தது.

*தலையில் வீழ்ந்ததால் தரையிற் சாய்ந்தனள்.*
*மிதக்கும் மேகமும் மின்னலும் சேர்ந்து*
*தரையில் வீழும் தன்மையைப் போல!*

*வீங்கிய தேங்காய் வீழ்ந்ததால் அந்தப்*
*பெண்ணழகி புதிய புண்ணழகி யாயினள்!*

*வாயி லிருந்தும் மலர்மூக்கி லிருந்தும்*
*வழிந்தது செந்நீர்! எழுந்தது கண்ணீர்!*

*கண்ணைவிட் டெழுந்த கண்ணீர் ஊர்வலம்*
*கட்டாந் தரையைத் தொட்டு நின்றது.*
*தெங்கம் பழத்தினால் பொன்னியின்*
*அங்கத்தி லோர்தழும் பமைந்து விட்டதே!*

செய்தி : தினத்தந்தி
*(11-5-63)*



# காவியக் கடிதங்கள்

உள்ளே. . .

நெப்போலியன் நினைக்கின்றான்

படை வேண்டும்

வாழைப்பூ வேதாந்தம்

# நெப்போலியன் நினைக்கின்றான்

மின்னலிடை மாதரசி முகத்தி லுள்ள
விளக்கேற்றி விளையாடும் பருவப் பெண்ணே!
இன்னமுதே தாந்தேயின் கவிதை போல
இனிப்பவளே ஜோசபையின் குயிலே கண்ணே!
உன்வதனம் பாராமல் விண்ணில் நீந்தும்
ஓரேநிலவைப் பார்க்கின்றேன் நெடுநா ளாக
என்னருகே நீயில்லை அதனால் ஏதும்
இனிக்கவில்லை இரவிருந்தும் பயனே இல்லை!

பொன்முடிபோற் சிறந்தவளே பிரான்சு நாட்டின்
பூந்தோட்டம் போன்றவளே பளிங்குப் பெண்ணே!
என்னைவிட மூத்தவள்நீ எனினும் நல்ல
இளந்தளிரைப் போன்றவள்நீ இன்பக் கேணி
நின்றுநின்று மயக்கி வரும் மயில்நீ ஈர
நிலவும்நீ நித்திரைச்சத் திரமும் நீயே
தின்பனவும் உண்பனவும் இரவில் தொட்டுத்
திறக்கின்ற புத்தகத்தின் தொகுப்பும் நீயே!

பின்தூங்கி முன்னரெழும் வண்ணப் பெண்ணே!
　　பேரறிஞன் ரூசோவின் புத்த கத்தை
அன்றோர்நாள் நான்படித்துக் கொண் டிருந்தேன்
　　அப்போது நீ யென்னைக் காண வந்தாய்
தென்னாட்டு முத்தெனவே நகைத்து நின்றாய்.
　　சித்திரமே நான்தொட்டேன் ஒட்டிக் கொண்டாய்.
உன்பார்வை என்பார்வை இரண்டும் பேச
　　உடனேநாம் இருட்டறையில் எச்சி லானோம்.

முதல்மனைவி நீயெனக்கு; நானு னக்கு
　　முதலிரவுக் காதலனாய் வாய்க்க வில்லை.
புதுமதுவும் நீயன்று வண்டு கிண்டாப்
　　புதுமலரும் நீயன்று; மாதே உன்றன்
சதையிதழ்கள் கண்ணாடிக் கன்னம் ஆசை
　　தருகின்ற மதிவதனம் இவற்றுள் இங்கே
எதுபுதிது? நாடோறும் நீயும் நானும்
　　இட்டுவந்த முத்தமன்றோ புதிது பெண்ணே!

கொடிகொடுத்த மலர்மாதே! கோடை கண்டு
　　கூவுகின்ற பூங்குயிலே! மாற்றான் நாட்டில்
படைநடத்தும் என்பார்வை பகைவர் மீதும்
　　பாசறையின் மீதினிலும் இருத்தல் போலே
உடையுடுத்தத் தெரியாத மைந்தன் பார்வை
　　உன்மீதும் உன்பார்வை கட்டில் மீதும்
இடைதடுத்து நிறுத்தாமல் வளர்த்த நெஞ்சம்
　　என்மீதும் இருக்குமென்ப தறிவேன் மாதே!

முன்னழகும் பின்னழகும் முகத்தின் வாசல்
முத்தழகும் மூக்குமல ரழகும்; வெள்ளை
அன்னமிடும் நடையழகும் காட்டிக் காட்டி
அன்றாடம் கொடியிடையை ஆட்டி ஆட்டிக்
கன்னமெனும் கனிகளிலே கனிவு காட்டிக்
கண்களினால் காதலுக்குப் பாதை காட்டிப்
பொன்னுருவை நின்னுருவில் காட்டி என்னைப்
பூரிக்க வைத்தவளே இதனைக் கேளாய்.

இடியரசன் யானென்றே' வீரம் பேசி
எனையெயதிர்த்தான் ஆஸ்திரியன். பின்னர் அந்த
முடியரசன் சந்தித்தான் ஒருநாள். பேசி
முடிவெடுத்தோம் ஒப்பந்தம் செய்துகொண்டோம்
மடிமலரே! ஆஸ்திரிய நாட்டு மன்னன்
மகளான மேரியைநான் மணந்து கொண்டால்
நெடுங்கடலைத் தரையெனவே நினைக்கும் இந்த
நெப்போலி யன்திட்டம் புகழை யெட்டும்!

உருவத்தாற் சிறந்தவளே! என்றன் நெஞ்சில்
உலாவிவரும் எண்ணமெனும் பெண்ணே கண்ணே!
பருவத்தால் பழுத்தவள்நீ! ஆனால் அந்தப்
பட்டாடைக் கட்டழகி நெஞ்சில் ஏறும்
கருவத்தால் பழுத்தவளே ஆவாள். அந்தக்
காரிகையை நான்காம்நாள் மறுத்தே னாயின்
இருபத்து நான்காம்நாள் நின்ற சண்டை
இனிதொடரும் என்பதனால் ஏற்றுக் கொண்டேன்.

கடல்நீரைத் தொடுவதுபோல் நீல வானம்
கண்களுக்குத் தெளிவாகத் தெரிந்த போதும்
நெடுவானம் கடல்நீரைத் தொடுவ தில்லை.
நிழல்படிந்தோ ஆடையழுக் காகும்? அந்த
முடிவேந்தன் மகளான மேரி என்பாள்
மோகத்தின் வேகத்தால் தழுவி னாலும்
உடைமாற்றி நடைமாற்றும் மாதே! நானென்
உள்ளத்தைப் பறிகொடுத்து விடவே மாட்டேன்.

பகைதடுக்கி வீழாத யானோ இங்கே
பழுத்தநிற நெருப்பினிலே கொழுத்து வீங்கும்
புகைதடுக்கி வீழ்த்திடுவேன்? என்னைப் போன்ற
போர்வீரன் இப்புவியில் உள்ள மக்கள்
தொகைதடுத்தே எதிர்த்தாலும் அஞ்ச மாட்டான்.
தோள்வலிமை இலாதவன்போல் கெஞ்ச மாட்டான்.
சுகந்தடுக்கி வீழ்வதுண்டு சிலபேர்; யானோ
துன்பங்கள் தடுத்தாலும் தளர மாட்டேன்.

நதிநம்மைப் பிரிக்கவில்லை! பிரிந்தால் பெண்ணே
நானந்தப் பிரிவினையை வீழ்த்தி வெல்வேன்
சதிநம்மைப் பிரிக்கவில்லை; பிரித்தால் கண்ணே
சாதிக்கப் பிறந்தோன்யான் வெற்றி காண்பேன்.
மதம்நம்மைப் பிரிக்கவில்லை; பிரித்தால் காதல்
மாதேநான் அப்போதும் அடைவேன் உன்னை.
விதியன்றோ பிரித்துளது நம்மை! அந்த
விதியினையார் இப்புவியில் வெல்லக் கூடும்?

கதைமாறி விட்டதென்று கலங்கி உப்புக்
கண்ணீரால் நீநனைந்து கொள்ள வேண்டாம்.
சதிகாரன் இவனன்றோ? என்றெண் ணாதே!
சபிக்காதே நீயென்னை, வாழ்வு தந்த
மதுமாது நீயெங்கே! பகைமை கொண்ட
மன்னவனின் மகளெங்கே! இனிநான் இங்கே!
அதிகாரப் பத்தினியைக் கண்ணால் காண்பேன்
ஆருயிரே நானுன்னை உளத்தால் காண்பேன்.

அறிவுள்ள மங்கையவ ளிடத்தில் பூவும்
அழகியிடம் செம்பொன்னும் தருதல் வேண்டும்.
பிறையுள்ள வானத்தின் மீனே! காதற்
பேச்சினிலே சிறந்தவளே அழகுப் பெண்ணே!
குறைகொள்ளாச் செம்பொன்னைப் பூத்த பூவைக்
கொடுத்துவந்தேன் உன்னிடத்தில் ஒவ்வோர் நாளும்
நிறைவெள்ளம் போன்றவளே நிலவுப் பூவே
நெஞ்சிருக்கும் வரையுன்றன் நினைவி ருக்கும்!

இப்படிக்கு,
நெப்போலியன்

# படை வேண்டும்

பலர்புகழும் செங்கதிர்போல் விளங்கும் சேது
　　பதிக்கரசே! படைக்கரசே! எங்கள் நாட்டின்
நிலைதளர்ந்த நேரத்தில் தங்கட் கிந்த
　　நீட்டோலை தீட்டுகின்றேன். புதுமை செய்யும்
கலைஞர்பலர் வாழ்ந்துவரும் மதுரை மீது
　　கல்லெறியும் கூட்டத்தார் எருமை நாட்டார்
அலையெனவே முன்னேறி அங்கு மிங்கும்
　　ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடு கின்றார்.

இரும்புதந்த நெஞ்சுடையான், பாம்பின் பல்லில்
　　இடம்பெற்ற நஞ்சுடையான், எருமை நாட்டான்
கரும்புதந்த மாதர்கருங் குழல விழ்ந்து
　　கவிழ்ந்தாற்போல் கூடாரம் அமைத்து விட்டான்.
அரும்புதந்த சிரிப்புடைய பெண்டிர் கற்பை
　　அழகுதந்த இரவினிலே கெடுத்தும்: கல்வி
வரம்புதந்த சுவடிகளை எரித்தும்; நாட்டின்
　　வரலாற்றை மாற்றுதற்கு முயலு கின்றான்.

வெண்ணிலவு தன்நெற்றித் தழும்பை விட்டு
விடுவதில்லை; நீரில்வாழ் முதலை மூர்க்கன்
கொண்டதனை விடுவதில்லை; அந்த நோக்கம்
கொண்டவனாம் கந்திருவ நரச ராசன்
திண்டுதிண்டாய்ப் பாராங்கல் படுத்தி ருக்கும்
திண்டுக்கல் நகரத்தைப் பிடித்து விட்டான்.
சண்டைவெறி கொண்டிருக்கும் எருமை நாட்டான்
சத்தியமங் கலம்வரையில் வந்து விட்டான்.

கல்லைவைத்தும் கருங்கடலின் நீரை வைத்தும்
கற்றறிந்தார் தமிழ்நாட்டுக் கெல்லை வைத்தார்.
சொல்லைவைத்தும் சொல்குறிக்கும் பொருளை வைத்தும்
தொல்புலவர் பொய்யாத புகழை வைத்தார்.
முல்லைவைத்துக் காடுகளைக் கடந்து, நாட்டின்
முகம்போன்ற எல்லையில்கால் வைத்து விட்டான்.
எல்லையிலே பகைவர்தம் காலை வைத்தல்
இதயத்தில் தீவைத்தல் போன்ற தாகும்.

தென்னாட்டை வடநாட்டான் தாக்க வில்லை.
தென்னவனே தென்புலத்தைத் தாக்கு கின்றான்.
தன்மீதே தீவைத்து கொண்டு சாதல்
தற்கொலையாம்? அக்கொலைபோல் இந்த நாட்டை
முன்னாளில் அரசாண்டு வந்த மூன்று
முடிவேந்தர் தம்மைத்தாம் தாக்கிக் கொண்டார்.
இன்றேனும் மாறிற்றா நிலைமை? இல்லை;
ஏனென்றால் இனஉணர்ச்சி தமிழர்க் கில்லை!

திருவோங்கும் தலைநகரில் அமைதி யில்லை,
சிறப்போநற் பூசனையோ நிகழ வில்லை.
வரிவேங்கைப் புலிவலிமைப் பகைவர் தம்மால்
வருங்காலம் என்னாமோ என்றே அஞ்சி
நடைசேர்ந்த முதியோரும் தொங்கும் தாலி
நங்கையரும் மங்கையரும் இளஞ்சி றாரும்;
உரல்சேர்ந்த புதுச்செந்நெல் போலும்; பாலின்
உள்ளுறையாம் தயிர்போலும் அடங்கி யுள்ளார்.

தாய்கொண்ட பேரன்பு காட்டு கின்ற
தமிழ்மக்கள் ஆதரவைப் பெற்ற யானோ
நோய்கொண்டு கிடக்கின்றேன் படுக்கை மீது!
நொய்கண்டு, கோழியதைக் கொத்து தற்கு
வாய்கொண்டு வருவதுபோல் மதுரை மூதூர்
வாசலுக்கு வருகின்றார் பகைவர், யானோ
பாய்கொண்ட காரணத்தால் போர்வா ளேந்திப்
படைமுகத்தில் நின்றிடவோ இயல வில்லை!

மனவலிமை இருந்தாலும் ஓர்நாட் டுக்கு
மற்றபல வலிமைகளும் இருத்தல் வேண்டும்,
வினைவலிமை படையெடுக்கும் பகைவர் நாட்டின்
வேல்வலிமை வாள்வலிமை தனக்கே யுள்ள
தனிவலிமை துணைவலிமை இவற்றை யெல்லாம்
தக்கபடி சீர்தூக்கிப் பார்க்கும் போதில்
இனியவரே தங்கள்துணை இருந்தா லன்றி
எதிரிகளை முறியடித்தல் கடின மாகும் !

பொழிப்பகலம் புதுநுட்பம் எச்சம் நான்கும்
பொருந்தியதோர் உரைநூற்போல்; சிறந்த சேனை
விழித்தெழுந்து மாமதுரை நகரைத் தாக்கும்
வேளையில்நீர் உதவிசெய வேண்டும். இன்றேல்
செழித்தெழுந்த சோலைகளும் மலையும் காடும்
சேர்ந்தெழுந்து விளங்குகின்ற மதுரை மூதூர்
இழுத்தெறிந்த பொருள்போலாம்! எங்கள் ஆட்சி
இசைநுணுக்கம் எனும்நூற்போல் மறைந்தே போகும்.

உன்னமெனும் மரத்திலுள்ள இலைகள் வாடி
உதிருமெனில்; போர்புரியச் சென்றி ருக்கும்
மன்னவனின் படைதோற்கும் என்பர். அந்த
மரம்பூத்தால் அவன்படையே வெல்லு மென்பர்.
இன்றுவரை ஈங்குள்ள உன்னம் என்னும்
இலவமரம் வாடவில்லை. எனினும் அந்தக்
கன்னடரை முறியடித்து வெல்ல வேண்டிக்
கட்டாயம் உதவிசெய வேண்டு கின்றேன்.

இப்படிக்கு,
திருமலைநாயக்கன்

# வாழைப்பூ வேதாந்தம்

பெருங்கீர்த்தி பெற்றஷெல்லி பிறந்த நாட்டில்
　　பிறந்தவரே! லார்டுபெண்டிங் துரையே! நாட்டின்
வருங்காலம் அறிந்தவரே! வணக்கம்! சொல்லில்
　　வல்லவரே நல்லவரே வணக்கம்! உள்ளம்
திருந்தாத முழுமூடர் இந்த நாட்டில்
　　தீமைபல புரிகின்றார். எனவே அன்பே
உருவான பெண்டிரெலாம் அடிமை யாகி
　　உறைக்கிணறு செய்கின்றார் கண்ணீ ராலே!

உயிலெழுதி வைத்துவிட்டுக் காசி என்னும்
　　ஊருக்குச் செல்லுமிவர், காட்டி லாடும்
மயிலழகைப் பார்ப்பதில்லை; அறிவு மிக்கோர்
　　வரலாற்றைப் படிப்பதில்லை; சுடரைக் கொண்டு
வெயிலெழுதும் வானத்தை மதிப்ப தில்லை;
　　வேல்வளர்க்கும் வீரத்தைப் புகழ்வ தில்லை;
கயவர்களின் பதர்க்கதையாம் புராண மென்றால்
　　காதாரக் கேட்கின்றார் போற்று கின்றார்!

நெருப்பினிலே நெய்யூற்றி வேள்வி செய்தே
நேரத்தைப் பாழாக்கி ஒவ்வோர் நாளும்
சிரிப்பினிலே மனஞ்செலுத்தி உண்டு றங்கிச்
சிறுசெயலில் ஈடுபடும் வைதீ கத்தார்
கரிப்பினிலே துவர்ப்பினிலே புளிப்பு காரம்
கசப்பினிலே மனஞ்செலுத்தி மகிழ்வா ரன்றி
இரக்கமிலா நெஞ்சத்தார் ஒருநா ளேனும்
இனிப்புமிகு பொருள்தேட முயல்வ தில்லை.

மைகண்ட விழிமாதர் வெளிப்பு றத்தில்
வரக்கண்டு வெறிபிடித்த மனத்த ராகி
நொய்கண்ட கோழியெனக் கொத்தச் செல்வர்.
நூதனமாய் வைதீகம் பேசிப் பேசிக்
கைகண்ட பேர்வழிகள் அவர்கள்! ஆட்டின்
கறிகண்டால் விடமாட்டார்! பணத்தை மூடும்
பைகண்டார் பாயகலம் கண்டார் அன்றிப்
படிப்பகலம் கண்டவரே யாரு மில்லை!

சாதியென்பார் மதமென்பார் சங்க டத்தைச்
சடங்கென்பார் சாத்திரகோத் திரங்க ளென்பார்
நீதியென்பார் மனுநீதி சிறந்த தென்பார்
நிலையற்ற உடலென்பார் நெய்பால் உண்பார்.
வேதியர்யாம் வீதியர்நீர் என்பார். எல்லாம்
விதியென்பார் வினையென்பார் வேத மென்பார்
ஓதுகலை ஒருசிலர்க்கே உரிய தென்பார்
ஊழ்வினையே வையத்தின் வரலா றென்பார்!

புண்ணுக்கு மருந்தறிவார் இரும்பின் மீது
பொருந்தியுள்ள துருநீங்க வழியும் சொல்வார்
கண்ணுக்கு மருந்தறிவார்; பயிரோ டுள்ள
களையகற்றும் கலையறிவார்; தெய்வ பக்தி
விண்ணுக்கு நமையனுப்பி வைக்கும் என்றே
வேதாந்தம் பேசிடுவார்; நாட்டில் தோன்றும்
சண்டைக்கும் சாதிமத நோய்க ளுக்கும்
சரியான மருந்தைமட்டும் அறிந்தா ரில்லை!

கனியறிவார் காயறிவார் எனினும் காதற்
கனியிலுள்ள சுவைதனை அறிய மாட்டார்.
தினையறிவார் நெல்லறிவார் குறிஞ்சிக் காதல்
திணைகூறும் நுட்பத்தை அறிய மாட்டார்.
மனையறிவார் நிலமறிவார் மனைவி என்பாள்
மனைக்குவிளக் கென்பதனை அறிய மாட்டார்.
இனியறிவார் என்பதற்கும் வழியே இல்லை
ஏனென்றால் பகுத்தறிவே அவர்கட் கில்லை!

அல்லிப்பூ முல்லைப்பூ தாம ரைப்பூ
அத்தனையும் வானத்தை நோக்கிப் பூக்கும்
மெல்லியநல் வாழைமட்டும் தலைகு னிந்து
வீதிமண்ணைப் பார்த்தபடி பூக்கும்; நாட்டின்
நல்லவர்கள் என்கருத்தை ஆதரிக்க
நாலைந்து வைதீக வெறியர் மட்டும்
வல்லமையே இல்லாமல் கூவு கின்றார்
வாழைப்பூ வேதாந்தம் பேசு கின்றார்!

உருவமிலாக் கடவுளுக்கேன் உருவம்? இங்கே
உளிகொண்டு செய்கின்ற சிலையோ தெய்வம்?
இருவிழிபோல் மிகச்சிறந்த மாதர் தம்மை
ஏன்இழிவாய்ப் பேசுகின்றீர்? உலகம் போற்றும்
அரியசெயல் செய்யுங்கள்; வீணில் ஏனோ
அருச்சனைகள் செய்கின்றீர்? என்று கேட்கும்
பெரியதொரு சீர்திருத்தச் சங்கம் வைத்துப்
'பிரமசமா சம்' நடத்தி வருகின் றேன்யான்.

பெற்றோரால் மூன்றுமுறை விரட்டப் பட்டேன்
பித்தர்களால் கங்கையில்நான் தள்ளப் பட்டேன்
கற்கால நெஞ்சத்தார் விட்டெ றிந்த
கற்களினால் ஓர்நாள்நான் தாக்கப் பட்டேன்
முற்றாத சிறுவயதில் திபேத்து நாட்டில்
முட்டைமனத் தோனொருவன் வெட்ட வந்தான்
சிற்றாடைப் பெண்ணொருத்தி உதவி செய்ய
திபேத்தில்நான் உயிர்தப்பி வங்கம் வந்தேன்.

கன்பூஷ்யஸ் என்பவனோர் சீன ஞானி
கற்றறிந்த மாமேதை; உலகம் போற்றும்
அன்பாளன் அவன் தந்தை ஹூலி யாங்ஹை
அவனுயரம் பத்தடியாம்! சென்ற திங்கள்
முன்போபத் தோடென்னை வெட்ட வந்த
முட்டாளும் அவனுயரம் இருப்பான்! கல்வி
முன்னேற்ற மில்லாதார் வைத்தி ருக்கும்
மூலதனம் வேறென்ன கோபந் தானே!

கோபத்தில் உருவாகும் நிறமே என்னைக்
குறைகூறும் அனைவர்க்கும் அந்தி வானம்!
தீபத்தால் வீடுபற்றி எரியு மன்றித்
தீட்டியதோர் ஓவியம்போல் விளங்கும் வீடு
சாபத்தால் எரிவதில்லை என்று ரைத்தேன்.
தற்குறிகள் தாக்கவந்தார். அறிஞர்க் கெல்லாம்
ஆபத்தே ஆகாரம்! துன்பம் ஒன்றே
அவர்க்கிந்த உலகுதரும் பரிசு போலும்!

பேர்வாய்ந்த போர்வேந்தன் சந்த்ர குப்தன்
பிறராலே தீங்குவரும் என்றே அஞ்சி
ஓர்நாளைக் கோரிடத்தில் உறங்கு வானாம்!
உண்மையிலே என்நிலையும் இதுதான். ஆணி
வேர்போன்ற பஞ்சாங்கப் பகைவர் தீமை
விளைவிக்கக் கூடுமெனக் கருதி நல்ல
கூர்வாய்ந்த கத்தியொன்றை மடியில் வைத்துக்
கொண்டுள்ளேன் நானென்னைக் காத்துக் கொள்ள.

வடந்தொட்டுத் தேரிழுக்கும் இந்தி யாவின்
மணக்கோணல் அறிந்தவரே! வைசி ராயே!
புடம்பட்ட பசும்பொன்னைப் போன்ற பெண்கள்
பூவோடும் பொட்டோடும் மஞ்ச ளோடும்
உடன்கட்டை ஏறிவரும் வழக்க மிங்கே
உண்டென்ப தறிவீர்நீர்; ஆய்ந்து பார்த்தால்
முடம்பட்ட நெஞ்சத்தார் புகுத்தி விட்ட
முழுமூடத் தனமென்ற முடிவே தோன்றும்.

குழந்தைகளை ஈன்றிடவோ இந்துப் பெண்கள்
குலவிமகிழ்ந் திருப்பதற்கோ பார்சிப் பெண்கள்
அழகொடுதம் இல்லத்தை வைத்துக் கொள்வோர்
ஆப்கானி தேசத்துப் பெண்கள் என்பர்.
பழையகதை இவையனைத்தும் இன்றோ இந்துப்
பத்தினிகள் உடன்கட்டை ஏற வேண்டும்!
விழியிலொன்று கெட்டுவிடின் முகத்தில் மற்றோர்
விழிவாழக் கூடாதோ? கூடா தாமே!

கால்கிழிந்த கட்டிலென்னும் பாடை மீது
கதைமுடிந்த சதைப்பிணத்தைப் படுக்க வைத்தே
நால்வரதைச் சுடுகாடு சுமந்து செல்லல்
நடைமுறைதான் நாமிதனை அறிவோம்; ஆனால்
பால்நிலவுப் பத்தினியும் பாடை மீது
படுப்பானேன்? உடன்கட்டை ஏறு வானேன்?
வேல்தொடரும் விழியுடையாள் கணவ னோடு
வெந்துவிட வேண்டுமென்ப தென்ன நியாயம்?

வேலையினால் உடல்தளர்ந்தும் வேளா வேளை
விழித்திருந்தும் பசித்திருந்தும் காத்தி ருந்தும்
காலமெலாம் கணவனுக்குத் தொண்டு செய்தும்
கருவடைந்தும் அதனாலே அழகி ழந்தும்
தாலியெனும் வேலிக்குள் இருந்து வாழும்
தையல்செத்தால் அவள்கணவன் சாவ தில்லை!
மாலையிட்ட மணவாளன் மாண்டு போனால்
மனையாட்டி ஏன்சேர்ந்து சாக வேண்டும்?

சொந்தமொழி யாம்வங்கம் அரபி கிரேக்கம்
　　சுவைசொட்டும் மராட்டிமொழி இனிக்கும் ஈப்ரு
இந்தி வட மொழி சிறந்த லத்தீன் பார்சி
　　இவற்றொடுநான் ஆங்கிலமும் அறிவேன். பெண்கள்
சந்ததியை இவ்வாறு தீயில் தள்ளும்
　　சம்பவத்தைப் பிறர்நூலில் படித்த தில்லை!
மந்திரங்கள் முணுமுணுக்கும் இந்தி யாவில்
　　மட்டுந்தான் இக்கொடிய வழக்க முண்டு!

பெருந்துன்பம் தருகின்ற தீயில் விழும்
　　பேதையரே கேளுங்கள் ! உங்கள் வாழ்வை
விருந்தென்று கருதுங்கள்; செயற்கைச் சாவை
　　விரும்புவதால் புதுநன்மை பெறவே மாட்டீர்!
மரங்கொண்ட கனியொன்று வீழ்ந்த தென்று
　　மரக்கிளையோ அம்மரமோ வீழ்வ துண்டோ?
திருந்துங்கள் என்றாலும் கேட்ப தில்லை
　　திருத்துகின்றோம் என்றாலும் விடுவ தில்லை.

சித்திரப்பெண் பத்தினியும் காஷ்மீ ரத்தில்
　　சிற்சிலரும் செஞ்சியிலோர் புதுமைப் பெண்ணும்
கத்துகடல் முத்தரசன் ராச ராசன்
　　காலத்து மங்கையரும் தீயில் தூங்கிச்
செத்ததைநாம் வரலாற்றில் அறிவோம், அன்னார்
　　தேன்வாழ்வை ஏன்கெடுத்துக் கொண்டா ரென்றால்
பத்தினிமார் உடன்கட்டை ஏறிச் செத்தால்
　　பரலோகம் கிட்டிடுமாம் எனவே செத்தார்!

குன்றெறிந்த நெடுந்தோளான் விரிந்த வட்டக்
குடைநிழலில் வீற்றரசு செய்த ஹர்ஷன்
என்பவனை ஈன்றெடுத்த மங்கை; மன்னன்
இறந்தவுடன் உடன்கட்டை ஏறி னாளாம்
தென்திசையைப் பொன்திசையாய் மாற்றி வீரத்
திறங்காட்டி அரசாண்ட பூதப் பாண்டி
மன்னவனின் பொன்மனைவி தீயில் வெந்து
மாண்டாளாம் மாமன்னன் மாண்டான் என்றே !

எதுவரையில் வானத்திற் கெல்லை யுண்டோ
எங்கெங்கு வாய்ப்பேச்சு வழக்க முண்டோ
அதுவரையில் அங்கங்கே சிறந்து நிற்போன்
அசோகனென்பான் அரசாண்ட நாளில் ஆமை
முதுகெனவே நெடுஞ்சாலை அமைத்தான். மக்கள்
முன்னேறக் கலைக்கூடம் கட்டி வைத்தான்
புதுமைபல செய்திட்டான், எனினும் இந்தப்
பொய்மரண வழக்கத்தை ஒழித்தா னில்லை.

தசரதன்தான் தடுத்தானா? கேடு கெட்ட
தத்துவத்தை இராமன்தான் தடுத்திட் டானா?
அசைவறியா வீரத்தால் விவேகத் தாலே
அரசாண்ட மூவேந்தர் தடுத்த துண்டா?
பசையறியாக் கற்களினால் சிலைகள் செய்த
பல்லவர்க்கோ கன்னடர்க்கோ தெலுங்கு பேசும்
விசயநகர் வேந்தர்க்கோ கீதை தந்த
விட்டுணுக்கோ தீமையென்று பட்ட துண்டோ?

கொடிதான இவ்வழக்கம் ஒழிய வேண்டிக்
கோவேந்தர் அக்பரவர் முயன்ற போது
தடைபோட முயலாதே மன்னா என்றே
சத்தமிட்டார் வைதீக வெறியர் தூக்க
முடியாத மிகப்பெரிய பாராங் கல்லை
முத்திட்டுப் பேசாமல் போதல் போலப்
பிடிவாதக் காரரெல்லாம் எதிர்த்த தாலே
பேரரசர் திட்டத்தை விட்டு விட்டார்!

மாங்கனியில் தூங்குகின்ற சுவையே போலும்
மராட்டிமொழி இனிக்குமென்றும் காளி தாசன்
பாங்குடைய காவியத்தைத் தாங்கி நிற்கும்
பழுத்தபுகழ் வடமொழியே சிறந்த தென்றும்
வீங்குடலார் பேசிவரும் இந்தி ஒன்றே
வேற்றுமையைப் போக்குமெனக் கூற "எங்கள்
ஆங்கிலமே அனைவரையும் இணைத்து வைக்கும்
அரியமொழி" என்றுரைத்த துரையே கேளும்!

பிறந்தாரை நீராட்டிப் பேணிக் காத்துப்
பெருகவளர்த் திடுவதனை எங்கும் கண்டோம்
இறந்தாரைச் சுடுவதையும் காணு கின்றோம்
இங்கினிமேல் இக்கொடியர் இரவில் தூங்கி
மறந்தாரைச் சுட்டாலும் சுடுவர்! அன்பு
மனமில்லார் எதைச் செய்யத் துணிய மாட்டார்?
வெறுங்கோயில் வெறிபிடித்தோர் செய்யும் தீமை
விடத்தைவிடக் கொடிதான தீமை யாகும்!

மூலபலம் மிக்கவனாம் தெலுங்கு நாட்டின்
முடிவேந்தன் கிருஷ்ணதேவ ராயன் என்பான்
காலையிலே எழுந்தவுடன் தழும்பு பட்ட
கட்டுடலில் நல்லெண்ணெய் பூசு வானாம்!
போலிமதப் பித்தரிங்கே சிலைமீ தன்றோ
பூசுகின்றார் நல்லெண்ணெய்? இவர்போன் றாரை
நாலிரண்டு தலைமுறைநாம் விட்டு வைத்தால்
நாட்டுமக்கள் நான்குகால் விலங்கே யாவர்!

நெருஞ்சிமுள்ளை மெதுவாகத் தொட்டால் கையில்
நிச்சயமாய்க் குத்திவிடும் காயம் செய்யும்.
கரங்களினால் நாமழுத்திப் பிடித்தோ மாயின்
கட்டாயம் அந்நெருஞ்சி நொறுங்கிப் போகும்.
நெருப்பதனில் விழச்சொல்லி வற்பு றுத்தும்
நீசரைநீர் எச்சரிக்கை செய்வீ ராயின்
பெருங்கொடுமை நிச்சயமாய்த் தீரும்! தங்கள்
பெயருமிந்தப் புவிமீது நிலைத்து நிற்கும்!

பழி வந்தால் பயப்படுவர்மேலோர்! வாட்டும்
பசிவந்தால் பயப்படுவர் தாழ்ந்த மக்கள்.
மழைவந்தால் குயில்கலங்கும். துரையே தாங்கள்,
மழைபோலும் பசிபோலும் ஆவீ ராயின்
இழைதந்த இடையுடையார் தம்மைத் தீயில்
இழுத்தெறியும் கூட்டத்தார் அடங்கிப் போவர்.
குழைதொங்கும் மடவாரின் நிலையும் மாறும்
குளிர்நதிபோல் நீண்டோடும் அவர்கள் வாழ்நாள்!

வித்தைபல கற்றவரே தீராத் தீமை
விளைத்துவந்த பிண்டாரிக் கூட்டம் தன்னை
அந்திமரத் தின்பழத்தை நண்டின் கூட்டம்
அடிவைத்து மிதிப்பதுபோல் மிதித்தீர்! இன்னும்
எத்தனையோ அரியசெயல் புரிந்தீர்! தங்கள்
இதயத்தில் நல்லெண்ணம் இருப்ப தாலே
சித்திரத்தேர் தீப்பற்றி எரிதல் போன்ற
தீச்செயலைத் தடுப்பீரென் றெண்ணு கின்றேன்.

இப்படிக்கு,
இராசாராம் மோகன்ராய்


விழாகு
விழாக்கள்

உள்ளே. . .

பொங்கல்

நெருப்பு நாடகம்

விழாத விழாக்கள்

# பொங்கல்

சிந்திய பனியும் நம்மைத்
    தீண்டிய குளிரும் குன்றி
முந்தைய பருவ மாகி
    முடிந்தபின்; மற்றோர் மாற்றம்
தந்தது நீல வானம்!
    தமிழரை ஒன்று சேர்க்க
வந்தது புதிய திங்கள்!
    வந்தது நமக்குப் பொங்கல்!

தக்கவர் எழுத்தும் பேச்சும்
    தாய்மொழிப் பொங்க லாகும்.
மக்களின் உழைப்பில் தோன்றும்
    மனைவிழா உணவுப் பொங்கல்.
சர்க்கரை புகுந்த பொங்கல்
    சரித்திரம்; தமிழர்க் கெல்லாம்
சிக்கனச் சொற்கள் சேர்ந்த
    செய்யுள்போற் சிறந்த தாகும்!

# நெருப்பு நாடகம்

செங்கோடன் என்நண்பன்; அவனும் நானும்
திருவீழி மிழலைசென்று திரும்ப லானோம்.
எங்கேயோ இருந்தபடி ஒருவன் பாட
என்நண்பன் மிதந்துவந்த இசையைக் கேட்டுத்
தங்கால்பொற் கொல்லனென்பான் வடித்து வைத்த
தமிழ்ப்பாட்டை வாய்விட்டுப் பாட லானான்.
அங்கேபார் வான்மீதோர் கனியை என்றேன்.
அக்கனிதான் நமக்கினியக் கனியென் றிட்டான்.

வீதியினைச் சூடாக்கி மாந்தர் மீது
வெப்பத்தைத் துப்பவந்த கொடிய கோடை
ஆதிமுகம் இவ்வுலகில் குற்ற வாளி!
அன்றிருந்த திருவாத வூரர் தம்மை
வீதியிலே நிற்கவைத்துச் சுட்ட தன்றோ?
விழாநகராம் மதுரையிலே வாட்டிற் றன்றோ?
சாதிமதம் நமைச்சுடுதல் போதா தென்று
தாமரைப்பூ நாயகனும் சுடவந் திட்டான்.

கோடைவெயில் வந்ததனால் குயில்கள் கூவும்
கொம்பெங்கும் தளிர்தொங்கும் வண்ணம் மேவும்
ஏடுதரும் பைந்தமிழைக் கிளிகள் கற்கும்
இலைக்குடையைப் பிடித்தபடி மரங்கள் நிற்கும்
வாடைவரும் ஆங்காங்கே கானல் தோன்றும்
வயல்காயும் வயல்வயிற்றில் வெடிப்புத் தோன்றும்
பாடிவரும் ஓடைகுளிர் காய்ந்து கொள்ளும்
பருத்திக்குச் சிரிப்புவரும் மான்கள் துள்ளும்!

குன்றுமுதல் கூழாங்கல் வரையில்; தென்னங்
குருத்துமுதல் அறுகம்புல் வரையில்; இங்கே
இன்றுமுதல் நான்குதிங்கள் வரையில்; கோடை
இழுத்தடிக்கும் நம்மையெல்லாம் தரையில் என்றேன்.
நன்கினிமேல் புதுநெருப்பு நாட கங்கள்
நம்நாட்டில் பகற்பொழுதில் நடக்கும் என்றான்.
தென்றலுண்டு நம்மையது தழுவும் என்றேன்.
தேவையில்லை அதன்தழுவல் எனக்கென் றிட்டான்.

பனியதனால் பிணிபெருகும்; வான வில்லைப்
பார்ப்பதனால் எழில்குறையும்; வானம் சிந்தும்
இனியமழை அதிகரித்தால் தீமை தோன்றும்;
இளவேனிற் சுடுவதனால் உணர்ச்சி யூறும்;
கனியதனால் சுவைநமக்குச் சேரும்; தேமாங்
கனிவேண்டின் கோடைவெயில் நமக்கு வேண்டும்!
இனியிங்கே ஆனந்தக் களிப்பே பொங்கும்"
என்றுரைத்தான் தலையசைத்தேன் மூங்கில் போல!

# விழாத விழாக்கள்

மாந்தரெலாம் ஆங்காங்கே ஒன்று கூடி
மகிழ்ந்துசெயும் செயல்யாவும் விழாக்க ளாகும்.
ஏந்துபுகழ் மூவேந்தர் வாழ்ந்த நாளில்
எடுத்தவிழா பலவாகும். இன்றோ மக்கள்
சாய்ந்தமனம் கொண்டிருக்கும் கார ணத்தால்
சத்தற்ற விழாக்களினால் பாழா கின்றார்.
தேய்ந்தகதை அதற்காக விழாக்கள்! ஊரில்
தேரோட்டம்! வியாபார ஓசைக் கூட்டம்

ஆட்டனத்தி என்பான்போல் ஆடு வோர்க்கும்
ஆறுமுக நாவலர்போல் பேசு வோர்க்கும்
பாட்டரசன் கம்பனைப்போல் பாடு வோர்க்கும்
பறம்புமலைப் பாரியைப்போல் வழங்கு வோர்க்கும்
நாட்டினர்க்கு நல்வழியைக் காட்டு வோர்க்கும்
நாமுண்ணும் சோற்றுக்கும் படுத்து றங்க
வீட்டினிலே பழம்பாய்க்கும் பஞ்ச முண்டு!
விழாக்களுக்குத் தமிழ்நாட்டில் பஞ்ச மில்லை!

உறையூரில் நடைபெற்ற தாகக் கூறும்
'உள்ளி விழா' இன்றுநடைபெறுவ தில்லை.
பிறையேறும் வானத்தில் ஊர்தி ஏற்றிப்
பெருஞ்செயல்கள் புரிந்துவரும் இந்த நாளில்
முறைமீறி விட்டவிழா வீழ்ந்த தென்று
முணுமுணுத்துப் பயனில்லை. மாந்தர்க் கின்று
குறைசேரா நல்லவிழா வேண்டு மன்றிக்
கும்பாபி டேகவிழா தேவை யில்லை.

தங்கத்தில் குறையிருந்தால் ஒப்பு வோமா?
சந்தனத்தில் சேறிருந்தால் பூசு வோமா?
மங்கிக்கொண் டேயிருக்கும் மதங்கள் கூறும்
மௌடீக விழாக்களைநாம் நடத்த லாமா!
சிங்கத்தை வளர்க்காமல் காட்டில் மேயும்
சிறுமுயலை வளர்ப்பதனால் பெருமை உண்டா?
வங்கத்து ஞானிக்குச் சிலைகள் இங்கே!
வடலூரார் போன்றோர்க்குச் சிலைகள் எங்கே?

பனங்கிழங்கை நாரையின்வாய்க் குவமை கூறிப்
பரிசுபெற்ற பாவலனை நினைக்கின் றோமா?
தினந்தினம்போய்ப் பலரிடத்தில் கேட்டு வாங்கிச்
சேகரித்துத் தனிப்பாடல் நூல்தந் தோனை
நினைந்திடுவார் யாரிங்கே? அவர்கட் கெல்லாம்
நிலையான அடையாளச் சின்னம் உண்டா?
மனங்குவிந்த தமிழர்களே அறிஞர் பா. வே.
மாணிக்க நாயகர்க்குச் சிலைவேண் டாமோ?

கீரனுக்கோ சிறுகாக்கை பாடி னிக்கோ
கிடங்கில்கா விதிங்கீரங் கண்ண னார்க்கோ
சேரனுக்கோ சோழனுக்கோ பாண்டி யற்கோ
சிறப்புவிழா திறப்புவிழா செய்கின் றோமா?
பாரியைத்தான் குமணனைத்தான் நினைக்கின் றோமா?
பஞ்சாங்க விழாக்களைநாம் வெறுக்கின் றோமா?
காரியத்தில் காட்டாமல் பேச்சில் மட்டும்
காட்டுகின்றோம் கட்டுரைகள் தீட்டு கின்றோம்?

அருணகிரி நாதருக்கு விழாவுண் டானால்
அவர்போலும் முருகனருள் பெற்று வண்ணச்
சரபமெனப் பெரியோரால் புகழப் பெற்ற
தண்டபாணி சுவாமிக்கேன் விழாக்கள் இல்லை?
திருவருளைப் பெற்றாரை மதித்தல் போன்று
சிந்தனைவா திகளையும்நாம் மதித்தல் வேண்டும்.
அருமருந்து மாந்தர்க்குத் தேவை யென்றால்
ஆரமுதும் மாந்தர்க்குத் தேவை யன்றோ?

# எப்போதும் இருப்பவர்கள்

உள்ளே. . .

சீதக்காதி

உமறுப் புலவர்

வேதநாயகம் பிள்ளை

உ. வே. சாமிநாதையர்

பாஸ்கர சேதுபதி

பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்

பாண்டித்துரைத் தேவர்

ஞானியார் அடிகளார்

மறைமலையடிகள்

பாரதியார்

திரு. வி. க.

பாரதிதாசன்

# சீதக்காதி

*(17-ஆம் நூற்றாண்டு)*

மனத்தையே மதிப்பார் உண்டு
மதத்தையே மதிப்பார் உண்டு
தனத்தையே மதிப்பார் உண்டு
தரணியில் சிலபேர் தங்கள்
இனத்தையே சிறந்த தாக
எண்ணுவர்; சீதக் காதி
அனைத்தையும் மதித்து வந்தார்!
அறிவையும் மதித்து வந்தார்!

படிப்பினில் இன்பம் கண்ட
படிக்காசுப் புலவர் போன்ற
வடித்தநூல் வல்லார்க் கெல்லாம்
வழங்கிய முஸ்லீம் வள்ளல்
கொடுப்பதில் குமண னாகிக்
கூர்மையில் அக்ப ராகி
அடுக்கிய உலகம் மூன்றாம்
அங்கெல்லாம் கீர்த்தி பெற்றார்!

# உமறுப் புலவர்

*(17-ஆம் நூற்றாண்டு)*

*அமுதத் தமிழ்க்கலைஞர்*
*அழகு நடையறிஞர்*
*உமறுப் புலவரடீ-கண்ணம்மா*
*உவமைக் கவிஞரடீ!*

*சீறாப் புராணமதைத்*
*தீட்டிய செல்வரடீ*
*மாறாப் புலவரடீ-கண்ணம்மா*
*மற்றொரு கம்பரடீ!*

*செயற்கைப் புலவர்களின்*
*செய்யுள் பிழைப்பதில்லை!*
*இயற்கைப் புலவரடீ-கண்ணம்மா*
*இறந்தும் சிறந்தாரடீ!*

# வேதநாயகம் பிள்ளை

*(1826-1889)*

வேதனை நாயகர் வேடிக்கை நாயகர்
வீண்கதை நாயகரோ-அவர்
சாதனை நாயகர் சாத்திர நாயகர்
தண்டமிழ் நாயகரே!

சத்துசித் தானந்த தத்துவ நீதிநூற்
சாத்திரம் பாடியவர்-அவர்
புத்திசித் தானந்த போதனை கூறிய
புத்தக ஞானியவர்!

போற்றும் புதுமை புரிந்து சிறந்தவர்
பொய்யா மொழிப்பெரியார்-இளஞ்
சிற்று நிலாஒளி உள்ளம் வளர்த்த
கிறித்துவ பாரதியார்!

# உ.வே. சாமிநாதையர்

*(1855-1942)*

*ஆதிநூல் அனைத்தும் கற்றே*
*ஆழ்ந்தசிந் தனையைப் பெற்றே*
*நீதிநூல் வழியில் வாழ்ந்து*
*நிலையான கீர்த்தி சேர்த்த*
*வேதநாதையர்; செய்யுள்*
*வித்தைநா தையர்; நல்ல*
*சாதுநா தையர்; உ. வே.*
*சாமிநா தையர் ஆவார்.*

*ஒருசிலர் எல்லாம் செய்வர்*
*செய்வதை ஒழுங்காய்ச் செய்யார்.*
*ஒருசிலர் ஒன்றே செய்வர்.*
*செய்யினும் ஒழுங்காய்ச் செய்வர்.*
*அரும்பெரும் செயல்கள் செய்யும்*
*ஆற்றலோர் சிலர்க்கே உண்டு.*
*திருவளர் ஐயர் செய்த*
*சேவையோ அரிய சேவை!*

பழங்காலச் சுவடி தேடும்
　　பணியிலே ஈடு பட்டு
விழுங்காலம் வரும்வ ரைக்கும்
　　வேதியர் தொண்டு செய்தார்.
செழுங்காந்தள் மலரைப் போன்று
　　சிவந்தவர் செய்த தொண்டோ
ஒழுங்கான தொண்டு; கல்வி
　　உலகமே போற்றும் தொண்டு.

நாமெலாம் பத்துப் பாட்டை
　　நன்னூலைப் பார்க்கின் றோமே
ஓமநா தைய ரோஅவ்
　　ஓலையை அச்சி விட்டார்?
பூமிபோற் பொறுமை கொண்ட
　　புலவராம் இவரே இட்டார்.
சாமிநா தைய ரின்றேல்
　　சங்கநூல் மறைந் திருக்கும்!

ஆயிரம் பிறைகள் கண்டார்
　　ஆணிப்பொன் ஐயர், பெற்ற
தாயினும் சிறந்த தான
　　தமிழுக்கே தம்மை ஈந்தார்.
தூயநூற் சுவடி தந்த
　　தூயவர், பாடல் பெற்ற
கோயில்போ லானார், தஞ்சைக்
　　கோபுரக் கலச மானார்!

# பாஸ்கர சேதுபதி

(19-ஆம் நூற்றாண்டு)

(ஒயிற்கும்மி)

அற்றல் மிகுந்தவர் ஆட்சி புரிந்தவர்
ஆஸ்திக நீதிபதி-அவரே
பாஸ்கர சேதுபதி-புலவர்
போற்றுந்தொல் காப்பியப் புத்தகம் போன்றவர்
போனபின் ஏதுகதி?

நற்றமிழ் கற்றவர் நன்மை புரிந்தவர்
நாதச் சுவையரசர்-இராம
நாத புரத்தரசர்-கவிதைப்
பற்றினைப் பற்றாகப் பற்றியொப் பற்றநூல்
பாடிய பாட்டரசர்!

கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுத்தவர்
கேள்வி நக்கீரரவர்-சிறந்த
வாள்வினை வீரரவர்-இளையான்
பிள்ளை எனுங்கவி ராயரைப் போன்றவர்
பேருப காரியவர்!

## பின்னத்தூர்

# நாராயணசாமி ஐயர்

*(1862-1934)*

சுவைதூங்கும் கரும்பைத் தின்று
　　சுவைபார்க்க விரும்பி டாமல்
புவிபோற்றும் தமிழி லுள்ள
　　புதுச்சுவை உண்டு வந்த
கவிவேந்தர் பின்னத் தூரார்
　　கற்பன கற்ற மேதை.
அவதானி யாரின் மைந்தர்
　　ஆராய்ந்த கல்வி யாளர்.

தனியாற்றல் பெற்றி ருந்த
　　தமிழ்மொழி ஐய ருக்கோ
நினைவாற்றல் அதிகம் அன்னார்
　　நெஞ்சத்தில் சாதி பேத
இனவேற்று மைகள் வந்தே
　　இடித்திட வில்லை. தீய
மனவேற்று மைக்கும் அன்னார்
　　வழிவைத்து வாழ்ந்தா ரில்லை.

பாடினார் கோவை, தூது
　　பாடினார்; கலம்ப கங்கள்
பாடினார்; உலா நூல் ஒன்று
　　பாடினார்; நரிவி விருத்தம்
பாடினார்; மருதப் பாட்டுப்
　　பாடினார்; சிவபுராணம்
பாடினார் நற்றி ணைக்கோர்
　　பழுதிலா உரையும் கண்டார்.

நாவணி தமிழ்ச்சொல் லோசை
　　நயத்தொடு பாடஞ் சொல்லிப்
பாவணி நயங்க ளோடு
　　பாடிய பின்னத் தூரார்
பூவணி மடந்தை மாதர்
　　புலவரைக் கலங்க விட்டே
ஆவணித் திங்கள் தோன்றி
　　ஆடியில் மறைந்து விட்டார்.

# பாண்டித்துரைத் தேவர்

*(1867 - 1911)*

"ஆயிரத்தெண்ணூற்றறுபத் தேழாம் ஆண்டில்
அவதரித்த தேவர் யார்?" "தெரியா தையா"
"தூயதுதி மஞ்சரி நூல் சைவம் சார்ந்த
துதிநூற்கள் தொகைத்திரட்டுப் போன்ற நூற்கள்
நாயகியின் தேன்முத்த வண்ணப் பாடல்
நாட்டுக்குத் தந்தார்யார்?" தெரியாதையா!"
"தீயசெயல் செய்யாத பொன்னு சாமித்
தேவரவர் புதல்வர்யார்?" தெரியா தையா!"

"அப்பாவி ! செந்தமிழ்க்குத் தொண்டு செய்த
அறிஞரைநீ அறிந்துகொள்ளா திருக்கின்றாயே!
துப்பாய வானமழை வள்ளல் பாண்டித்
துரைத்தேவர் எனுமறிஞர் அவர்தான் தம்பி!
இப்போதோர் தமிழ்ச்சங்கம் மதுரை மண்ணில்
இருப்பதற்குக் காரணமே அவர்தான் தம்பி!
எப்போதும் மறவாதே அவரை! நீபோய்
எங்குமுள தமிழர்க்கும் இதனைக் கூறு!"

# ஞானியார் அடிகள்

*(1873 - 1942)*

கண்ணிரண்டும் கல்விக்கண் ஒன்றும் பெற்றுக்
காலமெல்லாம் தமிழுக்கும் சைவத் திற்கும்
தொண்டுசெய்தோர் பலராவர்; அவருள் காமச்
சுவைவிலக்கிச் செயற்கைசுகம் விலக்கி வாழ்ந்த
பண்டையநாள் சமணரைப்போல் செந்த மிழ்க்கும்
பரஞ்சோதி முனிவரைப்போல் சைவத் திற்கும்
எண்ணிறந்த பெருந்தொண்டு புரிந்து கீர்த்தி
ஏந்தியவர் ஞானியார் அடிக ளாவார்!

ஓரைந்து மொழியறிந்த புலியூர் ஞானி
ஓய்வின்றிப் பெருஞ்சைவம் பேசி வந்தார்.
ஈரஞ்செய் கின்றதமிழ் மொழிநுட் பத்தை
எழுத்தெழுத்தாய்ச் சொல்சொல்லாய் விளக்கி வந்தார்
வீரஞ்செய் புறப்பொருளின் விளக்கம் ஆதி
வேதாந்தம் சித்தாந்தம் இவற்றை யெல்லாம்
காரஞ்செய் யாதகுரல் இனிமை யாலும்
கனிந்தெழுந்த பேச்சாலும் பாய்ச்சி வந்தார்!

கைச்சங்கம் எடுத்தூதும் கூட்டத் தார்க்கும்
கால்நடைகள் மேய்ப்பார்க்கும் மற்ற வர்க்கும்
மெய்ச்சங்கம் எதற்காக? எங்கட் கன்றோ
வித்தைவரும்? என்றுசிலர் பேசக் கேட்டுத்
தச்சன்கை உளிபதித்த விரல்போ லானார்.
தமிழ்ச்சங்கம் தோன்றுதற்குத் துணையாய் நின்றார்
பொய்ச்சிந்தை மனுநீதி மயக்கம் தீர்த்துப்
பொய்யாத குறள்நீதி கூறி வந்தார்.

வெல்லுஞ்சொல் இதுவேயென் றறிந்து பேசி
வியப்பினிலே ஆழ்த்தியவர். பிறையைப் போன்ற
பல்லக்கின் மீதேறி இந்த நாட்டில்
பவனிவந்த திருநீற்றுச் சைவர். பாராங்
கல்லொக்கும் நெஞ்சத்தார் தம்மைத் தேமாங்
கனியொக்கும் அறிவுரையால் கனியச் செய்தார்.
முல்லைப்பூ மாலைக்கோ பாராட்டுக்கோ
மூதறிஞர் மயங்கியதே இல்லை கண்டீர் !

இளந்திரையன் என்பானோ பெரும்போர் வீரன்.
இருண்டகடல் நீந்தியவன். வீரங் காட்டி
வளர்ந்தபுகழ் பெற்றுயர்ந்த வேந்தன். அந்த
மாவீரன் நம்மவர்நெப் போல்யன் ஆவான்.
தளர்ந்தசெயல் செய்தறியாப் புலியூர் ஞானி
தமிழகத்தின் சாலமனே யாவார். நுட்பம்
அளந்தமனம் கொண்டவராம் அவர்போற் பேசும்
ஆற்றல்பெற்றார் இன்றிங்கே யாரு மில்லை!

# மறைமலை அடிகள்

*(1876 - 1950)*

பலவோசை நிறைந்த 'காடன்
பாடி' யிற் பிறந்த பிள்ளை
விலையோசை கேட்டுக் கேட்டு
வீணாகி வந்தோர் தம்மைக்
கலையோசை கேட்க வைத்துக்
கண்களைத் திறந்து விட்டார்
மலைபேசக் கண்டோ மில்லை
மறைமலை பேசக் கண்டோம் !

வேதத்தை 'மறைநூல்' என்றும்
விவாகத்தை 'மன்றம்' என்றும்
சாதத்தை 'வெண்சோ' றென்றும்
சபதத்தை 'ஆணை' என்றும்
மாதத்தைத் 'திங்கள்' என்றும்
மறைமலை 'நம்சொல்' லாக்கிச்
சோதித்த பொன்னே போலும்
தூயசெந் தமிழ்நூல் தந்தார் !

நம்மொழிப் புலமை யெல்லாம்
    நடுத்தெருப் புலமை யாகும்
செம்மொழி பேசி வந்த
    திருமறை மலையார் பெற்ற
மும்மொழிப் புலமை யன்றோ
    முற்றிய புலமை; அன்னார்
தும்மலும் கல்வித் தும்மல் !
    தூக்கமும் கல்வித் தூக்கம் !

மறைமலை கற்ற நூற்கள்
    மற்றவர் கற்றா ரேனும்
மறைமலை கண்ட நுட்பம்
    மற்றவர் கண்ட தில்லை !
மறைமலை இயக்கம் நாட்டின்
    வரலாற்றை வளர்க்கும் ! நாகை
மறைமலை சேர்த்த கீர்த்தி
    வாடாத கீர்த்தி யாகும் !

முல்லைக்கோர் காடு போலும்
    முத்துக்கோர் கடலே போலும்
சொல்லுக்கோர் கீரன் போலும்
    தூதுக்கோர் தென்றல் போலும்
கல்விக்கோர் கம்பன் போலும்
    கவிதைக்கோர் பரணர் போலும்
வில்லுக்கோர் ஓரி போலும்
    விளங்கினார் ! வென்றார் ! நின்றார் !

# பாரதியார்

*(1882 - 1921)*

சாரமே அற்ற வெற்றுச்
 சாத்திரம் கோத்து வந்த
பாரதி பலபேர். அன்னார்
 படைப்பினை உடைப்பில் தள்ளி
வீரமாய் அருட்பா வைப்போல்
 விளக்கமாய் வாழ்நா ளெல்லாம்
பாடினார் சுப்ர மண்ய
 பாரதி நாட்டுக் காக !

விண்தொடும் கீர்த்தி பெற்ற
 வீரர்கள் வாழ்ந்த நாட்டில்
'தண்ணடை எருமை' போன்று
 தமிழர்கள் வாழக் கண்டு
கண்களில் ஈரம் காட்டிக்
 கலங்கினார்; நிலைமை மாற்ற
எண்ணினார்; புரட்சி செய்தார்;
 எழுத்தினால் மேடைப் பேச்சால் !

பொய்யராய்ச் சமுதா யத்தின்
புரட்டராய் வாழ்வா ரெல்லாம்
"ஐயரா?" என்று கேட்டார்.
ஆவிபோம் வரையில் அன்னார்
மெய்யராய் வாழ்ந்தார். வாழ்வில்
வீணராய்க் கேட்டு வாங்கும்
கையராய் வாழ்ந்தார்க் கெல்லாம்
காலனாய்க் காட்சி தந்தார்!

எட்டைய புரத்தார் பாடல்
இனிப்பிலே பழுத்த பாடல்.
பட்டினப் பாலை என்னும்
பாடல்போற் சிறந்த பாடல்
மெட்டொடு பரவும் பாடல்
மேனாடும் போற்றும் பாடல்.
ஒட்டிய இளமை போலே
உணர்ச்சியைத் தூண்டும் பாடல் !

பாரதி நம்நூற் றாண்டின்
பட்டினிப் புலவர். வீர
பாரதி நீண்ட காலம்
பாரினில் வாழ்ந்தா ரில்லை.
பாரதி தோற்றா ரில்லை,
பாடலால் பிழைத்தா ரில்லை.
பாரதி முற்றுப் பெற்றார்
பாடலால் 'உலகம்' பெற்றார் !

# திரு.வி.க.

*(1883 - 1951)*

எழுத்தினால் இனிய பேச்சால்
இடைவிடாத் தூய தொண்டால்
பழுத்தபே ரறிவால் கல்விப்
பார்வையால் நட்பால் நாட்டை
இழுத்தவர்; என்தாய் போலே
இளைத்தவர், கீர்த்தி சேர்த்துச்
செழித்தவர்; விழித்த தென்றல்
திரு. வி. க. என்னும் மேதை !

அன்புக்குத் தூதர்; நீதி
ஔவையார் ; மெல்லி னத்தின்
முன்னிற்கும் வல்லி னம்போல்
முன்னின்ற தலைவர் ! நாட்டின்
நன்மைக்குப் பாடு பட்ட
நாவலர்! தலைமை தாங்கும்
கன்னிசெந் தமிழைக் காத்த
காவலர்! கல்விச் செல்வர்.

சைவத்தை மறந்தா ரில்லை
சமணத்தை மறுத்தா ரில்லை
தெய்வத்தைப் பழித்தா ரில்லை
செழித்தசெந் தமிழன் மீது
கைவைக்க முயன்றார் தம்மைக்
கண்டிக்க மறந்தா ரில்லை
பொய்வைத்த சாதி பேதப்
புரட்டினை ஏற்றா ரில்லை !

பழத்தினில் இனிமை வைத்தான்
படைத்தவன்; படித்த மேதை
எழுத்தினில் இனிமை வைத்தார்
எண்ணத்தை விருந்து வைத்தார்
விழிப்பினில் வீரம் வைத்தார்
வெற்றியில் வேகம் வைத்தார்
உழைப்பினில் ஊக்கம் வைத்தார்;
உலகுக்கே தம்மை வைத்தார் !

நிலாமுளை போலும் அந்தி
நிழல்போலும் வளரும் நட்பை
உலாவிடும் உலகில் காட்டி
உயர்ந்தவர்; நெருப்புக் கோபம்
இலாதவர்; ஊஞ்சல் நெஞ்சம்
இலாதவர்; பதவி ஆசை
இலாதவர்; செத்தும் சாவே
இலாதவர் சேக்கி ழார்போல் !

## பாரதிதாசன்

*(1891 - 1964)*

*புதுவையிலே கடலுண்டு காட்சி யுண்டு*
*புதுவையிலே புகழ்பெற்றார் சிலைகள் உண்டு*
*புதுவையிலே சங்கரதாஸ் சமாதி யுண்டு*
*புதுவையிலே பெரும்புலவர் கூட்ட முண்டு*
*புதுவையிலே அரவிந்தர் இருந்த துண்டு*
*புதுவையிலே பாரதியார் வாழ்ந்த துண்டு*
*புதுவையிலே புதுமையுண்டா? உண்டு! பாட்டுப்*
*புரட்சிக்கு வித்திட்டார் உண்டா? உண்டு!*

*பாட்டேயென் தொழிலென்று சொல்லிக் கொண்டார்*
*பாரதியார். அவ்வாறே எழுதி வந்தார்.*
*நீட்டோலைப் பாட்டதனால் இந்த நாட்டின்*
*நித்திரையை அவர்கலைத்தார். அவர்க்குப் பின்னர்*
*காட்டாற்று வெள்ளத்தின் வேகம் கொண்ட*
*கவிதைகளால் பாவேந்தர் புரட்சி செய்தார்.*
*ஓட்டாண்டிப் பாட்டெழுதி வந்தார்க் கெல்லாம்*
*ஒய்வளித்தார்! தம்பாட்டால் வாழ்வ ளித்தார்!*

திருத்தப்பதில் வெற்றிபெற்றான் ஒட்டக் கூத்தன்
தீர்ப்பளித்து வெற்றிபெற்றான் கரிகாற் சோழன்
நிருத்தத்தில் வெற்றிபெற்றான் ஆட்ட னத்தி
நிதியளித்து வெற்றிபெற்றான் பாரி வள்ளல்
வருத்தத்தில் வெற்றிபெற்றார் வடலூர் வள்ளல்
வாளேந்தி வெற்றிபெற்றான் சேர லாதன்
விருத்தத்தில் வெற்றிபெற்றான் கம்பன்; அந்த
வெற்றியினை இவர்பெற்றார் என்னைப் போல.

படைநடத்தல் போல்நடக்கும் நடையும்; சங்கப்
பழந்தமிழ்நூல் அடையாள நடையும்; பாட்டின்
இடையிடையே இசையசைவு நடையும்; ஓடை
ஏந்திவரும் அலைநடையும் கூட்டிக் காட்டி
மடைதிறந்த வெள்ளம்போல் கவிதை தந்தார்.
மலைபோன்று தலைநிமிர்ந்த உவமை தந்தார்.
தடைநடையே அவரெழுத்தில் இல்லை! வாழைத்
தண்டுக்கா தடுக்கின்ற கணுக்கள் உண்டு?

சூரியனைக் கிழக்கேபார்; பாவின் வேந்தர்
சுடர்விளக்கை நீ, குடும்ப விளக்கி லேபார்
ஓரிரவை அண்ணாவின் எழுத்தி லேபார்
உயர்கருத்தை 'எதிர்பாரா முத்தத்'தில் பார்
நேரிழையார் நிலாமுகத்தில் சிரிப்பை நீபார்
நீயதனை அவ'ரழகின் சிரிப்'பி லேபார்
பாரியவன் சுனையதனில் குளிரை நீபார்
பாரதிதா சன்நூலில் வீரத் தைப்பார் !

பங்காருப் பத்தரிடம் பயின்று; மீசை
பாரதியைப் பின்பற்றி நடையை மாற்றிச்
சிங்கார வேலவனைப் பாடிப் பின்னர்
சீர்த்திருத்தத் துறைகண்டு பெரியா ருக்கோர்
நங்கூரம் போன்றிருந்து பிரிந்து; காஞ்சி
நல்லறிஞர் கழகத்தால் பெருமை பெற்றுத்
தங்காமல் விரைந்தோடும் நீர்போல் ஓடித்
தரித்திரத்தில் சரித்திரத்தை முடித்துக்கொண்டார்.

வெடித்தவுடன் விரைந்தோடும் ஆம ணக்கின்
விதையென்றால் பாரதிக்குப் பொருந்தும்; கீழே
அடித்தவுடன் மேலெழும்பும் பந்தென் றிட்டால்
அதுபுரட்சிக் கவிஞருக்கே பொருந்தும்; வீரம்
தொடுத்தமைத்த பாவேந்தர் பாடல் மக்கள்
துணைக்குதவும் தொகைப்பாடல்! வல்வில் ஓரி
விடுத்தகணை தவறியதே இல்லை! வேந்தர்
வெடிமருந்துக் கவிதைகளும் தோற்ற தில்லை !


தூவியத்
துறைமுகம்

உள்ளே. . .

துன்பத் துறைமுகம்

நெருப்பில் நின்றவன்

கண்ணீர்

அந்தோ கவிமணி

# துன்பத் துறைமுகம்

அல்லல் வறுமை அரந்தை அழுங்கல்
அல்ல கண்டம் அலக்கண் செல்லல்
கவ்வம் எவ்வம் கையறு கோட்டாலை
பனித்தல் பழங்கண் பழிவரல் பீடை
பைதல் புன்கண் பையுள் கேதம்
இன்னா வெய்துறல் இட்டளம் இடும்பை
கலக்கம் வெறுப்பு கவலை சிறுமை
துக்கம் துனி,படர் சூர், நோய் ஏதம்
உறுகண் மம்மர் உலமரல் விழுமம்
இன்னல் பீழை இடுக்கண் யாதனை
நடலை என்னுமின் னாற்பத் திரண்டு
சொற்களும் நமக்குத் துன்பத் துறைமுகம் !
அவலச் சுவையின் அறுவடை! நெஞ்சை
அறுக்கும் கருவி! அகிலம்
வெறுக்கும் துயரைக் குறிக்கும் சொற்களே !

# நெருப்பில் நின்றவன்

(பஃறொடை வெண்பா)

*மானொக்கும் வேல்விழியார் மாறனாம் கண்டியூர்*
*சீனக்கன் மாண்டிறந்த தீச்செய்தி கேட்டவுடன்*

*புண்ணறியா நெஞ்சத்தான் பொய்யா மொழிப்புலவன்*
*கண்ணருவி செய்தே கலங்கியிடு காட்டிற்போய்*

*வேகும் பிணத்தருகே வீழ்ந்தான் எழுந்திருந்தான்.*
*ஆகும் செயல்செய்தோன் அப்பிணத்தைப் நோக்கி*

*"அள்ளிக் கொடுத்தே அரியா சனத்தமிழைப்*
*பிள்ளைபோற் காத்தே பிறைபோல் வளர்த்தோனே*

*நீயிறந்து நானிருத்தல் நீதியோ? சித்திரச்செவ்*
*வாயிறந்தால் நாவுக்கு வாழ்வுண்டோ!" என்றுரைத்துப்*

*பொய்யா மொழிப்புலவன் பூரித்த செந்தீயில்*
*நெய்போற் கலந்து நெருப்புக் கிரையானான்.*

*நிச்சயித்த நட்பில் நெருங்கியவன் அச்சாவின்*
*உச்சி முனையேறி ஒன்றானான் கண்டீர்!*

*பிறப்பொழுக்கம் குன்றாப் பெருங்கவிஞன் கண்ட*
*இறப்பொழுக்கம் அன்றோ இது?*

# கண்ணீர்

இந்தவுடல் எப்போதும் நிலைப்ப தில்லை
என்பதைநாம் எண்ணுகின்ற போதும் "நம்மைச்
சந்திக்கும் உலகத்தார் பெண்டு பிள்ளை
தாய்தந்தை அனைவருமே ஓர்நாள் தீயில்
வெந்தன்றோ போய்விடுவர்" எனநாம் எண்ணி
விரித்தமுகம் சுருக்குகின்ற போதும் நெஞ்சில்
உந்தியெழும் உணர்ச்சியெது? துன்பம் அன்றோ!
ஓடிவரும் வெள்ளமெது? கண்ணீர் அன்றோ !

பிறக்கும்போ தழுகின்றோம். நமக்கே தேனும்
பிணிவந்தால் அழுகின்றோம். பின்னர் இங்கே
இறக்கும்போ தழுகின்றோம். நமது வாழ்வில்
இன்னல்வரின் அழுகின்றோம், கவலை நெஞ்சை
அறுக்கும்போ தழுகின்றோம். நம்மைச் சார்ந்தோர்
அல்லலுரின் அழுகின்றோம். சிலபேர் நம்மை
வெறுக்கும்போ தழுகின்றோம். வையத் தாரை
விட்டதுண்டோ அவலமெனும் தீராத் துன்பம்?

நேற்றிருந்தார் இன்றிருப்பார் என்ப தென்ன
நிச்சயமா? ஒன்றுமில்லை! தமிழ்ச்சங் கத்தில்
வீற்றிருந்த கீரனெங்கே? சேர சோழ
வேந்தரெங்கே? அலக்சாண்டர் இப்போ தெங்கே?
"கூற்றுவனே வந்தாலும் அஞ்சேன்" என்று
கூறியநம் அப்பரெங்கே? எல்லாம் மூச்சுக்
காற்றிருக்கும் வரையில்தான்! நம்மெல் லோர்க்கும்
கால்கழிந்த கட்டிலன்றோ கடைசிக் கட்டில்?

மண்பெற்ற காவிரியின் நீரில் நீந்தி
மாவீரன் ஆட்டனத்தி மறையக் கண்டு
விண்பெற்ற முகில்மழைபோல் அழுதிட் டாளாம்
வெல்லும்வேல் விழியுடையாள் ஆதி மந்தி
கண்பெற்ற பெண்டிரலாம் அழுதா ரேனும்
கண்ணகியே கண்ணீரால் கீர்த்தி பெற்றாள்.
பண்பற்றார் உள்ளத்தால் அழுவ தில்லை!
பலர்கண்ணீர் வரலாற்றில் வாழ்வ தில்லை !

காதலிலே தோல்வியுற்றார் கண்ணீர் சொந்தக்
காரணத்தின் வெளியீடே யாகும். நோயின்
வேதனையால் அழுபவரின் கண்ணீர் "துன்பம்
விலகாதோ" எனக்கேள்வி கேட்கும் கண்ணீர்
சோதனையே வந்தாலும் நாட்டுக் காகத்
துன்பத்தை வரவேற்போன் வடிக்கும் கண்ணீர்
மேதினியே பாராட்டும் கண்ணீ ராகும்!
விளம்பரக்கண் ணீர்விரைவில் வற்றிப் போகும்!

# அந்தோ கவிமணி

*(1876 - 1954)*

*கற்றவனே! கவிமணியே! குறிஞ்சிக் குன்றின்*
*கருப்பொருளைப் போன்றவனே! திரண்ட தெங்கின்*
*நெற்றிருந்து பயனென்ன இனிமேல் என்றே*
*நினைத்தானோ எமனென்னும் கொடியோன்? வாங்கி*
*விற்றபொருள் பிறரிடம்போய்ச் சேர்த்தல் போன்று*
*வெடுக்கென்றே அவனுலகம் போய்ச்சேர்ந் தாயே!*
*சுற்றத்தார் கண்கலங்கத் தமிழ்நாட் டாரைத்*
*துயரத்தில் மூழ்கவிட்டு மறைந்திட் டாயே!*

*மாலைநிலா அழுதிருக்கும்; நாட்டில் உள்ள*
*மன்றங்கள் அழுதிருக்கும்; செய்தி கேட்டுச்*
*சாலைமரம் அழுதிருக்கும் தெற்கே யுள்ள*
*தமிழ்ச்சங்கம் அழுதிருக்கும்; உன்றன் செய்யுள்*
*ஓலையெல்லாம் உனக்காக அழுதி ருக்கும்;*
*உன்வீட்டுச் செடிகொடிகள் அழுதி ருக்கும்!*
*வேலியிட முடியாத மரணம் பெற்று*
*விட்டவனே தீயுன்னைச் சுட்டி ருக்கும் !*

பானையது வீழ்ந்துடைந்தால் அப்பா னைக்குள்
பரவிநின்ற பழங்காற்றவ் விடத்தை விட்டு
வானவெளி செல்வதில்லை; அதனைப் போன்று
வைகுண்டம் எவர்மூச்சும் செல்வ தில்லை!
தேனமைந்த தமிழ்மொழியை மூத்தோன் செய்த
திருக்குறளைத் தென்னாட்டைச் சுற்றத் தாரை
வானமுதப் பத்தினியை மறந்து நீயேன்
மயானத்தின் கதைவளர்க்கச் சென்று விட்டாய்?

அப்பரைப்போல் எண்பத்தோ ராண்டு வாழ்ந்தே
அங்கத்தில் சுருக்கங்கள் பெற்றிட் டாலும்
எப்பொழுதும் சுருங்காத பெருமை பெற்றாய்.
இடம்பெயரும் புகழ்பெற்றாய். உன்றன் கீர்த்தி
முப்பொழுதும் தளராது! நிழலுக் கென்றும்
மூப்பிளமை ஏற்படுவ தில்லை யன்றோ!
ஒப்புடையார் உவமேயம் போன்றோர் ஆவர்.
உத்தமனே நீயுவமை போன்றோன் ஆவாய்!

வடமொழியில் செந்தமிழில் பழுத்தெ ழுந்த
மறைமலைக்கும் பண்டிதமா மணிக்கும் முன்பு
குடங்குடமாய்க் கண்ணீரை வடித்தும் பின்னர்க்
குயிலோசை திரு. வி. க. மறைந்த போது
மடைதிறந்த வெள்ளம்போல் கண்ணீர் விட்டும்
வாடிக்கொண் டிருக்கையிலே நீயும் உன்றன்
கடையடைத்துக் கொண்டனையே சரியா? நாஞ்சில்
கவிமணியே கலைவளர்ந்த மணியே அந்தோ!


இசை
விருந்து

## உள்ளே. . .


தித்திக்கும் தமிழிலே

பூவிரியும் சோலை

பாவிலே சிறந்தது

தமிழ்க் கவிஞன்

தங்க மயிலாடும் தமிழ்நாடு

மழையிருந்தால்

# தித்திக்கும் தமிழிலே

## எடுப்பு

தித்திக்கும் தமிழிலே முத்துமுத்தாய்ப் பாடல்
தந்தவர் திருவள்ளுவர்-தேன்போலே (தித்திக்கும்)

## உடனெடுப்பு

கத்தும் கடல்பிறந்த காலத்திலே பிறந்தும்
கன்னிப் பருவத்தோடு காப்பியச் சிறப்போடு (தித்திக்கும்)

## அமைதி

பஞ்சம் வராமலே பகைவள ராமலே
பசியும் பிணியும் படர்ந்து விடாமலே
நஞ்செனவே ஆட்சியை நம்ப விடாமலே
நாடாள வேண்டுமென்று நயமாகச் சுயமாக (தித்திக்கும்)

# பூவிரியும் சோலை

## எடுப்பு

பூவிரியும் சோலைக் காவிரி நதியே
பொன்னியே கடல்தொடும் கன்னியே (பூவிரியும்)

## உடனெடுப்பு

காவியப் புலவரெலாம் போற்றிய நதியே-என்
கண்ணுக்கு நீயொரு தண்ணீர் வீதியே (பூவிரியும்)

## அமைதி

மரங்களின் பாலே! மாந்தரின் துணையே-உன்
மடியில் இருப்பது வளர்நுரை மணியே!
விரிந்தபேர் பெற்றாய்மூ வேந்தரைப் போலே-எம்
விளைவும் செல்வமும் தென்னாட்டில் உன்னாலே (பூவிரியும்)

# பாவிலே சிறந்தது

## எடுப்பு

பாவிலே சிறந்தது வெண்பாவே-தோழி
பூவிலே சிறந்தது தாமரைப்பூவே (பாவிலே)

## உடனெடுப்பு

நாவிலே சிறந்தது பாவலர் நாவே-தோழி
நாட்டிலே சிறந்தது கற்புள்ள நாடே (பாவிலே)

## அமைதி

காதலைத் தேடுமுன் கலித்தொகை தேடு
கற்பனை வேண்டுமெனில் கம்பனை நாடு
சாதிநூல் அனைத்தையும் தணலில்நீ போடு
சமரச ஞானியின் அருட்பாவைப் பாடு (பாவிலே)

# தமிழ்க் கவிஞன்

## எடுப்பு

தந்திரம் தெரியாத தமிழ்க்கவிஞன்-ராமச்
சந்திர கவிராயன் எனுமறிஞன்-வாழும் (தந்திரம்)

## உடனெடுப்பு

செந்தமிழ்ச் சித்திரக் கவிபாடி வந்தவன்
தினந்தோறும் வறுமையிடம் போராடி வந்தவன் (தந்திரம்)

## அமைதி

மனைவியை மட்டும் முத்த மிட்டான்-அவன்
வாடாத புகழையே மிச்ச மிட்டான்
அனைவர்க்கும் பயன்படும் வீரமா முனிவரின்-சதுர
அகராதி நூலினை அச்சி லிட்டான். (தந்திரம்)

# தங்க மயிலாடும் தமிழ்நாடு

## எடுப்பு

தங்க மயிலாடும் தமிழ்நாடு-புலவர்
சங்கமே நம்தாய் மொழியின் வீடு (தங்க)

## உடனெடுப்பு

மங்கலப் பொருள்பல மலிந்தநன் னாடு
வாங்காமலே வழங்கி வருகின்ற நாடு (தங்க)

## அமைதி

அந்தியிலே தென்றல் அசைந்திடும் நாடு
அறிஞரும் கலைஞரும் நிறைந்துள்ள நாடு
முந்தும் அறிவினில் மூத்தநன் னாடு
முன்வைத்த காலைப் பின்வைக்கா நாடு ! (தங்க)

# மழையிருந்தால்

## எடுப்பு


மழை இருந்தால் பனி இருப்பதில்லை-கனிகள்
மரத்தில் இருந்தால் மலர்சிரிப்பதில்லை (மழை)

## உடனெடுப்பு

பிழை இருந்தால் எதற்கும் பெருமையில்லை-சாதி
பேதம் நிறைந்த நாட்டில் அமைதியில்லை (மழை)

## அமைதி

சேரனைப் போலொரு வீரன் இருந்ததில்லை
செந்தமிழ் போலமுதும் தேனும் இனிப்பதில்லை
கீரனைப் போலே எதிர்த்தவர் யாருமில்லை
கீர்த்தி பெறாதவர்க்குக் கீழ்மேல் திசைகளில்லை! (மழை)



உள்ளே. . .


என் குரல்

தலைமை தாங்கும் தமிழ்

நெஞ்சில் நிறுத்துங்கள்

வெற்றிக்கு வழி

தமிழில் பெயரிடுங்கள்

# என் குரல்

என்மொழி தமிழே அந்த
    எழில்மொழி அறிவின் ஆக்கம்
என்மொழி தமிழே அந்த
    எழில்மொழி தேனின் தேக்கம்
என்மொழி தமிழே அந்த
    எழில்மொழி எனக்குத் தாய்ப்பால்
என்மொழி தமிழே அந்த
    எழில்மொழி புகழின் போர்வை!

என்மனம் என்றன் எண்ணம்
    என்செயல் தமிழே என்பேன்
என்குரல் என்றன் பாடல்
    என்சுவை அதுவே என்பேன்
என்கதை என்றன் காதல்
    என்புகழ் அதனால் என்பேன்
என்னுடல் என்றன் செல்வம்
    என்னுயிர் அதற்கே என்பேன் !

# தலைமை தாங்கும் தமிழ்

படுத்திருக்கும் வினாக்குறிபோல் மீசை வைத்த
பாண்டியர்கள் வளர்த்தமொழி; கடலின் நீரை
உடுத்திருக்கும் உலகத்தில் தலைமை தாங்கும்
உயர்ந்தமொழி; வெளிநாட்டார் மொழிக்குச் சொற்கள்
கொடுத்திருக்கும் வள்ளல்மொழி; வன்மை மென்மை
கொண்டமொழி ; குமரிமொழி ; காப்பி யங்கள்
வடித்திருக்கும் ஆதிமொழி ; அறிவில் மூத்த
வள்ளுவனை ஈன்றமொழி தமிழே யாகும்.

தேன்பிறந்த பின்மலர்கள் பிறப்ப தில்லை
திசைபிறந்த பின்வானம் பிறப்ப தில்லை
மீன்பிறந்த பின்குளங்கள் பிறப்ப தில்லை
வேல்பிறந்த பின்இரும்பு பிறப்ப தில்லை
தேன்சுரக்கும் தமிழ்பிறக்கு முன்பே மற்ற
தேசத்தார் பேசுமொழி பிறக்க வில்லை
வான்பிறக்கும் முன்காற்றுப் பிறந்த துண்டோ?
வையத்தில் தமிழ்போலும் சிறந்த துண்டோ?

# நெஞ்சில் நிறுத்துங்கள்

புத்தி என்பது நித்திரை வடமொழி
அறிவென் பதுவே அமுதத் தமிழ்மொழி
உத்தர வென்பதோ ஒட்டாதார் உதட்டொலி
கட்டளை என்பதே கனிந்த தமிழொலி
சித்திரம் என்பது தீப்பொறி வடமொழி
ஓவியம் என்பதே ஓங்குபுகழ்த் தமிழ்மொழி
நித்திரை என்பது நெருப்பு வடமொழி
உறக்கம் என்பதே உலவும் தமிழ்மொழி

தருக்கம் என்பது தமிழன் றாதலின்
ஆருயிர் அன்பனே அளவை நூல் என்றுசொல்
வருக்கம் என்பது வடவர் வாய்ச்சொல்
வகுப்பென் பதுவே மதுரத் தமிழ்ச் சொல்
பருவதம் என்பது பைந்தமி ழன்று
மலையென் பதுவே மாம்பழத் தமிழ்சொல்
இரசம் என்றுநீ ஏனெழுத வேண்டும்
சாறெனும் தேன்சொல் தமிழி லிருக்கையில்?

நிபுணன் எனுஞ்சொல் நிச்சயம் வடசொல்
நண்பனே வல்லவன் என்பதே நம்சொல்
சபதம் என்பது வடமொழிச் சத்தம்
வஞ்சினம் என்பதே மணித்தமிழ் ஓசை
அபிமானம் என்பதோ ஆரிய வார்த்தை
பற்றென் பதுவே பால்வாய்ப் பசுந்தமிழ்
உபநதி என்பதோ ஓடோடி வந்த சொல்
கிளையா றென்பதே இளமைத் தமிழ்ச்சொல் !

சூலம் என்பது சுநீதியின் தாய்மொழி
வேலென் பதுவே வெண்குத்தி யார்மொழி
பாலகன் என்பது பாஞ்சாலி வார்த்தை
குழந்தை என்பதே குமணன் மனைவிசொல்
கேலி என்பது கிரீடியின் மனைவிசொல்
பகடி என்பதே பரணர் மனைவிசொல்
ஆலயம் என்பதே அநமித்ரன் மனைவிசொல்
கோயில் என்பதே குளம்பனார் மனைவிசொல்.

சகசம் என்பது தசரதன் தாய்மொழி
இயற்கை யென்பதே இளம்பெரு வழுதிசொல்
விகற்பம் என்பது விதுரன் வார்த்தை
வேறுபா டென்பதே வெண்பூகன் வாய்ச்சொல்
தகநம் என்பது தருமன் தாய்மொழி
எரித்தல் என்பதே இளம்போதி யார்மொழி
அகிலம் என்பதோ அருச்சுநன் வார்த்தை
உலகம் என்பதே உறையனார் ஓசையே!

# வெற்றிக்கு வழி

சரித்திரம் ஒவ்வோர் நாட்டின்
தழும்பாகும் ; நாட்டை வாட்டும்
தரித்திரம் பொருளா தாரத்
தடுமாற்ற மாகும் ; கல்வி
விருத்தியே நெஞ்சி ருட்டை
விரட்டிடும் விளக்காம்; நூலின்
கருத்தினை அறியான், நூலின்
கனத்தையே அறிந்தோன் ஆவான் !

கற்பனை பெருக வேண்டின்
கல்வியைப் பெருக்க வேண்டும்.
வெற்றியைப் பெருக்க வேண்டின்
மேன்மேலும் முயல வேண்டும்.
அற்பமாய் முயன்றார் யாரும்
அறிவினாற் பழுத்தா ரில்லை.
கற்பூரத் தீயி னாலே
கற்குளை வெந்தா போகும்?

புதுமையே அறிவின் ஆக்கம்
புதுமையே புகழுண் டாக்கும்
புதுமையே தலைமை தாங்கும்
புதுமையே நிலைத்து நிற்கும்
புதுமையே இன்றிப் பாடல்
புனைந்திடல்; உயிரில் லாத
புதுமையின் மீது சுற்றும்
பட்டுடை போன்ற தாகும்!


# தமிழில் பெயரிடுங்கள்

வயலிடுதல் கதிராகும்; கவிந்தி ருக்கும்
    வானிடுதல் எழுநிறங் கொண்ட வில்லாம்
இயலிடுதல் பெரும்புலவர் செயற்கை யாகும்
    ஏரிடுதல் வயலுழவர் கடமை யாகும்
புயலிடுதல் பருவத்தின் வேலை யாகும்
    புகழிடுதல் மேலோரின் நிகழ்ச்சி யாகும்
மயிலிடுதல் ஒன்றுண்டாம் அதுதான் முட்டை
    மாந்தரிடல் முதன்முதலில் பெயரே யாகும் !

தாய்மொழியை வாய்மொழியால் அறியக் கூடும்
    தமிழ்ப்பற்றை அவர்பெயரால் அறியக் கூடும்
தாய்மொழியை ஒதுக்கிவைத்துப் பிறநாட் டாரின்
    தழுவல்மொழிப் பெயரிட்டுக் கொளநி னைத்தல்
தாய்ப்பாலை வேண்டாது நாய்ப்பால் உண்ணச்
    சம்மதிக்கும் தன்மையது போன்ற தாகும்
வாய்மணக்கும் தமிழில்பெய ரிடுவ தாலே
    வாய்வெந்து போய்விடுமோ? இட்டால் என்ன?

குன்றனென்றும் காடனென்றும் மருத னென்றும்
குமணனென்றும் பெயரிடலாம் ஆண்கட் கெல்லாம்
அன்னமென்றும் அன்றிலென்றும் அல்லி என்றும்
அருவியென்றும் பெயரிடலாம் பெண்டிர்க்கெல்லாம்
மின்னெனவே பெண்ணுருவம் மின்னு மாயின்
மின்னியென்றும் பெயரிடலாம்; தமிழ ரெல்லாம்
என்றுமுள செந்தமிழில் பெய ரிடாமல்
இரவல்மொழிப் பெயரிடுதல் அடிமைத் தன்மை!

இடுகுறியால் காரணத்தால் அந்த நாளில்
இருந்தவர்கள் பெயரிட்டார். இந்த நாளில்
தொடுகுறிசாத் திரம்பார்த்தே பெயரை வைக்கத்
தொடங்குகின்றார். தோழர்களே இவ்வா றான
நடைமுறையால் நல்லதமிழ் வளர்வ தற்கு
ஞாயமுண்டா கூறுங்கள்? செங்கண் வீரப்
படைமுறையின் வழிவந்த தமிழநாட் டீரே
பழுத்ததமிழ்ப் பெயரிடுவீர் குழந்தை கட்கு.


தேன் துளிகள்

உள்ளே. . .


தாய் நாடே

முதல்மொழி

தரணி தூற்றும்

இப்படிக்கு

எச்சில்

மேலாடை

கல்வி செழித்தால்

இன்பம்

# தாய் நாடே

அறம்பொருள் கண்ட நாடே
    ஆன்றோரை ஈன்ற நாடே
மறைந்திடாப் பெருமை பெற்ற
    மணித்திரு நாடே! வண்ணக்
குறிஞ்சியாய் முல்லை யாகிக்
    குளிர்கடல் நெய்த லாகிச்
சிறந்துள என்தாய் நாடே!
    செந்தமிழ்த் தென்றல் நாடே !

ஊனாகி அந்த ஊனில்
    உயிரேறி வடிவம் பெற்று
நானாகித் தமிழ னாகி
    நடமாடும் என்னைத் தாங்கும்
தேனான நாடே! இன்பத்
    திருக்குறள் நாடே! நீல
வானேந்தும் நாடே உன்றன்
    மடியன்றோ எனக்குத் தொட்டில்?

ஓரடி யூன்றி மற்றும்
ஓரடி தூக்கி வைத்தே
ஈரடி யிட்டு மேலும்
எடுத்தடி வைத்துச் செல்ல
ஊரிடங் கொடுத்த தேனும்
உண்மையில் எங்கள் ஊரும்
சேரியும் நகரும் நீண்ட
தெருக்களும் நீயே யன்றோ?

எனக்காகப் பெண்டு பிள்ளை
எனக்காக வீடு வாசல்
எனக்காக உற்றார் மற்றார்
எனினுங்கேள் என்தாய் நாடே!
உனக்கேதும் தீங்கு நேரின்
உன்துயர் துடைக்க வேண்டித்
தனிக்காதல் மனைவி மக்கள்
சகலமும் துறப்பேன் கண்டாய்!

தாய்நாடே உன்னை வேண்டித்
தவிட்டையும் தின்பேன். இன்பத்
தாய்நாடே உன்னை மீட்கத்
தணல்மீதும் நிற்பேன். அன்புத்
தாய்நாடே மாற்றார் நஞ்சைத்
தரினும்யான் ஏற்பேன். வீரத்
தாய்நாடே உன்னைக் காக்கச்
சாகவும் அஞ்ச மாட்டேன்!

# முதல் மொழி

ஆய்த வெழுத்தின் அமைப்பே அடுப்பாம்
அடுப்பின் மீதிலோர் அழகிய பானை
பானையின் மீது பழையதோர் அகப்பை
அகப்பையின் மீதோ அழகியின் வலக்கரம்
வலக்கரம் தன்னில் வண்ண வளையல்
வலையலின் மீது மங்கையின் மலர்விழி
அவள்விழி மீதினில் அன்னவன் விழிகள்
விழிகளே காதலின் வெற்றிக்கு முதல்மொழி !

மூத்த உலகின் முதல்மொழி தமிழே!
பூத்தசோலைப் பூங்குயில் போன்றவள்
சாயல், குறுந்தொகைத் தமிழே
நாயகன் வாய்மொழி நற்றிணைத் தமிழே!

# தரணி தூற்றும்

நாவல னாகும் நோக்கம்
      நல்லதே; செய்யுள் செய்யும்
பாவல னாகும் நோக்கம்
      பழுதன்று; பாரி போலும்
ஈவதற் காகச் செல்வம்
      ஈட்டுதல் நன்றே; தம்பி
கோவல னாகும் நோக்கம்
      கூடாது! தரணி தூற்றும் !

மையூட்டல் சிறந்த செய்கை
      மங்கையர் வெண்சோ ற்றுக்கு
நெய்யூட்டல் நன்றோ; ஒன்றை
      நினைவூட்டல் மிகவும் நன்றே
பொய்யூட்டும் தன்மை நெஞ்சில்
      புகையூட்டும் ! லஞ்ச மென்னும்
கையூட்டு வளர்ந்தால் நாடு
      கட்டாயம் கெட்டுப் போகும் !

# இப்படிக்கு

சந்தனப் பொதிகை என்றன்
　　தாய்வீடு; தனித்தி யங்கும்
செந்தமிழ் போன்றே யானும்
　　சிறந்தவள்; அந்தி மாலை
வந்தபின் வருவேன் சோலை
　　வரவேற்கும்! இப்ப டிக்கே
அந்தியில் வந்து லாவும்
　　'அசைவளி' என்னும் தென்றல்.

வள்ளுவர் பரணர் ஔவை
　　மற்றவர்க் குதவி செய்தேன்;
அள்ளினும் குறையேன்; கள்வர்
　　அதட்டினும் அஞ்ச மாட்டேன்;
பள்ளியில் இருப்பேன் வந்தால்
　　பார்க்கலாம் என்னை; ஏற்றுக்
கொள்ளுவீர் இப்ப டிக்குக்
　　குவலயம் போற்றும் கல்வி.

படைபெற்ற வேந்த னோடு
பழகினேன்; கொல்லன் வீட்டில்
அடிபட்டேன் குருதி யாற்றில்
அடிக்கடி குளித்து வந்தேன்;
நடைபெற்ற வெண்ணிப் போரில்
நான்பங்கு பெற்ற தாலே
ஒடிபட்டேன்! இப்ப டிக்கே
ஓய்ந்துபோ யிருக்கும் போர்வாள்.

# எச்சில்

குழந்தையோ பெற்றோர் எச்சில்
கூடையோ குறத்தி எச்சில்
பழங்களோ பறவை எச்சில்
பால்தயிர் இடைச்சி எச்சில்
மழையெலாம் முகிலின் எச்சில்
மதுவெலாம் வண்டின் எச்சில்
எழில்மிகு புடைவை வேட்டி
எல்லாமே நெய்வோன் எச்சில் !

குளத்துநீர் மீனின் எச்சில்
குளிரிசூழ் சத்து முத்தம்
விளைத்திடும் போதில் எச்சில்
விதையெலாம் நம்வாய் எச்சில்
சுளைப்பலாப் பழமும் சோறும்
சுவைத்திடும் பொழுதில் எச்சில்
அளந்தநூல் நினைவின் எச்சில்
அனைத்துமே எச்சில் எச்சில்!

# மேலாடை

விண்ணுக்கு மேலாடை வெயில்விழுங்கும் மேகம்
விணைக்கு மேலாடை நரம்புகளின் கூட்டம்
மண்ணுக்கு மேலாடை மயில்நீல இருட்டு
மனத்திற்கு மேலாடை வளர்கின்ற நினைவு
கண்ணுக்கு மேலாடை காக்கின்ற இமைகள்
கனவுக்கு மேலாடை தேங்குகின்ற தூக்கம்
எண்ணுக்கு மேலாடை எதுவென்றால் எழுத்தாம்
எழுத்துக்கு மேலாடை எண்ணங்கள் ஒன்றே.

நிலவுக்கு மேலாடை நகராத மலைகள்
நீருக்கு மேலாடை படர்கின்ற பாசி
மலருக்கு மேலாடை கிளிப்பச்சை இலைகள்
மனைவிக்கு மேலாடை அவள்கணவன் ஆவான்
பலருக்கு மேலாடை கொதிக்கின்ற கோபம்
பத்துக்கு மேலாடை பதினொன்றே யாகும்
சிலருக்கு மேலாடை வற்றாத வீரம்
திறமைக்கு மேலாடை சிறந்தபுகழ் ஒன்றே!

# கல்வி செழித்தால்

தாமரைப் பூவில் மதுவதிகம்
தனித்தமிழ்ச் சொல்லில் சுவையதிகம்
பாமரர் நெஞ்சில் இருளதிகம்
படித்தவர் நெஞ்சில் தெளிவதிகம்.

கல்வி செழித்தால் கவிதைவரும்
கற்பன கற்றால் திறமை வரும்
செல்வம் திரண்டால் செழிப்புவரும்
திறமை மிகுந்தால் புகழ்வளரும்.

உலகம் நினைவின் தொடராகும்
உயிர்கள் கருவியின் கதையாகும்
விலகும் நிலையே பிரிவாகும்
விரும்பும் பொருளே சுவையாகும்.

# இன்பம்

பழந்தமிழ் கற்றல்இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ப தின்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்.

கற்றவர் முன்தாம் கற்ற
கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்.


கலித்தொகை
சங்க இலக்கியம்
தொல்காப்பியம்
ஆராய்ச்சி

உள்ளே. . .

தளரா வளர்தெங்கு

திருவில்

நிலாமுகம்

ஐம்பால்

ஆராய்ச்சி மணி

# தளரா வளர்தெங்கு

செடியும் கொடியும் செந்நெற் கதிரும்
சுவைக்கதிர் வரகும் கரும்பும் சோளமும்
தலையினால் காய்களைத் தருகின்ற தென்னையும்
புறக்காழ் கொண்ட புல்லின மாகும்.

ஆயினும் தென்னைக் கமைந்தநல் லுறுதி
கொம்பைத் தழுவும் கொடிகளுக் கில்லை.
வண்ணக் கொடிகள் வளரும் தளரும்
தடித்த தென்னையோ தளர்வ தில்லை.

அதனை ஆராய்ந் தறிந்தநம் ஔவையார்
தளராது நீண்டு வளர்ந்த தென்னையைத்
தளரா வளர்ந்தெங் கென்று பாடினார்.

தருநூல் நுட்பம் தெரிந்தா லன்றோ
இவ்வாறு பாடுதற் கியலும் ! எதையும்
செவ்வையாயச் செய்திடத் திறமை வேண்டுமே.

# திருவில்

குளிர்முகில் இழுத்திடும் குறுக்குக் கோடுகள்
வானவில் ஆகும். அந்த வானில்
நீர்முகில் அமைந்த நிறங்களின் நெருக்கம்.
அந்த நெருக்கம் அழகின் விளக்கம்.
கொடுமை செய்து கொல்லாத வில்லது.

சேரனும் சோழனும் தென்திசை வேந்தனும்
வல்வில் ஓரியும் வரலாற்று வீரரும்
ஏந்திய வில்லோ எதிர்த்தோர் உயிரைக்
குடித்து முடித்தவில்! கொடிய கொலைவில்!

உருவத்தில் இரண்டும் ஒன்றுபோ லிருப்பினும்
செய்கையில் மன்னன்வில் தீமை புரியும்
வான வில்லோ வம்பு செய்யாது.

மாந்தர் எடுத்து வளைந்த வில்லின்
செயலை ஆராய்ந்து தெளிந்தோர்; அவ்வில்
கொடுமை செய்ததால் கொலைவில் என்றனர்.

வருத்தம் தராத வில்லினைத்
திருவில் என்று சிறப்பொடு கூறினர்.

ஆராய்ந்து பார்த்தால் அத்தனை சொற்களின்
நல்ல காரணம் நமக்குப் புரியும்
மெல்லிய தமிழின் மேன்மையும் விளங்குமே.

# நிலாமுகம்

முதன்மை பெற்றதும் முன்புறம் உள்ளதும்
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தையும்
அளக்க வல்லதும் அழகிய முகமாம்.

ஐந்துமலர் விளையும் அமுத நிலமே
முத்தம் வழங்கும் முத்திரை மணிமுகம்.

முகத்திற்கு முகவுரை முதிரா நெற்றியே.
தலைக்கு முகவுரை தாமரை முகமே.

நிறுத்தி அளத்தல் நீட்டி அளத்தல்
தெறிந்தே அளத்தல் தேங்கமுகந் தளத்தல்
சார்த்தி யளத்தல் பெய்தே அளத்தல்
எண்ணி எண்ணி அளத்தல் என்பதாய்
அளவுகள் ஏழெனு ஆதிநூல் உரைக்கும்
கூற்றுப் படிக்குக் குளிர்ந்த மலர்முகம்
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தையும்
ஐம்பொறி கொண்டும் அளந்து காட்டலால்

அழகிய முகமும் அளவு கருவியே
ஆகும் என்பதை ஆராய்ந் தறிந்து
முகந்தே அளக்கும் முகமெனும் உறுப்பை
முகமெனக் கூறினர் முன்னாள் அறிஞர்.

ஆகவே முகமெனும் அழகிய சிறுசொல்
வடமொழி யன்று; வாடாத தமிழே.
வானத்து மதியோ வட்ட வடிவம்
அந்த வட்டமோ அடிக்கடி தேயும்.

மங்கையர் முகமோ மலரைப் போன்றது
மாம்பழப் பெண்களின் மதுச்சுவை முகமோ
தேதி யறிந்து தேய்வதோ வளர்வதோ
இல்லை என்பதை எல்லோரும் அறிவர்.

மங்கையர் முகத்தில் மணிவிழி உண்டு
முத்துப் பற்களும் மூக்கும் நாக்கும்
பாவையர் முகத்தில் பார்க்கக் கூடும்!

வெண்ணிலா முகத்தில் விழிகள் உண்டா?
கனியிதழ் உண்டா? காதுகள் உண்டா?
இல்லவே இல்லை என்பதை அறிவோம்.

இவ்வா றிருந்தும் இன்ப நிலாவை
ஒருத்தியின் முகத்திற் கொப்பிடு வானேன்?
காரணம் உண்டு கவனம் செலுத்துக!

நீலவான் வெளியில் நீந்தும் நிலவினில்
வட்டமும் குளிர்ச்சியும் வனப்பும் இருத்தல்போல்
மதுரச் செங்கனி மங்கையர் முகத்திலும்
வட்டம் சுளியாமை வனப்பு முதலிய
தன்மைகள் ஒத்தே சரியாய் இரப்பதால்
முகத்தை வெண்ணிலா முகமெனக் கூறினர்.

வினைப்பயன் மெய்யுரு என்ற நான்கின்
வகையை நுணுக்கமாய் ஆராய்ந்து வந்தால்
புதிது புதிதாய் உவமைகள்
உதிக்கும் இதனை உணர்ந்துகொள் வீரே !

# ஐம்பால்

கண்கவர் கூந்தல் கறுத்தி ருந்தல்
நெளிவொடு கருங்குழல் நீண்டி ருத்தல்
அழகொடு கூந்தல் அடர்ந்தி ருத்தல்
மென்மை கொண்டு மெத்தென் றிருத்தல்
வழிந்தோடும் வெள்ளம் வற்றி விட்டதோர்
ஆற்றின் இளமணல் அமைப்பே போலும்
படிப்படி யாகப் படிந்திருந்த லாகிய
ஐவகைப் பண்புகள் அமைந்த காரணத்தால்
அழகிய கூந்தலை ஐம்பால் என்றனர்.

கொண்டை, பனிச்சை குழல்முடி சுருளெனக்
கூறும்ஐ வகையாய்க் கூந்தலை முடித்தலால்
அழகிய கூந்தலை ஐம்பால் என்றே
திரண்டநூ லறிஞர் தெரிவித் தாரெனல்
இருண்ட கூந்தலின் இயல்பறியா தாரே !

# ஆராய்ச்சி மணி

தேரில்நான் இருந்தாலும்; குயில்கள் கூவும்
சிங்காரச் சோலைதனில் உலவி னாலும்
போரில்லா இன்பநிலை காணும் அந்தப்
புரத்தில்நான் இருந்தாலும்; நாட்டு மக்கள்
நேரில்வந் தென்னிடத்தில் தங்கள் தங்கள்
நிலைமைதனைக் கூறிடலாம் ! நீதி என்னும்
வேரில்நீர் ஊற்றுவதே எனக்கு வேலை !
வேந்தனுக்குக் குடிமக்கள் குரலே வேதம் !

பொதுமக்கள் நலமெனக்குப் பெரிதே யன்றிப்
புகழெனக்குப் பெரிதன்று; நாட்டுக். காக
நிதிவைத்தல் பெரிதன்று; தடுமா றாத
நீதிவைத்துக் காப்பதுவே கடின மாகும்.
விதிசெய்ய வந்தேன்யான்; எனினும் தூக்கி
வினைசெய்ய நன்மைசெய்யத் தவற மாட்டேன்.
மதிவைத்த வானத்தின் கீழி ருக்கும்
மக்களையென் கண்ணுக்குள் வைத்துக் காப்பேன் !

-அசோகன்
(ஆறாவது கல்வெட்டு)



இரண்டு காரணங்களால் சுரதாவின் எழுத்துக்குச் சுரதா எழுத்தே நிகர்.

அவர் பிறர் எழுதியதிலிருந்து திருடுவதில்லை, கருத்தையோ தொடரையோ! தானே தோன்றிய சொற்றொடர் ஒவ்வொன்றும் இனிக்கும் கவிதை துணிக்கை!

-பாவேந்தர்